# இலங்கையின் காதி நீதிமன்ற முறைமையும் முஸ்லிம் பெண்கள் மீதான அதன் தாக்கமும்

Ex-Libris S.H.M. Jameel

Donated to the Library

South Eastern University of Sri Lanka

MAIN LIBRARY, SEUSL

SJ008695

# இலங்கையின் காதி நீதிமன்ற முறைமையும் முஸ்லிம் பெண்கள் மீதான அதன் தாக்கமும்

எழுதியவர் :

**சலீம் மர்சூப்**

LLB (Ceylon) LLM., (Colombo) LLM., (San Diego)

ஜனாதிபதி சட்டத்தரணி மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விரிவுரையாளர்,

பரீட்சகர் சட்டக் கல்லூரி, இலங்கை

(தற்போதைய உயர் நீதிமன்ற நீதியரசர்)

297.14
MAR

> Islamic Religius Laws

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி/

முஸ்லிம் சட்டத்தின் கீழ் வாழும் பெண்கள்

2001

008695

**இலங்கையின் காதி நீதிமன்ற முறைமையும் முஸ்லிம் பெண்கள் மீதான அதன் தாக்கமும்**


ஆசிரியர் : நீதியரசர் சலீம் மர்சூப்

தமிழாக்கம் : ஸபானா குல்பேகம்

பதிப்பு : எஸ்.எச்.எம்.ஜெமில்

பதிப்புரிமை : முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி

ISBN : 978 - 955 - 625 - 032 - 9

வெளியீடு : முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி,
73/19E, கிருலப்பனை அவென்யு,
கிருலப்பனை,
கொழும்பு - 05.

முதற்பதிப்பு : 2008

அச்சுப்பதிப்பு : கருணாரத்ன அன்ட் சன்ஸ் லிமிட்டெட்,
இல. 67, யூ. டீ. ஏ. இன்டஸ்ரியல் எஸ்டேட்,
கட்டுவான வீதி,
ஹோமாகம.



LIBRARY
25 NOV 2011
*SEUSL*



முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியினால் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுக்குப் பூரண ஆதரவு வழங்கிய, நெதர்லாந்து HIVOS நிறுவனத்திற்கு நாம் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# உள்ளடக்கம்

DONATED by S.H.M. JAMEEL


பிரதம நீதியரசரின் செய்தி vii

முன்னுரை ix

முகவுரை xi

அறிமுகவுரை xiv

1. **காதிநீதிமன்ற முறைமை** 1

   சீர்திருத்தத்திற்கான கோரிக்கைகள் 1

   கலாநிதி சஹாப்தின் குழு 3

2. **காதிநீதவான்களின் நியாயாதிக்கம்** 6

   திருமணத்திற்கான அனுமதி வழங்குதல் 6

   விவாகரத்திற்கும், வெறிதாக்கத்திற்குமான நியாயாதிக்கம் 6

   திருமண விடயங்கள் தொடர்பிலான நியாயாதிக்கம் 7

   தனித்துவமான நியாயாதிக்கம் 9

3. **ஏற்புடைத்தான சட்டம்** 10

   "மதப்பிரிவு" என்ற பதத்திற்கான இலங்கை நீதிமன்றங்களின் பொருள் கோடல் 11

   மத்ஹபின் தத்துவம் 13

   பிரயோகப்படுத்தலில் ஏற்படும் பிரச்சினைகள் 15

4. **நிலையான சட்டம் : சில அடிப்படைப் பிரச்சினைகள்** 17

   பால்ய திருமணம் 17

   பெண்ணின் சம்மதமும், கையெழுத்தும் 23

   பல்தார மணம் 26

   மத மாற்றம் 35

   திருமணத்துடன் தொடர்புடைய நிபந்தனைகள் 39

   விவாகரத்துச் சட்டத்தின் சமனற்ற தன்மை 43

5. **சட்டநடைமுறை இன்னும் சில பிரச்சினைகள்** 45

   தலாக் நடைமுறை 45

   மனைவியினால் கோரப்படும் விவாகரத்து நடைமுறை 47

| | | |
|---|---|---|
| | பிரிவு 47இன் விசாரணைகளுக்கான நடைமுறை | 48 |
| | நடைமுறையை ஒருங்குபடுத்தல் | 49 |
| **6.** | **வலியுறுத்தற் கட்டளைகளும், மேன்முறையீட்டு நடைமுறைகளும்** | **52** |
| | மஹர், கைக்கூலி என்பனவற்றை மீளப் பெறுதல் | 52 |
| | பராமரிப்பையும், பிரசவச் செலவையும் மீளப்பெறுதல் | 53 |
| | மேன்முறையீடுகள் | 54 |
| | மீளாய்வு | 55 |
| **7.** | **பெண்களும், காதிநீதிமன்ற முறைமைகளும்** | **58** |
| | துன்பத்தில் உள்ள பெண்கள் | 58 |
| | காதி நீதவான்களிடமிருந்து உதவிகள் | 59 |
| | பெண் காதி நீதவான்கள் | 61 |
| **8.** | **முடிவுரை** | **65** |
| | **பின்னுரை : பாத்திமாவின் விதி** | **69** |
| | **Selected Bibliography** | 71 |
| | **இணைப்பு-1** | **73** |

பிரதம நீதியரசர் அலுவலகம்
உயர் நீதிமன்றம்
கொழும்பு - 12

## பிரதம நீதியரசரின் செய்தி

முஸ்லிம் பெண்களின் கோணத்தில், இலங்கையின் காதிநீதிமன்ற முறைமை என்ற, ஜனாதிபதி சட்டத்தரணி ஜனாப் சலீம் மர்சூப் அவர்களின் அறிவுபூர்வமான ஆய்வானது பாராட்டப்பட வேண்டியதாகும். காதி நீதிமன்றங்களும், காதிகள் சபையும் (Board of Quazis), இலங்கையின் நீதித்துறை அமைப்புக்குட்பட்டதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுவோரின் திருமணம் தொடர்பிலான பிணக்குகளில் இவையிரண்டும் தனிப்பட்ட நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ளன.

காதி நீதிமன்றங்களும், காதிகள் சபையும், புனித அல்குர்ஆன், ஏனைய இஸ்லாமிய மூலாதாரங்களுக்கேற்றவகையில் முஸ்லிம் சட்டத்தைப் பிரயோகப் படுத்தி இப்பிணக்குகளைத் தீர்க்கும் கடப்பாடுடையவை. முஸ்லிம் ஆட்சியாளர் ஒருவரினால், நீதிபதியொருவருக்குக் கூறப்பட்ட பணிப்பொன்றை இவ்விடத்தில் ஞாபகப்படுத்துவது மிகவும் பொருத்தமானதாகும். இது " The Islamic Criminal Justice" என்ற நூலில் எம். சி. பஸியோனி அவர்களினால் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. (New York Oceana Publications 1982 பக்கங்கள் 31-32)

> "உம்மிடம் ஒரு வழக்கு முன்வைக்கப்படும் போது, புனித அல்குர்ஆன், சுன்னா என்பனவற்றில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை உபயோகித்து அவற்றிற்கு ஏற்புடைத்தான விதிகளிலிருந்து உம்மால் தெளிவான விடை காணப்பட முடியாதவிடத்து அல்குர்ஆன், சுன்னா என்பன்வற்றில் கூறப்பட்டுள்ளவற்றை ஆழ்ந்து சிந்தித்து, அறிவு நுட்பமாக அவ்விடயத்தைப் படித்து, இது தொடர்பான அறிஞர்களின் கூற்றுக்களையும் ஆராய்ந்து அதன் பிரகாரம் தீர்ப்பளிக்க வேண்டும். கோபம், கவலை, பகுத்தறிவின்மை, வெறுப்பு என்பன அற்ற தூய சிந்தனை தீர்ப்பு வழங்கும் போது இருக்க வேண்டும். நண்பர்களாக இருந்தாலும் பக்கச்சார்பு இருக்கக் கூடாது."

காதிநீதவானொருவர் 'ரிஆ சட்டங்களை நன்கு கற்றறிந்திருப்பதோடு பக்கச்சார்பற்றவராகவும் நீதியானவராகவும் இருத்தல் வேண்டும். பக்கச்சார்பற்ற தன்மை, நீதியை நிலைநாட்டுதல் என்பன பற்றி அல்குர்ஆனின் சூறா அந்நிஸா IV : 135 தெளிவுபடுத்துகின்றது.

> "முஃமின்களே'! நீதியில் நீங்கள் நிலைத்திருப்பவர்களாக, அல்லாஹ்விற்காக (உண்மையைக் கொண்டு) சாட்சி கூறுபவர்களாக இருங்கள். (அச்சாட்சி) உங்களுக்கோ, அல்லது (உங்களின்) பெற்றோருக்கோ,

இன்னும் (உங்களின்) உறவினர்களுக்கோ பாதகமாக இருந்தாலும் சரி. (நீங்கள் எவருக்கு எதிராகக் சாட்சி கூறுகிறீர்களோ) அவர் பணக்காரராக இருந்தாலும். அல்லது ஏழையாக இருந்தாலும். (சரியே); ஏனெனில் அல்லாஹ் அவ்விருவருக்கும் (நன்மையை நாடுவதில் உங்களைவிட) மிக மேலானவன்".

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்படும் காதிநீதவான்களினதும், காதிகள் சபை உறுப்பினர்களினதும் நியமனங்கள் சுதந்திரமானவை. காதிநீதவான்கள் என்போர் நீதிபதிகள் மாத்திரமல்ல, அவர்கள் மத்தியஸ்தர்களுமாவார்கள். முரண்பாட்டுடன், தம் முன்னால் வரும் தம்பதிகளைச் சமரசப்படுத்த அவர்களால் இயலுமான அத்தனை முயற்சிகளையும் காதிநீதவான்கள் எடுக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். பெருமானார் (ஸல்) அவர்களின் இறுதிப் பிரசங்கத்தை அவர்களனைவரும் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

"மக்களே! உங்களுக்கு உங்கள் மனைவியரின் மீது உரிமைகள் இருக்கின்றன, அதேவேளை உங்கள் மனைவியருக்கு உங்களின் மீது உரிமைகள் இருக்கின்றன. அன்புடனும் நேசத்துடனும் உங்கள் மனைவியரை நடத்துங்கள். அல்லாஹ்வின் அமானிதமாகவே அவர்கள் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்".

காதிநீதவான்களினதும், காதிகள் சபை உறுப்பினர்களினதும் அறிவை விருத்தி செய்ய வேண்டியதன் அவசியம் பற்றி நான் நன்கு உணர்ந்துள்ளேன். இந்நூல் அவர்களுக்குப் பரந்தளவிலான தகவல்களை வழங்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இந்நீதித்துறை அலுவலர்களுக்கு, சமரசம் தொடர்பிலான நுட்பங்கள், மற்றும் அவர்களது சேவையைச் செவ்வனே செய்வதற்கு அவசியமான ஏனைய திறமைகள் தொடர்பில் பயிற்சியளிக்கப்படுவதும் அவசியம் என்பது எனக்குத் தெரிந்த விடயம். இந்த நோக்கத்தின் அடிப்படையில் நீதிச்சேவை ஆணைக்குழுவுடன் இணைந்து, நீதியமைச்சு, காதிநீதவான்களுக்கான பயிற்சி நெறித்திட்டங்களை ஒழுங்கு செய்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இது தொடர்பில் ஜனாப். மர்சூப் அவர்களினால் ஆற்றப்படும் பங்களிப்பை நான் வரவேற்கின்றேன்.

காதி நீதிமன்ற முறைமை தொடர்பான, தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்திலுள்ள குறைபாடுகள் தொடர்பிலும், அதனால் முஸ்லிம் பெண்களினால் எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள் பற்றியும் நான் நன்கு அறிவேன். ஜனாப் மர்சூப் அவர்களின், இந்த ஆய்வு இத்தகைய பிரச்சினைகளைத் தீர்த்து, தேவையான திருத்தங்களைச் சட்டத்தில் கொண்டு வருவதற்குப் பெரிதும் உதவும் என நம்புகின்றேன்.

**சரத். என். சில்வா**
பிரதம நீதியரசர்

பிரதம நீதியரசர் அலுவலகம்
உயர் நீதிமன்றத் தொகுதி, கொழும்பு – 12
28 நவம்பர் 2000

# முன்னுரை

*அஸ்ஸலாமு அலைக்கும்.*

'இலங்கையின் காதி நீதிமன்ற முறைமையும், முஸ்லிம் பெண்கள் மீதான அதன் தாக்கமும்' என்ற பெறுமதிமிக்க இந்நூலுக்கு முன்னுரை வழங்கும்படி இந்நூலின் ஆசிரியர் என்னை அன்புடன் வேண்டிக்கொண்டார். இலங்கையில் நடைமுறையிலுள்ள காதிநீதிமன்ற முறைமையின் சட்ட, நிர்வாகப் பின்னணிகளை பெண்களின் கோணத்தினூடாக ஆராய்வதே இந்நூலின் முக்கிய நோக்கமாக உள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில், பெண்களின் கோணத்திலிருந்து ஒரு நீதித்துறை நிறுவனத்தின் விளைவுகளை மதிப்பீடு செய்யும் முதல் முயற்சியாகவே இவ்வேலைத்திட்டம் அமையுமென்று நான் நம்புகின்றேன்.

சட்டமாஅதிபர் திணைக்களத்தில் மிக நீண்ட காலமாக வெவ்வேறு துறைகளில் சேவையாற்றி அதன்மூலம் பெற்ற பெறுமதிமிக்க பன்முக அனுபவங்களுடனும், இரு தசாப்தங்களுக்கு மேலாக முஸ்லிம் சட்டத்தைக் கற்பித்தலின் மூலம் பெற்ற மிகப் பரந்த அறிவாற்றலுடனும், இந்நூல் ஆசிரியர், காதி நீதிமன்ற முறைமை தொடர்பிலான பல்வேறுபட்ட விடயங்களைத் தெளிவாகவும், நடைமுறைச் சாத்தியங்களுடனும் ஆராய்ந்து, நியாயமான தீர்வுகளையும் துணிவுடன் முன்மொழிந்துள்ளார். முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்திலுள்ள குறைபாடுகள் தொடர்பிலான இவரது விமர்சன ரீதியான ஆய்வு, நடைமுறையிலுள்ள சட்டத்தில் பொருத்தமான திருத்தங்களைக் கொண்டு வருவதற்குச் சிறந்ததொரு அடிப்படையாக அமையும். அதிலும் விசேடமாக, காதிநீதிமன்ற முறைமையை மீள்திருத்துவதற்கும், இந்நீதிமன்ற நடைமுறைகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் இது உதவக் கூடியதாக அமையும்.

நூலாசிரியர், பெண்களை மையமாகக் கொண்டிருப்பது உணர்வு பூர்வமானது. பெண்கள் நிசப்தமாகத் தொடர்ந்து துன்பப்படுபவர்கள். இஸ்லாமியத் திருமணமொன்றின் கட்டாயத் திறத்தவர்களில் ஒருவராகப் பெண்கள் அமைந்திருப்பதனால் திருமணம் தொடர்பில் ஏற்புடைத்தான சட்டத்தைப் பெண்களின் கோணத்தில் நின்று ஆராய்வது மறுக்கப்படமுடியாததும், குறைத்து மட்டிடப்பட முடியாதததுமாகும். பெண்களுக்கு ஏற்புடைத்தான உள்நாட்டுச் சட்டங்களில் தங்களது கருத்துக்களை வெளியிடுவதற்குப் பெண்கள் உரித்துடையவர்கள். இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்பகாலத்திலிருந்து அவர்கள் இதைச் செய்தார்கள் என்பதும் கண்கூடு. திருமணத்தின் போது பெண்களுக்கு வழங்கப்படும் மஹறின் தொகையில் ஒரு எல்லையை விதிக்கும் முயற்சியில்,

இரண்டாவது கலிபாவான உமர் இப்னு கத்தாப் (ரழி) அவர்கள் முயற்சிக்கையில், திருமணத்தில் சம்பந்தப்பட்ட திறத்தவர்களுக்கு மஹரில் உடன்பாடு கொள்வதற்கு உரிமை உண்டு என்ற குர்ஆனிய வசனத்தை ஆதாரங்காட்டி, கலிபாவின் முயற்சியைத் தடுத்தவர் ஒரு பெண்தான்.

ஆதரவு அவசியமாயினும், எவ்விதமான ஒத்தாசைகளுமற்ற பாத்திமா என்ற பெண்ணின் நிலையினை அறிமுகவுரையாக எடுத்துக் காட்டியுள்ள இவ்வாக்கத்தின் நோக்கம், நியாயமற்றதொன்றல்ல. ஆயினும், ஒரு திருமணத்தை ஏற்படுத்துவதற்கு இரு நபர்கள் அவசியம் என்பது போலவே, ஒரு பிரச்சினையை உருவாக்குவதற்கும் இரு நபர்கள் அவசியம் என்ற உண்மையை எவரும் மறுக்க முடியாது. இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட அனைத்து விடயங்களிலும், அல்லாஹ்வினால் மிகவும் வெறுக்கப்பட்ட விடயம் விவாகரத்து என்பதையும், அது மனிதர்களுக்கு ஒரு கருணையாகவே வழங்கப்பட்டுள்ளது என்பதனையும் அனைவரும் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். ஆகையினால் இறுதியான ஒரு வழியாகவே இதனை உபயோகிக்க வேண்டும். ஆகவே, ஒவ்வொரு ஆணும், பெண்ணும் விவாகரத்தைப் பற்றிச் சிந்திக்கும் போது அவர்களுக்கு "நாம் மீண்டும் அல்லாஹ்விடம் செல்வோம்" என்பதையும் சிந்திக்க வேண்டும்.

*வஸ்ஸலாம்.*

**எம். ஜெமீல்**
ஓய்வு பெற்ற நீதியரசர்
உயர் நீதிமன்றம்
இலங்கை

இலக்கம் 13/10, தயா வீதி
கொழும்பு-06

28, நவம்பர் 2000

# முகவுரை

'இலங்கையில் காதிநீதிமன்ற முறைமையும், முஸ்லிம் பெண்களின் மீதான அதன் தாக்கமும்' என்ற விடயம் தொடர்பில் ஆராயும் நோக்கில் இந்நூலை எழுதும் பொறுப்பை என்னை நம்பி ஒப்படைத்த முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணிக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். சாதாரண நீதிமன்றங்களின் நடைமுறைகளைப் பின்பற்றாமல், முஸ்லிம் பெண்களின் திருமணம் தொடர்பான பிரச்சினைகளுக்கு நிவாரணமளிப்பதே, இலங்கையில் நடைமுறையிலுள்ள காதிநீதிமன்ற முறைமையின் நோக்கமாகும்.

'காதிநீதிமன்ற முறைமையும், முஸ்லிம் பெண்கள் மீதான அதன் தாக்கமும்' என்ற விடயத்தில் ஆழமானதொரு மதிப்பீடு செய்வதே இந்நூலின் நோக்கமாகும். காதி நீதவான்களுக்கும், அவர்களின் முன்னால் முரண்பாட்டுடன் வந்து நிற்கும் திறத்தவர்களுக்கும் வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களுக்கு அவர்களால் வழங்கப்பட்ட விடைகளின் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டன. காதிநீதவான்களின் முன்னால் நடைபெறும் நடைமுறைகளை அவதானித்ததனூடாகவும் பெறுமதிமிக்க உள்வாங்கல்கள் திரட்டப்பட்டன. முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியினால் ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. அக்கூட்டத்தின் முக்கிய பங்குபற்றுனர்கள், காதிநீதவான்களும், காதிகள் சபை உறுப்பினர்களுமாவர்; நான் விசேட இணைப்பாளராக அக்கூட்டத்திற் பணியாற்றினேன்.

முஸ்லிம் சட்ட ஆராய்ச்சியிலும், விசேடமாக முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் செயற்பாடுகளில் நான் எவ்வாறு சம்பந்தப்பட்டேன் என்பதை இவ்விடத்தில் விளக்குவது அவசியமானதாகும். எனது மாணவ நாட்களில் முஸ்லிம் சட்டம் தொடர்பிலான முறையான கற்கை நெறிகள் எதனையும் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களெதுவும் எனக்குக் கிடைக்கவில்லையாதலால், இலங்கைக்கு ஏற்புடைத்தான முஸ்லிம் சட்டத்தைச் சுயமாகவே படிக்க வேண்டியதாக இருந்தது. இரண்டு காதி நீதவான்களின் வழிகாட்டல்கள் எனக்குக் கிடைத்தன. முதலாமவர், எனது தாய்வழிப்பாட்டனார் மர்ஹூம் எம்.எம்.எம். நூஹு லெப்பை அவர்களாவார். தெஹிவளை முஹியத்தின் பெரிய ஜும்மாப் பள்ளிவாசலின் இமாமாகவும், கொழும்புப் பெரும்பாக முஸ்லிம் திருமணப் பதிவாளராகவும், காதிநீதவானாகவும் இருந்தவர். அவரது பாதுகாப்பில் இருந்த, முஸ்லிம் திருமணங்களில் கைச்சாத்திடப்படும் ஒப்பந்தங்களைப் பிரதிபலிக்கும் 'கடுத்தம்' எனும் பதிவுகளைச் சிறுவனாக இருந்த காலத்திற் படித்த ஞாபகம் எனக்கிருக்கின்றது. இஸ்லாம், முஸ்லிம் சட்டம் என்பனவற்றின் எனது நிஜமான ஆசான் அவர்தான்.

எனது மற்றைய முக்கிய வழிகாட்டியான காதிநீதவான், இரத்தினபுரி பிரதேசத்திற்கான காதி நீதவானும், இலங்கை காதிநீதவான்கள் நலன்புரிச் சங்கத்தின் தற்போதைய செயலாளருமான அல்ஹாஜ். எம்.எச்.எம். யெஹ்யா அவர்களாவார். நான் சட்ட மாணவனாக இருந்தபோது, 1969ஆம் ஆண்டளவில், முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்ட அறிக்கையின் முதற் பாகத்தின் ஒரு பிரதியை எனக்கு அவர் வழங்கினார். அத்துடன் காதிநீதவானாகத் தனது அனுபவங்களையும் அவர் என்னுடன் பரிமாறிக் கொள்வார். சட்டக் கல்லூரி அதிபராக இருந்த திரு. வீ. இரத்தினசபாபதி, சட்டக்கல்லூரியில் இப்பாடத்தினை என்னால் கற்பிக்க முடியுமா என 1977இல், கேட்டார். நான் அதனை ஏற்றுக் கொண்டேன். கற்றல் தொடர்பிலான எனது அனுபவங்களுக்கு இது ஒரு ஆரம்பமாக அமைந்தது.

1984ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டபீடமாணவர்களுக்கு முஸ்லிம் சட்டத்தைக் கற்பித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில், தற்போது இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டத்தில் பாரிய பிரச்சினைகள் இருப்பதை உணர ஆரம்பித்தேன். அதேகாலத்தில்தான் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியுடனான எனது தொடர்பும் ஆரம்பித்தது எனலாம். முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியைச் சேர்ந்த இலங்கையின் முஸ்லிம் சட்டச்சீர்த்திருத்தங்களுக்காகப் போராடக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்த இரண்டு புரட்சிப் பெண்களை நான் சந்தித்தேன். இத்திட்டத்தை மிகவும் ஆழமாகக் கற்பது மிகவும் பிரயோசனமானது என்பதனை அவர்களுக்கு என்னால் உணர்த்தக் கூடியதாக இருந்தது. அவர்களது ஆராய்ச்சியில் நானும் இணைய வேண்டும் என்ற அவர்களது அழைப்பை நான் ஏற்றுக் கொண்டேன். அதிலிருந்து, தேவையான சீர்த்திருத்தங்களுக்கான உந்துதலை ஏற்படுத்துவதற்கான இவ்விடயம் தொடர்பான முழுமையான கற்கை நெறியில் நாங்கள் ஈடுபட்டோம். மிகப் பொறுப்பு வாய்ந்த, மிகவும் உபயோகமான அவர்களது இச் செயற்பாட்டில் என்னையும் இணைத்துக் கொள்வதற்கான வாய்ப்பைத் தந்தமைக்காக, முன்னணியின் உத்தியோகபூர்வ உறுப்பினர்களுக்கு மீண்டுமொருமுறை நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள காதிநீதிமன்ற முறைமையினால் இலங்கை முஸ்லிம்களுக்குச் சில நன்மைகள் இருக்கின்ற போதிலும் கூட, நீதிமன்றங்களினாலும், ஏனைய நிறுவனங்களினாலும் பிரயோகப்படுத்தப்படுகின்ற நீதித்துறையில், அவசரமாகத் திருத்த வேண்டிய ஏராளமான குறைபாடுகள் உள்ளன என்பதே எமது கருத்தாகும். சில குறைபாடுகள் போதியளவில் இத்திட்டத்தில் தெளிவாகக்காட்டப்பட்டுள்ளன என்பதுவும், முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுகள் மேலும் திறமையான நியாயமான முறைமையை உருவாக்குவதற்கு வழிகாட்டியாக அமையும் என்பதுவும் எமது எதிர்ப்பார்ப்புக்களாகும்.

உணர்வு பூர்வமான ரீதியில் தனது செய்தியை வழங்கிய இலங்கையின் மாண்புமிகு பிரதம நீதியரசருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். உற்சாகமூட்டக் கூடியவகையில் முன்னுரையை எழுதியதற்காக மட்டுமன்றி, இதன் எழுத்துப் பிரதியைப் வாசித்துப் பல திருத்தங்களை முன்வைத்த ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரும், ஐக்கிய அரபு இராட்சியத்திற்கான முன்னாள் இலங்கையின் தூதுவருமான நீதியரசர் எம். ஜெமீல் அவர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

பைரூன் ஸக்கரியா, ஆன் ஜப்பார், சூலனி கொடிகார ஆகியோருக்கு அவர்களால் வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்கும் உந்துதலுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். பிரதிகளைத் தயார் செய்வதில் செயலக உதவிகளை வழங்கிய சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த சிறியானி. டீ. சில்வா, சுனித்தா ஜயதிலக்க ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பிரதிகளை வாசித்துத் தேவையான மாற்றங்களையும், திருத்தங்களையும் முன்மொழிந்த எனது முன்னாள் பயிலுனர்களான, அரச சட்டத்தரணி திரு. சுமேதா மஹாவன்னியாராச்சி, திருவாளர்கள் சப்ரி ஹலீம்டீன், மலின் ராஜபக்', ரொ'ானா ர'ீட், திருமதி. மரினி. டி. லிவேரா. கௌசாலி டிலானி, ஆகிய இலங்கை உயர்நீதிமன்ற சட்டத்தரணிகளுக்கும் நான் எனது நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன். இறுதியாக, எனது ஆய்வுகளின் போதும், எழுத்து வேலைகளின் போதும், சகிப்புத்தன்மையுடனும், பொறுமையுடனும் இருந்த எனது மனைவி முனிராவுக்கும் மகன் அல்தாபுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

**சலீம் மர்சூப்**

இலக்கம் 249/5, ரத்னாயக்க மாவத்தை
பெலவத்தை,
பத்தரமுல்லை,
இலங்கை,

3 ஜனவரி 2001

# அறிமுகவுரை

ஒரேயொரு வார்த்தையை மூன்று முறை கூறுவதன் மூலம், தனது வாழ்க்கையைத் தூள்தூளாகச் சிதறடிக்க முடியும் என்பதை அவளால் நம்ப முடியவில்லை. 'தலாக்'[1] எனும் வார்த்தை ஒரு போதும் முடிவுறாத எதிரொலியாக அவளுக்குள் வட்டமிட்டுக் கொண்டேயிருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்னர், இக்ராமை அவளுக்குத் திருமணம் செய்து வைப்பதற்காக ஒவ்வொரு விடயத்திலும் தனது பெற்றோர் செய்த ஏற்பாடுகள் இன்னும் பாத்திமாவிற்கு ஞாபகம் இருக்கின்றன. 'நிகாஹ்'[2], அவளது புதிய வாழ்க்கைக்கான ஓர் அத்திவாரமாக அமைந்தது. அன்பான, பொறுப்புவாய்ந்த கணவனுடனான திருமண வாழ்க்கையையும் இரண்டு அல்லது மூன்று பிள்ளைகளுடன் தென்றல் போல் தவழும் குடும்ப வாழ்க்கையையும் பற்றி அவள் கனவு கண்டிருந்தாள். இஸ்லாமிய நடைமுறையினதும், தன்மையினதும், அடிப்படையும், அத்திவாரமும் என்பதற்கிணங்க, திருமணப் பிணைப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக பொறுப்புணர்ச்சியையும், பொறுமையையும் தன்னால் இயன்ற வரை பின்பற்றினாள். அவள் கண்ட கனவுகள், ஒரு குறுகிய காலத்தினுள் பயங்கரக் கனவாக மாறிவிடும் என அவள் கற்பனையில் கூட எண்ணவில்லை. காதிநீதவானின்[3] அறிவித்தல் அவளுக்கு இப்போதுதான் கிடைத்துள்ளது. அவளது திருமணத்தையும் வாழ்க்கையையும் காப்பாற்றிக் கொள்ள, காதிநீதவானினால் ஏதேனும் செய்ய முடியுமாக இருக்குமென்ற ஆதங்கத்துடன் அவள் காதிநீதவானிடம் செல்ல வேண்டும்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள காதிநீதிமன்ற முறைமையின்[4] சட்ட நிர்வாக வேலைத்திட்டங்களைப் பெண்களின் கோணத்திலிருந்து ஆராய்வதற்கான ஒரு முயற்சியே இதுவாகும். பாத்திமாவைப் போன்று பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சாதாரண நீதிமன்றங்களின் நடைமுறைகளைப் பின்பற்றாமல் நிவாரணமளிப்பதே காதிநீதிமன்ற முறைமையின் நோக்கமாகும். இம்முறைமையும் முஸ்லிம்

---

1. ஒரு தலைப்பட்சமாகக் கணவனினால் கூறப்படுவதன் மூலம் திருமண ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய விவாகரத்து.
2. 'திருமண நிகழ்வு' என்பதற்கான அரபுப்பதம்.
3. இலங்கை முஸ்லிம்களின் *திருமணம்* தொடர்பிலான விடயங்களை விசாரிக்கும் நியாயாதிக்கமுடைய நீதித்துறை அலுவலர். 1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 12இன் பிரகாரம் நியமிக்கப்பட்டவர்கள். (இச்சட்டமானது 1951ஆம் ஆண்டின் 31ஆம் இலக்கச் சட்டம், 1955ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டம், 1965ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கச் சட்டம், 1969ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டம், 1975ஆம் ஆண்டின் 41ஆம் இலக்கச் சட்டம் என்பவைற்றினால் திருத்தப்பட்டது).
4. வெவ்வேறுபட்ட நியாயாதிக்க எல்லைகளுக்குரிய வகையில் நியமிக்கப்பட்ட காதி நீதவான்கள், அகில இலங்கைரீதியில் நியமிக்கப்பட்ட விசேட காதிநீதவான்கள் மேன்முறையீட்டு நியாயாதிக்கத்துடன் நியமிக்கப்பட்ட காதிகள் சபை என்பனவற்றை உள்ளடக்கியது.

பெண்களின் மீதான அதன் தாக்கமும் என்ற விடயத்தில் ஆழமான மதிப்பீடு செய்வதை நோக்கமாகக் கொண்ட இக்கற்கைத் திட்டத்திற்கு காதிநீதவான்களுக்கும், அவர்கள் முன்னால் முரண்பாட்டுடன் வந்து நிற்கும் திறத்தவர்களுக்கும் வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களுக்கு[5], அவர்களினால் வழங்கப்பட்ட விடைகளின் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டன. காதிநீதவான்களின் முன்னால் நடைபெறும் நடைமுறைகளை அவதானித்ததனூடாகவும் பெறுமதிமிக்க உள்வாங்கல்கள் திரட்டப்பட்டன. காதிநீதவான்களுடனும், காதிகள் சபை உறுப்பினர்களுடனும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி ஒரு கூட்டத்தையும் ஒழுங்குசெய்திருந்தது. இச்கூட்டத்திற்கு[6] இந்நூலாசிரியர் விசேட இணைப்பாளராகக் கடமையாற்றினார்.

5. முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியினால் உபயோகிக்கப்பட்ட வினாக் கொத்து, இணைப்பு 1ல் இணைக்கப்பட்டுள்ளது.

6. இக்கூட்டத்தின் அறிக்கை, காதிநீதவான்களுடனான கலந்துரையாடல் (கொழும்பு 2000) எனும் தலைப்பில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியினால் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 01

# காதிநீதிமன்ற முறைமை

முஸ்லிம்கள் தொடர்பான விடயங்களில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, ஆரம்ப காலங்களிலிருந்தே சிங்கள மன்னர்கள் முஸ்லிம்களின் மதச்சட்டத்தையும், வழக்காறுகளையும் பயன்படுத்தியுள்ளமைக்குச் சான்றுகள் உள்ளன. இந்நோக்கத்திற்காக, 15ஆம் நூற்றாண்டில் கொழும்பில், ஒரு விசேட நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. இவ்விசேட சட்டங்களும், வழக்காறுகளும், வெளிநாட்டவர்களின் 4 நூற்றாண்டுகால ஆட்சிக்காலத்தில் ஏதோ ஒரு வகையில் பயன்படுத்தப்பட்டாலும், சிங்கள மன்னர்களினால் உருவாக்கப்பட்ட விசேட நீதிச்சேவை முறைகள் அழிந்துவிட்டன.

முழு இலங்கையையும் உள்ளடக்கிய ஒரு காதிநீதிமன்ற முறைமை 20ம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்த காலப்பகுதியிலேயே உருவாக்கப்பட்டது. இலங்கையில் ஒரு காதிநீதிமன்ற முறைமை உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை எற்படுத்திய நிகழ்வுகள் சுவாரஸ்யமானவை. மாவட்ட நீதிமன்றத்தின் மூலமே, ஒரு மனைவி தனது திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வரமுடியும் எனவும், முஸ்லிம்களின் விசேட சட்டங்களின் மூலமும், வழக்காறுகளின் மூலமும் ஒரு பெண் விவாகரத்துப் பெறுவதற்காக, அந்தப் பெண் அல்லது அவளது தகப்பன், ஒரு காதியை நியமித்தால், அது சட்டத்தில் எந்த வலிதுடைமையையும் பெறாது எனவும் 1925ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டது.[7]

### சீர்திருத்தத்திற்கான கோரிக்கைகள்

சட்டத்தில் பொதுவான சீர்திருத்தங்கள் அவசியம்; அத்துடன் காதிநீதிமன்ற முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பன போன்ற உந்துதல்கள் முஸ்லிம்களிடையே ஏற்பட்டன. இது தொடர்பான ஆலோசனைகளை ஆங்கிலேய அரசாங்கத்திடம் முன்வைப்பதற்காக 1926ஆம் ஆண்டு ஒரு சட்டப் பேரவைக் குழு நியமிக்கப்பட்டது. இப்பேரவைக்கு அப்போதைய பதில் சட்டமா அதிபர் ஜனாப் M. T. அக்பர் தலைவராக இருந்தார். ஜனாப் N.H.M.அப்துல் காதர், ஜனாப் H.M. மாக்கான் மாக்கார், டாக்டர் T.B. ஜாயா ஆகியோரும் வேறு 5 முஸ்லிம் அல்லாதோரும் அங்கம் வகித்தனர். இலங்கை முஸ்லிம்களின் திருமணம் தொடர்பிலான பிரச்சினைகளுக்கான, ஆரம்ப நியாயாதிக்கமுடைய நீதிமன்றமாக காதி நீதிமன்றமும், மேன்முறையீட்டு நியாயாதிக்கம் கொண்ட

7. அரசு எதிர் மீஸ்கின் உம்மா 26 NLR 330. அஜெஸ்கா உம்மா எதிர் அப்துல் கரீம் (1880) 4 SCC 13.

நீதிமன்றமாக காதிகள் சபையும், நிறுவப்பட வேண்டுமென்று அக்குழுவினால் விதந்துரைக்கப் பட்டது[8]. இவ்விதந்துரைகளின் விளைவாக 1929ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துப் பதிவுச்சட்டம்[9] உருவாக்கப்பட்டது. எனினும் இச்சட்டம் 1937ஆம் ஆண்டிலேயே, மக்கள் மத்தியில் பிரகடனம் செய்யப்பட்டது. ஆனால் திரு. P.E. பீரிஸ் தலைமையில், டாக்டர் T.B. ஜாயா, ஜனாப் M.C. அப்துல் காதர், ஜனாப் S.M. அபுபக்கர், ஜனாப் முகம்மது மாக்கான் மாக்கார், ஜனாப் A.H.M. இஸ்மாயில், ஜனாப் M.I.M. ஹனீபா ஆகியோரை உள்ளடக்கிய, 1930ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட சபையொன்றின் சிபார்சுகளுக்கமைய, 1934ஆம் ஆண்டு, இச்சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இச்சபையின் இறுதியறிக்கை இன்னும் அச்சிடப்படவில்லை.

மேற்கூறியவகையில் ஆக்கப்பட்ட சட்டத்தைச் சரியாகச் செயற்படுத்த முடியாமையின் காரணமாக, இச்சட்டத்தில் மேலும் என்னென்ன திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என ஆராய்வதற்காக, 1939ஆம் ஆண்டு, ஆளுனர், ஒரு சபையை நியமித்தார். இச்சபையில், தமது பதவி வழியில் பதிவாளர் நாயகம், தலைவராகவும், ஓய்வு பெற்ற நீதியரசர் M.T.அக்பர், டாக்டர் T.B.ஜாயா, ஜனாப் M.I.M.ஹனிபா ஆகியோரும் அடங்குவர். இச்சபையானது சட்டம், அதன் நடைமுறை என்பன தொடர்பில் பல ஆழமான சிபார்சுகளை முன்வைத்தன. இதன் அறிக்கை அச்சிடப்படவில்லை. இவ்வறிக்கையின் விளைவாகவே, 1954ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த, 1951ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம்[10] உருவானது. தற்போதைய காதிநீதிமன்ற முறைமையும் இச்சட்டத்தினாலேயே ஆளப்படுகின்றது.

இச்சட்டத்தில் காதிநீதவான்களின் நியமனம், அவர்களது சேவைக்காலம்,[11] தற்காலிக காதிநீதவான்களின் நியமனம்,[12] விசேட காதி நீதவான்கள் நியமனமும் அவர்கள் நியமிக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள்[13] என்பனபற்றிக் கூறப்படுகின்றது. அன்சார் எதிர் பாத்திமா மிர்ஸா,[14] எனும் வழக்கில், "விசேட காதிநீதவான்களை நியமிக்கும் அதிகாரம் பரந்தது. அத்தகைய காதிநீதவான்களை நியமிக்கும் போது, அவர்கள் நியமிக்கப்பட வேண்டிய

8. இச்சபையின் அறிக்கை, கூட்டறிக்கை இலக்கம் XX, 1928 எனப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.
9. 1929ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம்; இது 1934ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டு 1937ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி சட்டமாக்கப்பட்டது.
10. 1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம். (இச்சட்டமானது 1951ஆம் ஆண்டின் 31ஆம் இலக்கச் சட்டம், 1955ஆம் ஆண்டின் 22ம் இலக்கச் சட்டம், 1965ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கச் சட்டம், 1969ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டம், 1975ஆம் ஆண்டின் 41ஆம் இலக்கச் சட்டம் என்பனவற்றினால் திருத்தப்பட்டது).
11. மேலே கூறியது.
12. மேற்கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 13.
13. மேற்கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 14.
14. 75 NLR 279.

காரணங்களைக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை" என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. காதிநீதவான்களின் தீர்ப்புக்களுக்கு எதிரான மேன்முறையீட்டு மனுக்களை விசாரணை செய்வதற்காகக் காதிகள் சபைக்கு மேன்முறையீடு செய்வது பற்றியும் இச்சட்டம் கூறுகின்றது.[15] மேலும், காதிகள் சபையிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தல் பற்றியும், ஆனால் இம்மேன்முறையீடு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்ற பின்னரே செய்யமுடியும் என்பது பற்றியும் இச்சட்டம் கூறுகின்றது.[16] இச்சட்டத்தின் பிரகாரம், காதிநீதவான்கள், காதிகள் சபை உறுப்பினர்கள் ஆகியோரின் நியமனங்கள், ஆரம்பத்தில் உள்நாட்டலுவல்கள் அமைச்சரின் பொறுப்பின் கீழேயே காணப்பட்டன. ஜெய்னுலாப்தின் எதிர் டனினா உம்மா[17] என்ற வழக்கில் இது அரசியல் யாப்புக்கு உடன்பாடானதல்ல எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. இதன் காரணமாக, 1965ஆம் ஆண்டின் திருத்தத்தின் பிரகாரம் இவர்களின் நியமனம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்தினுள் கொண்டுவரப்பட்டது.[18] காதிநீதவான்களின் நியமனங்களைத் தமது தற்றுணிவின் அடிப்படையில் தடைசெய்யும்/முடிவுறுத்தும் அதிகாரமும் நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கே உண்டு. எனினும் இன்றும் கூட காதி நீதிமன்றங்கள், காதிகள் சபை என்பனவற்றின் நிர்வாக விடயங்கள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அதிகாரத்தினுள்தான் உள்ளதேயொழிய, நீதித்துறை அமைச்சின் கீழ் அல்ல. தற்போது இலங்கையில் 52 நீதிச்சேவைப் பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு காதிநீதவான் நியமிக்கப்பட்டுள்ளார். இச்சட்டத்தின் பிரகாரம், ஒரு காதிநீதவானுக்கு இருக்க வேண்டிய ஆகக் குறைந்த தகைமை என்னவெனில், சிறந்த நல்லொழுக்கம் கொண்ட பொருத்தமான முஸ்லிம் ஆணாக இருக்க வேண்டும்.[19] இது தவிர, ஆகக் குறைந்த தொழில்சார் அல்லது கல்வித் தகைமை பற்றி இச்சட்டத்தில் எதுவித ஏற்பாடுகளுமில்லை. 1999ஆம் ஆண்டில் செய்யப்பட்ட இவ்வாய்வின் பிரகாரம் 4 காதிநீதவான்கள், மாத்திரமே சட்டத்தரணிகளாகவுள்ளனர்.

**கலாநிதி சஹாப்தின் குழு**

கடந்த மூன்று தசாப்த காலங்களில் இலங்கை முஸ்லிம்களின் திருமணம் தொடர்பான சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமென்ற கோரிக்கை, இலங்கை முஸ்லிம்களின் மத்தியில் காணப்பட்டது. இதன் விளைவாக, 1990ஆம் ஆண்டு கலாநிதி A.M.M.சஹாப்தீன் தலைமையிலான

15. மேற்குறிப்பு 10இல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 15
16. உள்ளே அத்தியாயம். VI யைப் பார்க்க.
17. 64 NLR 419.
18. 1965ம் ஆண்டு 1ஆம் இலக்கத்தினால் திருத்தப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 2.
19. மேற்குறிப்பு 10ல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 12 (1).

குழுவொன்றை முஸ்லிம் சமய, கலாச்சார அமைச்சர் நியமித்தார். 1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் உட்பட, முஸ்லிம்கள் தொடர்பான ஏனைய சட்ட விடயங்களிலும், தேவையான திருத்தங்கள் பற்றி அறிக்கை சமர்ப்பிப்பதே இக்குழுவின் நோக்கமாகும். இக்குழுவின் செயலாளராக ஜனாப் M.Z.அக்பர் நியமிக்கப்பட்டார். அத்தோடு ஜனாதிபதி சட்டத்தரணிகளான ஜனாப்கள். பாயிஸ் முஸ்தபா, ஷிப்லி அஸீஸ், மற்றும் கலாநிதி M.A.M.சுக்ரி, கலாநிதி M.S.ஜல்டின், S.H.M.மஹ்ரூப், A.A.M. மர்லீன், M.T.M.பாபீக், M.M.சுஹைர், முஹம்மத் மார்க்கானி, மௌலவி S.M.A.M.முஸம்மில், அல் ஆலிம் A.R.M.ஸரூக், திருமதி ரொனா அபுஸாலி முஹம்மத், செல்வி யஸ்மீன் கபூர் ஆகியோர் அங்கம் வகித்தனர். இலங்கையின் முஸ்லிம் குடும்பச்சட்டம் தொடர்பில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான பிரேரணைகளைச் சமர்ப்பிப்பதற்கான குழுவொன்றில், பெண்கள் அங்கத்துவம் வகித்தமை இதுவே முதற்தடவையாகும். நீதியாசர் M.ஜமீல் மற்றும், இந்நூலின் ஆசிரியர் ஆகியோர், இக்குழுவில் அங்கத்தவர்களாகப் பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இக்குழுவானது பல அமர்வுகளை நடாத்திக் கருத்துக்களைப் பெற்றது. முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியும் இக்குழுவின் முன் தோன்றி, அடிப்படையானதும் மிகவும் ஆழமானதுமான திருத்தங்களை முன் வைத்தது.[20] இச்சட்டத்திருத்தம் சம்பந்தமாகப் பல சிபார்சுகளை இக்குழு முன்வைத்த போதிலும், இப்போது நடைமுறையிலுள்ள முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் மிகச் சிறியளவிலான திருத்தங்களே அவசியம் என்ற முடிவு பெறப்பட்டது. இக்குழுவினால் பிரேரிக்கப்பட்ட சிபார்சுகளின் சாரம்சம் கீழே தரப்படுகின்றது:

(அ) பிரிவு 18 (2)இலும், அட்டவணை (IV)இலும், திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும். அதன் பிரகாரம் திருமணத்தின் போது அல்லது அதற்கு முன்னதாகத் திருமணம் தொடர்பாக இரு திறத்தவர்களும் ஏதாவது ஒப்பந்தம் செய்திருந்தால், அது பற்றிய நிபந்தனைகள் விவாக பதிவேட்டில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

(ஆ) பிரிவுகள் 18 (1) (a), 19 (1) (a) ஆகியவற்றில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். அதன் பிரகாரம் திருமணப் பதிவில் மணமகள் கையொப்பமிட வேண்டும்.

(இ) பிரிவு 47 (1) (f), இரண்டாம் அட்டவணையின் விதி 4 (1) (a), என்பனவற்றில் திருத்தம் கொண்டு வரப்பட்டு, 'மத்தா' செலுத்துவதற்கான வழிவகைகள் செய்யப்பட வேண்டும்

20. முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தையும், வக்பு சட்டத்தையும் திருத்துவதற்கான திருத்தங்களை முன்மொழிவதற்காக முஸ்லிம் சமய, கலாச்சார அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையின் 31ஆம் பக்கம்.

(ஈ) பிரிவுகள் 64 (1), 64 (3) என்பன திருத்தப்பட்டு, வலியுறுத்தற்கட்டளை வழங்கப்படும் போது, அவ்வழக்காளிக்கேற்படும் சிரமங்கள் தளர்த்தப்பட வேண்டும்.

(உ) பிரிவு 74இல் காதி நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் தோன்றுவதற்குரிய அனுமதி வழங்கப்படும் வகையில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும்.

(ஊ) "காதிச் சேவை" ஒன்றினை உருவாக்குவதற்கும், காதிநீதவான்கள், மற்றும் காதிகள் சபை உறுப்பினர்கள் ஆகியோரை நியமிப்பதற்கான ஆகக் குறைந்த கல்வித் தகைமைகள் பற்றியும் சில சரத்துக்களைச் சட்டத்திற் சேர்க்க வேண்டும்.

(எ) முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவுகள், முஸ்லிம் அல்லாதோர்ரினால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுப்பது தொடர்பிலான முறைமைகளும் சட்டத்திற் சேர்க்கப்பட வேண்டும்.

கலாநிதி சஹாப்தின் குழுவினால் இத்தகைய மட்டுப்படுத்தப்பட்ட சிபார்சுகள் முன்வைக்கப்பட்ட போதிலும், இவை இன்னும் அரசாங்கத்தினால் ஏற்கப்படவோ அமுலாக்கப்படவோவில்லை. ஆகவே, இவ்விதந்துரைகள் சட்டமாக மாற்றப்பட்டு, அத்திருத்தங்கள் சட்டத்தில் செல்வாக்கைச் செலுத்தும் வரையில் பாத்திமாவும் அவள் போன்ற பெண்களும், எவ்வளவு காலத்திற்குக் காத்திருக்க வேண்டும் என்பதை எதிர்வு கூறுவது மிகவும் சிரமமான விடயமாகும்.

அத்தியாயம் 02

# காதிநீதவான்களின் நியாயாதிக்கம்

காதிநீதவான்களின் நியாயாதிக்கத்தைப் பின்வருமாறு பிரித்துக் காட்டலாம்:

(அ) சில குறிப்பிட்ட வகையிலான திருமணங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான நியாயாதிக்கம், (ஆ) விவாகரத்திற்கும், திருமண வெறிதாக்கத்திற்குமான நியாயாதிக்கம், (இ) திருமணம் தொடர்பான விடயங்களுக்குரிய நியாயாதிக்கம். இவற்றைச் சுருக்கமாக அவதானிப்போம்

## திருமணத்திற்கான அனுமதி வழங்குதல்

முஸ்லிம் சட்டத்தின் படி, தனது பாதுகாப்பிலுள்ள ஒரு சிறுமிக்கு, அச்சிறுமியின் வலி திருமணம் செய்து கொடுக்க இயலுமாக இருந்த போதிலும் கூட, முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரகாரம் 12 வயதிற்குக் குறைவான ஒரு பெண்பிள்ளையின், திருமணம் பதிவு செய்யப்படுவதற்கு, காதிநீதவானின் அனுமதி ஒரு தேவைப்பாடாகும்.[21] இச்சட்டத்தின் பிரிவு 25 (1) (அ) (ii)இன் பிரகாரம், ஷாபி மத்ஹபினால் ஆளப்படும் ஒரு பெண்ணின் திருமணத்திற்கு, அவளது வலியின் அனுமதியும் அவசியமாகும். ஆனால் சில விடயங்களில், வலியின் சம்மதத்தைத் தேவைப்பாடற்றதாக்கும் அதிகாரம் காதிநீதவானுக்கு உண்டு. அச்சந்தர்ப்பங்களாவன: ஒரு பெண்ணிற்கு வலியில்லாத சந்தர்ப்பம், மற்றும் நியாயமற்ற முறையில் ஒரு பெண்ணின் திருமணத்திற்கு, வலி சம்மதமளிக்காத சந்தர்ப்பம் போன்றவையாகும்.[22]

## விவாகரத்திற்கும், வெறிதாக்கத்திற்குமான நியாயாதிக்கம்

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பகுதிகள் (III), (IV)இன் கீழ், விவாகரத்தைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் தொடர்பில், காதிநீதவானுக்குப் பரந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.[23] முஸ்லிம் கணவர்களினால் கோரப்படும் தலாக் விவாகரத்து, மற்றும் முஸ்லிம் சட்டத்தின் கீழ் மனைவியரால் கோரப்படும் விவாகரத்து என்பன இவற்றுள் அடங்கும். பகுதி

---

21. 1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (இச்சட்டமானது 1951ஆம் ஆண்டின் 31ஆம் இலக்கச் சட்டம், 1955ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டம், 1965ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கச் சட்டம், 1969ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டம், 1975ஆம் ஆண்டின் 41ஆம் இலக்கச் சட்டம் என்பனவற்றினால் திருத்தப்பட்டது) பிரிவு 47 (1) (j).
22. மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவுகள் 25 (1), 42 (2), 42 (3), ஹுரைரா சல்வால் எதிர் புஹாரி சல்வால் 4 MMDLR 174.
23. மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவுகள் 27இலிருந்து 32 வரை.

(V) இல் காணப்படுவது போன்று, ஒரு கணவன் தலாக் கூறும் விடயத்தில் காதிநீதவானின் பங்களிப்பு, சமரசத்திற்குரியதும், நிர்வாகத்திற்குரியதுமே தவிர, நீதித்துறையைச் சார்ந்ததல்ல. சட்டத்தில் வலிதுத் தன்மையைப் பெற்ற ஒரு தலாக்கைப் பதிவு செய்ய மறுப்பதற்கான அதிகாரம் காதிநீதவானுக்கு இல்லாத போதிலும், நியாயமற்ற சந்தர்ப்பங்களில், அது இயலுமானதாக உள்ளது.

ஆயினும், திறத்தவர்கள் ஆளப்படும் பிரிவின் கீழ், முஸ்லிம் சட்டத்தின் பிரகாரம் வலிதான ஒரு விவாகரத்து பதிவு செய்யப்படவில்லை என்ற காரணத்தினால். வலிதற்றதாக மாட்டாது என முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 16 கூறுகின்றது. மேலும், இரண்டாம் அட்டவணையின் 3ஆம் விதியின் பிரகாரம், கணவனால் செய்யப்படும் தலாக்கிற்கான காரணங்களையோ, அதன் அடிப்படைகளையோ ஒரு காதிநீதவான் பதிவு செய்ய முடியாது. இது ஒரு கணவன் தலாக் பெறுவதன் இலகுத்தன்மையை வலியுறுத்துகின்றது.

ஒரு மனைவி தனது கணவனால் தனக்கு வழங்கப்பட்ட தலாக் கூறும் உரிமையைப் பயன்படுத்திக் கணவனைத் தலாக் கூறும் "தலாக் ஏ தப்வீத்" முறையிலான தலாக்கின் பதிவு பற்றித் தெளிவாகக் கூறும் எந்தப் பிரிவும் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் இடம்பெறவில்லை. இது பற்றி விரிவான விளக்கத்தை இந்நூலின் (IV)ஆம், (V)ஆம், அத்தியாயங்களில் நோக்குவோம்.

இச்சட்டத்தின் பிரிவு 28இன் கீழ் ஒரு திருமணமான பெண் விவாகரத்துக் கோரி விண்ணப்பிக்கும் போது, அப்பெண், தனது கணவனின் கொடுமை, அல்லது 'தவறு' என்று அழைக்கப்படும் கணவனின் செயல் அல்லது செய்யாமை, அல்லது, முஸ்லிம் சட்டத்தில் அந்தப் பெண் ஆளப்படும் பிரிவின் கீழ் விவாகரத்துக் கோருவதற்கு அனுமதிக்கப்பட்ட காரணங்கள் எதையாவது நிரூபிக்க வேண்டும். இங்கு காதிநீதவானானவர் பிரச்சினைக்கான நிகழ்வுகளையும் சட்ட விளக்கங்களையும் கொண்டே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இங்கு காதிநீதவானின் பங்களிப்பு நீதிச்சேவையுடன் தொடர்புபட்டது. விவாகரத்து நடவடிக்கைகளின் போது இரண்டு நிலைகளைக் கையாள வேண்டிய காதிநீதவானின் பங்களிப்பு, இலங்கைக்கு ஏற்புடைத்தான விவாகரத்துத் தொடர்பிலான முஸ்லிம் சட்டத்தின் சமனில்லாத் தன்மையைக் காட்டுகின்றது. அத்துடன், கணவனினால் அல்லது மனைவியினால் கோரப்படும் திருமண வெறிதாக்கலுக்கான விண்ணப்பங்கள் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் காதிநீதவானுக்கு அதிகாரம் உண்டு.[24]

**திருமண விடயங்கள் தொடர்பிலான நியாயாதிக்கம்**

ஒரு காதிநீதவானுக்குள்ள திருமண விடயங்கள் தொடர்பிலான பரந்த நியாயாதிக்கத்தைப் பற்றி முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பகுதி (VI)

24. மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 47(1) (i).

கூறுகின்றது.[25] பின்வரும் விடயங்கள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளுவதற்கும், நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஒரு காதி நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் உண்டு.

(அ) மஹரைப் பெற்றுக் கொள்வதற்கான மனைவியின் கோரிக்கை,[26]

(ஆ) மனைவிக்கான பராமரிப்பைப் பெற்றுக் கொள்வதற்கான மனைவியின் அல்லது மனைவி சார்பிலானவரின் கோரிக்கை,

(இ) நெறிமுறையான பிள்ளைக்கான பராமரிப்பைப் பெற்றுக் கொள்வதற்கான பிள்ளை அல்லது பிள்ளை சார்பிலானவரின் கோரிக்கை; நெறிமுறையற்ற பிள்ளைக்கான பராமரிப்பைப் பெற்றுக் கொள்வதற்கான பிள்ளை அல்லது பிள்ளை சார்பிலானவரின் கோரிக்கை (ஆனால் பிள்ளையின், தாயும், பராமரிப்பு எவரிடம் கோரப்படுகின்றதோ அவரும் முஸ்லிமாக இருத்தல் வேண்டும்),[27]

(ஈ) விவாகரத்துப் பெற்ற மனைவியினால் கோரப்படும் அவ்விவாகரத்துப் பதிவு செய்யப்படும் வரையிலான பராமரிப்பிற்கான அல்லது இத்தாப் பராமரிப்பிற்கான கோரிக்கை[28] அல்லது, விவாகரத்துப் பதிவு செய்யப்படும் போது அப்பெண் கர்ப்பிணியாயின் பிள்ளை பிறக்கும் வரையிலான பராமரிப்பிற்கான கோரிக்கை,

(உ) ஏற்கனவே தீர்ப்பளிக்கப்பட்ட பராமரிப்பின் அளவைக் கூட்டுவதற்கான அல்லது குறைப்பதற்கான கோரிக்கை,

(ஊ) கைக்கூலியை மீளப் பெறுவதற்கான கோரிக்கை,[29]

(எ) மனைவி அல்லது விவாகரத்துப் பெற்ற மனைவியினால் கோரப்படும் குழந்தைப் பேறு காலப் பராமரிப்பிற்கான கோரிக்கை,

(ஏ) கணவன்-மனைவி இடையிலான சமரசத்திற்கான விண்ணப்பங்கள்.[30]

---

25. பொதுவாக பிரிவு 47(1).

26. திருமணத்தின் போது மணமகளைக் கண்ணியப்படுத்துவதற்காக, மணமகனினால், அம்மணமகளுக்கு வழங்கப்படுவதற்கு இஸ்லாத்தில் அங்கீகரிக்கப்பட்ட பணம்/ பொருள்.

27. மேற்குறிப்பு 21இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில், ஆரம்பத்தில் நெறிமுறையான பிள்ளைகளுக்குரிய பராமரிப்புப் பற்றி மாத்திரமே குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் 1965ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கச் சட்டத்தின் பிரிவு 6ன் மூலமே, நெறிமுறையற்ற பிள்ளைகளுக்குரிய பராமரிப்பு வழங்க வேண்டிய சந்தர்ப்பங்களும் குறிப்பிடப்பட்டன. நிஸாம் எதிர் பீபி (1998) 1 SLR 47.

28. விவாகரத்தின் மீதான இத்தாக்காலம், மாதவிடாய்க்குட்பட்ட பெண்களுக்கு 3 மாதவிடாய்க் காலங்களாகும். மாதவிடாய்க்கப்பாற்பட்ட பெண்களுக்கு இது 3 மாதங்களாகும். கணவன் இறந்த பின்னரான இத்தாக் காலம் இதிலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டும். இக்கால எல்லை 4 மாதங்களும் 10 நாட்களுமாகும்.

29. மேற்குறிப்பு 21இல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 97இல் விளக்கப்பட்டுள்ளது. பணம் அல்லது ஏனைய அசையும் சொத்துக்கள் திருமணத்தின் போது மணமகளின் சொந்தக்காரர்களினால் அல்லது ஏனையவர்களினால் மணமகளின் உபயோகத்திற்காக என மணமகனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் அல்லது பணம் அல்லது ஏனைய அசையும் சொத்துக்கள் இவ்வாறு கொடுக்கப்படும் என வாக்களிக்கப்பட்டிருந்தால் அவை கைக்கூலி எனப்படும். கைக்கூலியானது மணமகள் சார்பில் நம்பிக்கைப் பொறுப்புச் சொத்தாக மணமகனினால் பாதுகாக்கப்பட வேண்டும். திருமண முறிவின் போது அது மீளக் கையளிக்கப்பட வேண்டும். சௌதூனா எதிர் அப்துல் முனிஸ் 57 NLR 75.

30. மேற்குறிப்பு 21இல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 47 (1).

திருமணம் தொடர்பான விடயங்களில் பிள்ளைகளின் பாதுகாப்புரிமை பற்றிய பிரச்சினை மிகவும் முக்கியமானதொன்றாக இருந்த போதிலும் கூட, இது தொடர்பான ஏற்பாடுகள் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் இடம்பெறவில்லை. ஆட்கொணர்வு மனு மீதான நியாயாதிக்கம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும், மாகாண மேல் நீதிமன்றத்திற்கும் இருக்கும் பிரகாரமே, பாதுகாப்புரிமை தொடர்பான தனித்துவ நியாயாதிக்கத்தை காதி நீதிமன்றத்திற்கு வழங்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படுவது சிறப்புடையது.

**தனித்துவமான நியாயாதிக்கம்**

இச்சட்டத்தின் பிரிவு 47இன் பிரகாரம் காதி நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட நியாயாதிக்கம் வேறு எந்த நீதிமன்றங்களினாலோ நியாயமன்றங்களினாலோ விசாரிப்பதற்கோ, விளங்குவதற்கோ முடியாத தனித்துவமான நியாயாதிக்கம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.[31] ஆகவே, அப்துல் கபூர் எதிர் குட்டிலான் எனும் வழக்கில் நீதியரசர் எச்.என்.ஜீ. பெர்ணாண்டோவினால் வழங்கப்பட்ட தீர்ப்பில் கூறப்பட்ட "பராமரிப்புத் தொடர்பிலான விண்ணப்பங்களை விசாரிப்பதிலும், விளங்குவதிலும், காதி நீதிமன்றத்திற்கும், நீதவான் நீதிமன்றத்திற்கும் இணைந்த நியாயாதிக்கம் உண்டு[32]" என்ற கூற்றுத் தவறானதாகும்.[33]

31. மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 48. உம்முல் மர்சூனா எதிர் ஏ. டப்ளியு. ஏ. சமத் 79 NLR 209.

32. 61 NLR பக்கம் 88, 89.

33. எம்.ரீ.எம். ஜிப்ரி எதிர் நோனா பிந்தானா 62 NLR 255.

### அத்தியாயம் 03

## ஏற்புடைத்தான சட்டம்

காதிநீதிமன்றம், காதிகள் சபை என்பனவற்றின் நடைமுறைகளுக்கு ஏற்புடைத்தான சட்டத்தைப் பற்றி ஆராய்தல் இப்போது அவசியமாகும். இலங்கையில் திருமணம் தொடர்பிலான விடயங்கள் நியதிச் சட்டங்களினால் ஆளப்படுகின்றன. 1907ம் ஆண்டு சட்டமாக்கப்பட்ட திருமணப் பதிவுகள் சட்டம் அல்லது பொதுத் திருமணச் சட்டம், முஸ்லிம்களின் திருமணம் தவிர்ந்த ஏனைய திருமணங்கள் தொடர்பிலான சட்டக் கோவையாகவும், திருத்தச் சட்டமாகவும் காணப்படுகின்றது.[34] இச்சட்டத்தின் பிரிவுகள், கண்டிய விவாக, விவாகரத்துச் சட்டத்தின் கீழான திருமண ஒப்பந்தங்கள் மற்றும் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த இருவருக்கிடையிலான திருமண ஒப்பந்தங்கள் தவிர்ந்த ஏனைய எல்லாத் திருமணங்களுக்கும் ஏற்புடையது.[35] 1951ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டமானது இலங்கையைச் சேர்ந்த எல்லா முஸ்லிம்களினதும் திருமணம், விவாகரத்து தொடர்பிலான ஏனைய விடயங்களுக்கு ஏற்புடைத்தானது.[36]

இவ்வேளையில், ஒரு முஸ்லிம் ஆணுக்கும் அஹ்லுல் கிதாப் என்றழைக்கப்படும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த முஸ்லிமல்லாத ஒரு பெண்ணுக்குமிடையில் நடைபெறும் திருமணத்தின் வலிதுடைமை பற்றி அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளதை அவதானிப்பது முக்கியமாகும். சூறா மாயிதாவில் அல்லாஹுத்தஆலா பின்வருமாறு கூறுகின்றான்;

> "முஃமினான கற்புடைய பெண்களும்,
> உங்களுக்கு முன்னுண்டான வேதங்
> கொடுக்கப்பட்டவர்களிலுள்ள கற்புடைய பெண்களும்
> உங்களுக்குத் திருமணம் செய்வதற்கு
> ஹலாலாக்கப்பட்டுள்ளனர்".[37]

இருந்தாலும் இத்திருமணம் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த இருவருக்கிடையே நடைபெறும் திருமணமாக மாட்டாது. அத்தோடு, முஸ்லிம் விவாக, விவாகரத்துச்

---

34. 1907ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கத் திருமணப் பதிவுகள் சட்டம். இச்சட்டம் பின்னர் திருத்தப்பட்டது. மேற்கோள்கள் சட்டத்திற்கு முன்னரானது.
35. மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 64.
36. 1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (இச்சட்டமானது 1951ஆம் ஆண்டின் 31ஆம் இலக்கச் சட்டம், 1955ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டம், 1965ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கச் சட்டம், 1969ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டம், 1975ஆம் ஆண்டின் 41ஆம் இலக்கச் சட்டம் என்பனவற்றினால் திருத்தப்பட்டது) இச்சட்டத்தின் பிரிவு 2.
37. புனித அல்குர்ஆன் (அப்துல்லா யூசுப் அலியினால் பதிப்பிக்கப்பட்டது) சூறத்துல் மாயிதா, ஆறாவது வசனம்.

சட்டத்தினால் ஆளப்படவும் மாட்டாது. இத்திருமணங்கள் பொதுத் திருமணச் சட்டத்தினாலேயே ஆளப்படும்.

ஒரு இஸ்லாமியத் திருமணம் அல்லது விவாகரத்தின் வலிதுடைமையோ அல்லது வேறு விடயங்களோ திறத்தவர்கள் எந்தப்பிரிவினால் ஆளப்படுகின்றனரோ, அந்தப் பிரிவின் முஸ்லிம் சட்டத்திலேயே தங்கியுள்ளது என்று 1951ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் கூறுகின்றது.[38]

திருமணம், விவாகரத்துத் தொடர்பிலான எல்லா விடயங்கள், திறத்தவர்களின் தரம், பரஸ்பர உரிமைகள், பொறுப்புகள் என்பன அனைத்துமே, அவர்கள் எந்தப் பிரிவினால் ஆளப்படுகின்றனரோ, அந்தப் பிரிவின் முஸ்லிம் சட்டத்திலேயே தங்கியுள்ளதென, இச்சட்டம் மேலும் கூறுகின்றது.[39] இதன் பிரகாரம், இச்சட்டத்தில் ஏதேனும் ஒரு விடயத்திற்கு ஏற்பாடுகள் எதுவும் இல்லாத சந்தர்ப்பத்தில், முஸ்லிம் சட்டம் ஏற்புடைத்தாகும்.

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டமானது, இலங்கையின் விவாக, விவாகரத்துப் பதிவுகள் சட்டம் அல்லது கோவைக்கு அப்பால் உருவாக்கப்பட்ட முதலாவது நியதிச்சட்டம் என வர்ணிக்கப்படுகின்றது.[40] ஆனால் இச்சட்டமானது, முஸ்லிம் சட்டம் என்றால் என்ன? என்பது பற்றியோ, அல்லது 'மதப்பிரிவு' என்பதற்கான வரைவிலக்கணம் பற்றியோ, திறத்தவர்கள் ஆளப்படும் பிரிவிற்கான முஸ்லிம் சட்டத்தின் மூலம் அல்லது மூலங்கள் எவை என்பன பற்றியோ குறிப்பிடவில்லை.

## "மதப்பிரிவு" என்ற பதத்திற்கான இலங்கை நீதிமன்றங்களின் பொருள் கோடல்

இஸ்லாத்தில் 'சுன்னி', 'ஷியா' எனும் இரு பெரும் பிரிவுகள் உண்டு. இதில் பெரும்பான்மையான முஸ்லிம்கள் 'சுன்னி' பிரிவைச் சேர்ந்தவர்கள். சட்டக் கோட்பாடுகளின் அடிப்படையில், 'சுன்னி' பிரிவைச் சேர்ந்தவர்கள் நான்கு வேறுபட்ட சட்டக் கோட்பாடுகளையுடைய பிரிவினராகக் காணப்படுகின்றனர். இவர்கள் அச்சட்டக் கோட்பாடுகளை உருவாக்கியவர்களின் பெயர்களின் அடிப்படையில், ஹனபி, மாலிக்கி, ஷாபி, ஹன்பலி என அழைக்கப்படுகின்றனர். 'ஷியா' பிரிவினர் இத்னா, அஸாரி, இஸ்மாயிலி எனும் மூன்று பெரும் பிரிவுகளினுள் உள்ளடக்கப்படுகின்றனர். (போரா இனத்தவர்களை உள்ளடக்கும்

38. மேற்குறிப்பு 26இல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 16.

39. மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 98 (2).

40. T.E. Gooneratne, An Historical Outline of the Development of the Marriage and Divorce Laws applicable to the Muslims in Ceylon, Appendix B to the Report of the Commission on Marriage and Divorce, Sessional Paper No. XVI of 1959 at P 188.

தாவூதி எனும் உபபிரிவு ஒன்றும் உண்டு) அத்தோடு 'ஸெய்தி' எனும் பிரிவும் உண்டு.[41]

இலங்கை முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் 'ஷாபி' பிரிவினைச் சேர்ந்தவர்கள் என எமது நீதிமன்றங்கள் கருதுகின்றன. ஆகவே 'ஷாபி' க் கோட்பாடு ஏற்புடைத்தானது என்றும் கொள்கின்றன.[42] வேறுவிதமாக நிரூபிக்கும் வகையில் சாட்சிகள் எதுவுமில்லாதபோது, திறத்தவர்கள் 'ஷாபி' பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றே கருதப்படுவார்கள் என சில வழக்குகளில் எமது நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன.[43, 44]

குறிப்பான சட்டவாக்கங்கள் இல்லாத "நன்கொடை" போன்ற விடயங்களில், திறத்தவர்கள் எப்பிரிவினால் ஆளப்படுகின்றார்களோ, அப்பிரிவிற்குரிய சட்டம் ஏற்புடைத்தானது என எமது நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன. ராமுப்பிள்ளை எனும் வழக்கின் தீர்ப்பில் நீதியரசர் ஜெமீல் பின்வருமாறு கூறியுள்ளார்:- "தனியாள் சட்டம் தொடர்பிலான விடயங்களில் இலங்கையில் முஸ்லிம்கள் (அதாவது இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்கள் - இவர்கள் இலங்கை முஸ்லிம்கள், இலங்கை மலேயர்கள், சிங்களவர்கள், தமிழர்கள் அல்லது வேறு ஏதேனும் இனம் அல்லது தேசியத்தைச் சேர்ந்தவராயினுஞ்சரி), முஸ்லிம் சட்டத்தினால் ஆளப்படுகின்றார்கள். அதிலும் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களோ, அந்தப் பிரிவிற்கு ஏற்புடைத்தான சட்டத்தினால் ஆளப்படுவார்கள்".[45]

எனினும், ஷாபிக் கோட்பாடு எனும் போது அது ஒரு 'வழி அல்லது மத்ஹபு' தவிர, ஒரு பிரிவு அல்ல.[46] பிரிவிற்கும் கோட்பாட்டிற்கும் இடையில் ஒரு தெளிவின்மை காணப்படுகின்ற போதிலும் கூட, இவையிரண்டும் ஒன்றல்ல என்பது உம்முல் மர்சூனா எதிர் ஸமட் எனும் வழக்குத் தீர்ப்பின் மூலம் தெளிவாகின்றது.

> "ஹனபி பிரிவைச் சேர்ந்த முஸ்லிம்கள் இலங்கையில் உள்ள போதிலும் - (பார்க்க அப்துல் காதர் எதிர் றாசீக் 54 NLR 201, ஏ.எல்.எம். ஹனிபா எதிர்

---

41. For an extremely interesting exposition of the various Sects and Schools of Muslim Law, see C.G.Weeramantry, Islamic Jurisprudence:An International Perspective ( 1988 edition), Chapter 4 Pages 46 to 58. For a brief description, see L.J.M. Cooray, An Introduction to the Legal System of Sri Lanka ( 1991edition) Page 132.
42. அபீபுத்தின் எதிர் பெரியதம்பி 14 NLR 295, 300 (நீதியரசர் மிடல்டன்).
43. மஸ்கத்தி உம்மா எதிர் லெப்பே மரிக்கார் 10 NLR 1, மரிக்கார் எதிர் மரிக்கார் 18 NLR 446, முஹம்மது காசிம் எதிர் காசி வெ்வை 29 NLR 136, நோனாகஜா 32 NLR 63, உம்முல் மர்சூனா எதிர் சமட் 79 NLR 209.
44. அபீபுத்தின் எதிர் பெரியதம்பி 14 NLR 295, பக்கம் 300 ல் ஷாபி மத்ஹப் தொடர்பான விடயம் பற்றி நீதியரசர் மிடல்டன் விசேடமாகக் குறிப்பிட்டுள்ளார்.
45. ராமுப்பிள்ளை எதிர் பொதுநிர்வாக, பிரதேச சபை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் (1991) I SLR 11, 47 நீதியரசர் ஜெமீல்.
46. Hamilton A.R. Gibb, Mohammedanism (1955 edition), page 82; H.M.Z. Farouque, Muslim Law in Ceylon: An Historical Outline, 4 MMDLR 1 page 26, footnote 67.

ஏ.ஏ. றஸாக் 60 NLR 287) இலங்கை முஸ்லிம்கள் 'ஙபிப் பிரிவைச் சேர்ந்த 'சுன்னிகள்'' என, வாப்பு மரிக்கார் எதிர் உம்மானியும்மா 14 NLR 225, 226இல், நீதியரசர் வூட்ரென்டர் கூறியுள்ளார். மறுதலிக்கக் கூடிய சாட்சிகள் எதுவுமில்லாத பட்சத்தில், திறத்தவர்கள் 'ஙபிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும், அச்சட்டக்கோட்பாடுகளும் வழிகளுமே அவர்களுக்கு ஏற்புடைத்தாகும்[47] எனவும் அத்தீர்பிற் கூறப்பட்டுள்ளது''.

ஒருவர் எந்தப் பிரிவின் எக்கோட்பாட்டைப் பின்பற்றுகிறாரோ, அந்தக் கோட்பாட்டினாலேயே அவர் கண்டிப்பாக ஆளப்படுவார். ஆகவே, ஒருவர் வேறொரு கோட்பாட்டைச் சேர்ந்தவராகப் பிரகடனம் செய்யப்படாத வரையில், அவருக்கு, அவருடைய கோட்பாட்டு வழிகளிலிருந்து மாறுவதற்குச் சுதந்திரம் இல்லை. ஏ.எல்.எம். ஹனிபா எதிர் ஏ.ஏ.றஸாக்[48] எனும் வழக்கில் ஒரு பெண்ணின் திருமண ஒப்பந்தத்திற்கு, அவளது வலியின் அனுமதி தேவை என்ற ஷாபிச் சட்டத்தின் விதியைப் பின்பற்றுவதைத் தவிர்த்து, வலியின் விருப்பத்திற்கெதிராகத் திருமணம் செய்யத் தீர்மானிக்கும் ஷாபிப் பிரிவைச் சேர்ந்த பெண், அவ்வாறு திருமணம் செய்வதாயின் ஹனபி பிரிவிற்கு மாற வேண்டும்[49] எனக் கூறப்பட்டுள்ளது.

## மத்ஹபின் தத்துவம்

இத்தகைய இறுக்கமான போக்குகளை, மத்ஹபுகளின் தத்துவங்களுடன் ஒருமைப்படுத்தலாமா என்பது வினாவிற்குரியது. விசேடமாக, இமாம் ஷாபி அவர்கள், இமாம் மாலிக் அவர்களின் மாணவன்: இமாம் ஷாபி அவர்களின் ஒரே மகன், இமாம் ஹன்பலிடம் கல்வி கற்றவர். இமாம் அபூஹனிபா அவர்கள் இவ்வுலகை நீத்த அதே நாளில்தான் இமாம் ஷாபி அவர்கள் பிறந்தார்கள் என்று கூறப்படுகின்றது. இமாம் ஷாபி அவர்களின் வாழ்க்கைக் குறிப்பிலிருந்து 'ஒரு பகுதி கீழே தரப்படுகின்றது:

> 'அல் ஷாபி அறிஞரை மிகவும் மதிப்பவர். இமாம் மாலிக் அவர்களைப் போன்று அறிவிற் பூரணத்துவமானவர் வேறு யாருமில்லை என்பது இவரது கருத்து. இமாம் மாலிக்கும் சுபியான் பி. உயைனாவும் இல்லாதிருந்தால், ஹிஜாஸில் ஹதிஸ்கள் காணாமற் போயிருக்கும் எனக் கூறியுள்ளார். இமாம் அபூஹனிபா அவர்களின் கொள்கைகளிலிருந்து, இவரது கொள்கை மாறுபட்டிருந்த போதிலும் கூட 'பிக்ஹு விடயத்தில் நாம் அனைவரும் இமாம் அபூஹனிபாவைப் பின்பற்றுபவர்களே' என்று ஒரு சந்தர்ப்பத்தில் கூறியுள்ளார்.

---

47. உம்முல் மர்சூனா எதிர் சமட் 79 NLR 209, 211 நீதியரசர் வைத்திலிங்கம்.
48. 60 NLR 287. அப்துல் காதர் எதிர் ராசிக் 54 NLR 201 (PC).
49. மேற்குறிப்பு 36இல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 25 (1).

இமாம் அபூஹனிபாவின் புனித தலத்தில் ஓரிரவு தங்கும் போது, பிஸ்மில்லாஹ்வை உரத்து ஓதுவதைத் தவிர்த்து இஷா, சுபஹ்"த் தொழுகைகளையும், குனூத் ஓதுவதைத் தவிர்த்து சுப்ஹு"த் தொழுகையையும் ஒரு ஹனபி போன்று நடத்தினார்கள். அத்தோடு இமாம் ஹனிபா அவர்களின் தலத்தில் நாம் அவர்களைக் கண்ணியப்படுத்த வேண்டும் என்பதற்காகவே தாம் அவ்வாறு நடந்து கொண்டதாகவும் தெளிவுபடுத்தினார்".[50]

ஹனபி, மாலிக்கி, ஷாபி, ஹன்பலி கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள் என மனிதர்களை இறுக்கமாகப் பாகுபடுத்துதல் அல்குர்ஆனின் சில கட்டளைகளுக்கு உடன்பாடானவையல்ல எனும் கருத்தும் நிலவுகின்றது.[51] மதத்தை இவ்வாறு பிரிவுகளாகப் பிரிக்கும் போது இஸ்லாத்தின் ஒற்றுமை உடைக்கப்படுகின்றது என சூறா அன்ஆமில் அல்லாஹு"த்தஆலா தனது வெறுப்பைக் கூறியுள்ளான். நபி முகம்மத் (ஸல்) அவர்களைப் பார்த்து அல்லாஹ் கூறுகிறான்:

"நிச்சயமாக எவர்கள் தங்களுடைய
மார்க்கத்தைப் (பலவாறு) பிரித்து,
பல பிரிவினர்களாகிவிட்டனரோ,
அவர்களின் எந்தக் கருமத்திலும் நீர் இல்லை.
அவர்களுடைய காரியம்
அல்லாஹ்வின் பால் உள்ளதாகும்.
பின்னர் அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றை (மறுமையில்)
அவர்களுக்கு அவன் அறிவிப்பான்".[52]

இவ்வசனத்தைப் பற்றி அப்துல்லா யூசுப் அலி பின்வருமாறு விபரிக்கின்றார். 'பாரக்கு' எனப்படும் 'மதத்தைப் பிரித்தல்' எனும் பொருள் தரும் அரபுச் சொல்லானது பின்வரும் நான்கு வகைகளை உள்ளடக்கும். (1) ஒரு பகுதியை மற்றப்பகுதிகளிலிருந்து வேறுபடுத்தி, பொருத்தமானதில் பங்கு கொண்டு மற்றவற்றிலிருந்து ஒதுங்குதல். அல்லது (2)வாரத்தில் ஒரு நாளில் மாத்திரம் மதத்தைப் பின்பற்றுதல், மற்ற 6 நாட்களும் உலகத்திற்காக நடத்தல் (3) மதம், முழுவாழ்க்கையையும் ஆட்படுத்த முடியாத ஒன்று எனக் கருதி 'மதத்தைச் சரியான இடத்தில் வைத்தல்'. லௌகீகத்திற்கும், மதத்திற்கும் இடையிலான ஆழமான வேறுபாட்டை ஏற்படுத்துதல் (4) இஸ்லாமிய ஒருமைப்பாட்டை உடைக்கக் கூடிய வகையில் ஒரு பக்கச் சார்பாய் இருத்தலோடு, நோக்குகளிலும் வேறுபாடுகளைக் காட்டல்.[53]

---

50. Mapillai Alim, Fat-hud-Dayyan fi Fiqhi Khairil Adyan, (Translated by Saifuddin J.Aniff-Doray) (1963 edition) page 534.

51. Saleem Marsoof, Fallacies of Muslim Law (1996-1997) Meezan page 63 at page 66.

52. புனித அல்குர்ஆன் (அப்துல்லா யூசுப் அலியினால் பதிப்பிக்கப்பட்டது) சூரத்துல் அல் - அனாம் அத்தியாயம் VI வசனம் 159.

53. மேற்குறிப்பிடப்பட்ட பிரசுரத்தின் 985ஆம் குறிப்பு.

## பிரயோகப்படுத்தலில் ஏற்படும் பிரச்சினைகள்

சட்டத்தைப் பிரயோகப்படுத்துவதில்தான் மிகவும் முக்கியமான பிரச்சினை எழுகின்றது என்பது எமக்கு இதிலிருந்து தெளிவாகின்றது. உதாரணமாக, ஷாபி மத்ஹபைப் பின்பற்றுகின்ற ஒரு பெண்ணுக்கும், ஹனபி மத்ஹபைப் பின்பற்றுகின்ற ஓர் ஆணுக்கும் இடையிலான திருமணத்தை எடுத்துக் கொள்வோம். "திருமணம் செய்பவர்கள், எந்தப் பிரிவினைச் சேர்ந்தவர்களோ, அந்தப் பிரிவினாலேயே அவர்கள் ஆளப்படுவார்கள் என முஸ்லிம் சட்டம் கூறுகின்றது".[54] சில திருமண நிகழ்வுகளைப் பற்றி நாம் சிந்திப்போம். ஒரு பெண், வலியின் அல்லது காதிநீதவானின் சம்மதமின்றித் திருமணம் செய்யுமிடத்து அது வலிதான திருமணமாகுமா? ஏ.எல்.எம். ஹனிபா எதிர் ஏ.ஏ.றசாக்[55] என்ற வழக்கிலே, அவ்வாறு திருமணம் செய்வதற்கு அப்பெண்ணுக்கு எவ்வித சட்டபூர்வ அதிகாரமும் கிடையாது: எனினும் அப்பெண்ணைத் திருமணம் செய்யும் ஆண் எந்தப் பிரிவைச் சேர்ந்தவரோ, அந்தப் பிரிவில் அத்தகைய திருமணம் அனுமதிக்கப் பட்டதாக இருக்குமாயின், அவர் அதற்கெதிராக வாதாடலாம். அடுத்த சந்தர்ப்பத்தைப் பார்ப்போம். அதாவது, அப்பெண் வலியின் சம்மதத்தைப் பெற்றிருக்கிறாள். ஆனால், 'நிகாஹ்' இற்கு சாட்சியாக, ஒரு ஆணும் இரு பெண்களும் மாத்திரமே இருக்கின்றனர். இத்தகைய சந்தர்ப்பத்தில் ஹனபி சட்டத்தின் பிரகாரம் அத்திருமணம் வலிதானது.[56] ஆனால் ஷாபி சட்டத்தின் பிரகாரம் அது வெறிதானது.[57] திறத்தவர்கள் எந்தப் பிரிவினைச் சேர்ந்தவர்களோ, அந்தப்பிரிவிற்குரிய சட்டத்தின் பிரகாரமே அவர்கள் ஆளப்படுவார்களாயின், மேற்கூறிய சந்தர்ப்பங்களில் எந்தச் சட்டத்தைப் பின்பற்றுவது? ஷாபி சட்டத்தையா? அல்லது ஹனபி சட்டத்தையா?[58]

சட்டங்களை வெவ்வேறு பிரிவுகளுடன் இணைத்துப் பார்ப்பதன் மூலம் இலங்கையின் முஸ்லிம் சட்டத்தில் பல சிக்கலான பிரச்சினைகள் உருவாகின்றன. இலங்கையில் முஸ்லிம் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் நீதிமன்றங்களில் இது பல விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்துவதோடு, இது சட்டத்துறை அபிவிருத்தியிலும் கூடப் பின்னடைவை ஏற்படுத்துகின்றது. குர்சித் பீபி எதிர் முஹம்மத் அமீன்[59] என்ற வழக்கில், திருமணம் முறிந்து விட்டது

---

54. மேற்குறிப்பு 36இல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 16.
55. 60 NLR 287. அப்துல் காதர் எதிர் ராசிக் 54 NLR 201 (PC).
56. Tahir Mahamood, The Muslim Law of India (1982 edition) page 53.
57. A.R.I.Doi, Shariah: The Islamic Law (1984 edition) page 138
58. சாராதரணமாக எவரேனும் ஒருவர் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 1876ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கத் திருமண உரிமைகள், வழியுரிமைகள் சட்டத்தின் பிரிவு 2ஐ உபயோகப்படுத்த முடியாது. ஏனெனில், திறத்தவர்களிடையே வலிதானதொரு திருமணம் நடைபெற்றுள்ள சந்தர்ப்பத்திலேயே இது ஏற்புடைத்தாகும். சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உதாரணங்களின் மூலம் இது தெளிவாகும். அத்துடன், ஒரே இனத்தையோ தேசியத்தையோ கொண்ட ஆண், பெண் சம்பந்தப்படும் சந்தர்ப்பத்தில் இப்பிரிவு ஏற்புடைத்தாகாது. மெனிக்கா எதிர் பெரேரா 4 NLR 243, பண்டாரநாயக்க எதிர் பண்டாரநாயக்க 24 NLR 245.
59. (1967) XIX PLD 97.

என்பதை ஒரு பெண்ணினால் நிரூபிக்க முடியுமாயின், அவள், தனது கணவனின் விருப்பத்திற்கெதிராகவும் கூட, குலா முறையில் விவாகரத்துப் பெறலாம் என பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. பாரம்பரியமாக ஹனபி மத்ஹபைப் பின்பற்றி வரும் பாகிஸ்தான், இவ்விடயம் தொடர்பில் இமாம் மாலிக்கின் கொள்கையைப் பின்பற்றியது. ஆனால் இலங்கை உயர் நீதிமன்றம் இதே நிகழ்வுகளை ஒத்த பாத்திமா மிர்ஸா எதிர் அன்சார்[60] எனும் வழக்கில், ஷாபி சட்டத்தைக் கட்டாயம் பின்பற்றக் கடப்பாடுடையது எனக் கொண்டு, அவ்வாறே செய்தது. அதனால் துரதிஷ்டமான அம்மனைவியை மௌனத் துன்பத்தில் விட்டுவிட்டது.

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 16இல் குறிப்பிடப்பட்டுள்ள 'மதப்பிரிவு' (Sect) என்பது சுன்னி, ஷியா பிரிவுகளையே குறிப்பிடுகின்றது என்பது விளக்கப்படுவதின் மூலமே, அது தொடர்பிலான ஒரு சிறந்த கொள்கையை அடைய முடியும்.[61] சுன்னிப் பிரிவின் பிரகாரம், ஒரு வழக்கை விசாரிக்கும் காதிநீதவானுக்கு, அவ்வழக்கில், ஒரு நீதியான தீர்ப்பைப் பெறுமுகமாக, ஷாபி, ஹனபி, மாலிக்கி, ஹன்பலி ஆகிய மத்ஹபுகளில் எம்மத்ஹபின் கருத்துக்களைப் பின்பற்றுவதற்குமான சுயாதீன உரிமை உண்டு என்பனபோன்ற கொள்கைகளைப் பின்பற்றுவதன் மூலம், சட்டத்தைப் பிரயோகப்படுத்தும் முறைகளிலும், சுன்னி சட்டத்திலும் ஒரு சிறந்த திருப்பத்தை ஏற்படுத்தலாம்.

60. 75 NLR 295, 296 – நீதியரசர் சமரவிக்கிரம.

61. மேற்குறிப்பு 36இல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 25 (1)இல், இது தொடர்பில் திருத்தம் அவசியமாகின்றது.

### அத்தியாயம் 04

# நிலையான சட்டம் : சில அடிப்படைப் பிரச்சினைகள்

சட்டத்தைப் பிரயோகப்படுத்தலில் ஏற்படும் சிக்கல்கள் தவிர, இன்னும் பல அடிப்படைப் பிரச்சினைகள், முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் உள்ளன. அவை, மிக அவசரமாகக் கவனத்தில் எடுக்கப்படவேண்டிய விடயங்களாகும். அவற்றில் முக்கியமானவை பால்ய திருமணம், பெண்ணின் சம்மதமும் கையெழுத்தும், பல்தாரமணம், மதமாற்றம், திருமணத்தில் கடைப்பிடிக்கவேண்டிய விதிகள், விவாகரத்துச்சட்டத்தின் சமனற்ற தன்மை என்பனவாகும்.

## பால்ய திருமணம்

பால்ய திருமணம் என்பது இரு வகையான திருமணங்களை உள்ளடக்குகின்றது

(அ) பராய வயதையடையாத சிறுமிக்கு அச்சிறுமியின் சம்மதத்துடனோ அல்லது சம்மதமில்லாமலோ வலியினால் ஒப்பந்தம் செய்யப்படும் திருமணம்.

(ஆ) பராய வயதையடைந்த சிறுமி[62] வலியின் சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி அச்சிறுமியினால் ஒப்பந்தம் செய்யப்படும் அல்லது அச்சிறுமியின் சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி வலியினால் ஒப்பந்தம் செய்யப்படும் திருமணம்.

இலங்கையின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம்,[63] திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயதெல்லையைக் குறிப்பிடவில்லை.[64] ஆனால் 12

62. 'சிறுவர்' என்பது பல்வேறு விதமாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, பாகிஸ்தானின் 1929ஆம் ஆண்டின் பால்ய திருமணத் தடுப்புகள் சட்டம், 18 வயதுக்குக் குறைந்த ஆண்களையும், 16 வயதுக்குக் குறைந்த பெண்களையும் 'சிறுவர்' எனக் கணிக்கின்றது. இந்தியாவின் 1929ஆம் ஆண்டின் பால்ய திருமணத் தடுப்புகள் சட்டம் 18 வயதுக்குக் குறைந்த ஆண்களையும், 15 வயதுக்குக் குறைந்த பெண்களையும் 'சிறுவர்' எனக் கணிக்கின்றது. சிங்கப்பூரின் 1968ஆம் ஆண்டின் முஸ்லிம் சட்ட நிர்வாகத்தில், 16 வயதுக்குக் குறைந்த ஆண்களும், பெண்களும் 'சிறுவர்' எனக் கணிக்கப்படுகின்றனர்.

63. 1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (இச்சட்டமானது 1951ஆம் ஆண்டின் 31ஆம் இலக்கச் சட்டம், 1955ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டம், 1965ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கச் சட்டம், 1969ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டம், 1975ஆம் ஆண்டின் 41ஆம் இலக்கச் சட்டம் என்பனவற்றினால் திருத்தப்பட்டது) இச்சட்டத்தின் பிரிவு 64.

64. திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயதெல்லை 18 என, 1995ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கத்தினால் திருத்தப்பட்ட 1907ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கத் திருமணப் பதிவுகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அது இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கிடையிலான திருமணத்தின் போது ஏற்புடைத்தானதல்ல. (பிரிவு 64)

வயதுக்குட்பட்ட ஒரு பெண்ணின் திருமணம், அப்பெண் வாழும் பிரதேச காதிநீதவானின் (தேவையான விசாரணைகளின் பின்னர்) அங்கீகாரமின்றிப் பதிவு செய்யப்பட முடியாது என முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 23 கூறுகின்றது. இப்பிரிவானது, காதிநீதவானின் அங்கீகாரமின்றிச் செய்யப்படும் திருமணத்தைத் தடைசெய்யும் வகையில் எதையும் கூறவில்லை. ஆனால் பிரிவு 16 ஆனது, முஸ்லிம்கள் ஆளப்படுகின்ற பிரிவின் சட்ட ஏற்பாடுகள், பதிவு செய்யப்படாத திருமணம், வலிதான திருமணமெனவும், பதிவு செய்யப்படாத காரணத்தினால் ஒரு திருமணம் வெறிதாகமாட்டாது எனவும் கூறுகின்றது. ஆகவே, பால்ய திருமணம் இலங்கையில் வலிதானதாகவும், சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டதொன்றாகவுமே உள்ளது.[65] ஆயினும், சமூக நலனைக் கருத்திற் கொண்டு, பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவதன் மூலம் இத்தகைய செயற்பாடுகளை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று, காதிகள் சபை கூறுகின்றது.[66]

பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் குற்றவியல் தடுப்பு முறைகளினால் பால்ய திருமணம் தடைசெய்யப்பட்டுள்ளது.[67] சிங்கப்பூரில் விசேட சந்தர்ப்பங்களில், 16 வயதையடையாத ஆனால், பருவமடைந்த பெண்களின் திருமணம் காதிநீதவானின் அங்கீகாரத்துடன் நடைபெறலாம் எனக் கூறப்பட்டிருந்த போதிலும் கூட, இது தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் குற்றவியல் தடுப்பு முறையினால் தடைசெய்யப்பட்டுள்ளது.[68]

ஷாபி மத்ஹபின் பிரகாரம், திருமண ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்குத் தகுதியற்ற வயதையுடைய சிறுவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் அதிகாரம், தந்தைக்கும், தந்தைவழிப் பாட்டனுக்கும் உண்டு.[69]

மின்ஹாஜுல் தாலிபின் பின்வருமாறு கூறுகின்றது:

> "ஒரு கன்னிப் பெண், எவ்வயதையுடையவளாயிருந்தாலும் சரி, அப்பெண்ணின் தகப்பன் அவளது சம்மதமின்றி அப்பெண்ணிற்குத் திருமணம் செய்து வைக்கலாம். ஆனால் அத்திருமணம், மற்றும் எதிர்காலக் கணவன் தொடர்பில் அப்பெண்ணின் சம்மதம் தேவை எனும் வாதப் பிரதிவாதங்களும் உண்டு. ஆனால், ஒரு கன்னியல்லாத பெண்ணின்

---

65. முஹம்மது லெப்பை எதிர் முஹம்மது தம்பி 1 MMDLR 40, முஹியத்தின் பாவா எதிர் செயிலத்தும்மா 2 MMDLR 53.
66. முஹியத்தின் பாவா எதிர் செயிலத்தும்மா 2 MMDLR 53, 55.
67. 1929ஆம் ஆண்டின் பால்ய திருமணத் தடுப்புகள் சட்டம் - பாகிஸ்தான், 1929ஆம் ஆண்டின் பால்ய திருமணத் தடுப்புகள் சட்டம் - இந்தியா.
68. 1968ஆம் ஆண்டின் சிங்கப்பூர் முஸ்லிம் சட்ட நிர்வாகம், பிரிவு 90 (4)இன் ஷரத்து.
69. ஜப்ர் ஆகத் தகப்பன் மாத்திரமே செயற்படவேண்டுமென மாலிக்கி, ஹன்பலி சட்டங்கள் கூறுகின்றன. ஷாபி, ஹனபிச் சட்டத்தின் பிரகாரம் ஏனைய தந்தை வழி உரித்துளர்களும் செயற்படலாம். ஹமில்டன், ஹிதாயா பாகம் I புத்தகம் II அத்தியாயம் II, 36-37.

> திருமணத்திற்கு அவளது சம்மதம் அவசியமாகும். பராயமடையாத ஒரு பெண்ணிற்குத் தகப்பன் 'திருமணம் செய்து வைத்தாலும், அப்பெண் பராயமடையும் வரை அவள், அவளது கணவனிடம் ஒப்படைக்கப்பட மாட்டாள். இதைத் தகப்பன் செய்யத் தவறும் பட்சத்தில் அவ்வதிகாரம் தகப்பன் வழிப்பாட்டனுக்குச் செல்லும்."[70]

மின்ஹாஜின் பிரகாரம், "ஒரு பாதுகாவலர், தனது பாதுகாப்பிலுள்ள பெண்ணொருவரைத் தரக்குறைவான தகுதியைக் கொண்ட ஒருவருக்குத் அவளது பூரண சம்மதமில்லாத பட்சத்தில் திருமணம் செய்து வைக்க முடியாது".[71]

ஆறுவயதையுடைய ஆயி'ா நாயகியின், முஹம்மத் (ஸல்) அவர்களுடனான திருமணம் 9 வயதிலேயே முழுநிறைவு பெற்றதாகப் பாதுகாவலர்களின் அதிகாரம் பற்றி இமாம் புகாரி அவர்கள் விளக்கம் தருகையில் கூறுகின்றார்[72]. 3 மாத இத்தாக்காலம் பற்றிய குர்ஆனின் விளக்கத்தை மேற்கோள்காட்டி 'மாதவிடாய் இன்னும் ஏற்படாத பெண்களது திருமணம் சட்டபூர்வமானதும் வலிதானதுமாகும்'' என சஹிஹு'ல் புகாரி கூறுகின்றது.[73]

பராயமடையாதவர்கள் திருமணம் தொடர்பில் இஸ்லாத்தில் வழங்கப்பட்டுள்ள அனுமதியானது ஒரு கட்டாய விதியல்ல, ஒரு விதிவிலக்கு என்பதாக இமாம் முஸ்லிம் குறிப்பிட்டுள்ளார்.[74] அவர் மேலும் கூறியுள்ளதாவது:

> "சில சந்தர்ப்பங்களில் பால்ய திருமணத்தின் தேவை கட்டாயமாகின்றது. உதாரணமாக, ஒரு மனிதன் தீராத நோய்க்குட்பட்டுள்ளார்; தனது மரணம் மிகவும் அண்மையில் உள்ளதாக அவர் உணர்கின்றார். அதே வேளை அவரது மனைவியும் மரணித்து விட்டார்; அவரது இளம் பெண்மக்களைப் பாதுகாக்க யாருமில்லாத சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில், கணவர்மார் அவர்களைச் சிறந்த முறையில் ஆதரிப்பார்கள் என்ற உத்தரவாதம்/நம்பிக்கையுடன் தனது இளம் பெண்மக்களைத் திருமணம் செய்து வைத்தால் அதனை ஆட்சேபிப்பதற்கு எதுவுமில்லை".

இலங்கையில் ஏற்புடைத்தாகின்ற முஸ்லிம் சட்டத்தின் பிரகாரம் திருமணஞ் செய்து கொடுக்கப்பட்ட சிறுமியொருவருடன் பாலியல் தொடர்பு கொள்ளுதல் இலங்கையிற் தண்டனைக்குரிய குற்றமா? முஹம்மது லெப்பை எதிர் முஹம்மது தம்பி வழக்கில், நீதியரசர் மொன்சிறிப், பின்வருமாறு கூறுகின்றார்:

---

70. நவவி – மின்ஹாஜ் - உத் - தாலிபீன் 33ஆம் புத்தகம், அத்தியாயம் I, பிரிவு 4, 284.
71. நவவி – மின்ஹாஜ் - உத் - தாலிபீன் 33ஆம் புத்தகம், அத்தியாயம் I, பிரிவு 5, 288.
72. சஹீஹுல் புகாரி IIIஆம் பாகம் அத்தியாயம் 39.
73. புனித அல்குர்ஆன் - சூறா தலாக் அத்தியாயம் LXV 4ஆம் திருவசனம் (முஹம்மது வை. சியாத்தின் மொழிபெயர்ப்பு).
74. ஸஹீஹ் முஸ்லிம் பாகம் II அத்தியாயம் DXLVIII 3309ஆம் பந்தி, 1859ஆம் அடிக்குறிப்பு.

"குற்றவியல்கோவையின் பிரிவு 363இன் (1883ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கத் திருத்தப்பட்ட சட்டம்) பிரகாரம் 12 வயதிற்குக் குறைந்த சிறுமியுடன் பாலியல் தொடர்பு கொள்வது குற்றமாகும். இதுவே இச்சந்தர்ப்பத்திலும் ஏற்புடைத்தாகும்".[75] ஆயினும், முஸ்லிம் சட்ட ஆராய்ச்சிக் குழுவானது[76] பேராசிரியர் எச்.எம்.இசற் பாறுக்கின் கருத்தானது, 'ஓர் ஆண், தனது மனைவியாயினும், அப்பெண் 12 வயதிற்குக் குறைந்தவளாக இருந்தால், அவளது சம்மதத்துடனாயினுஞ் சரி, அவளுடன் பாலியல் தொடர்பு கொள்வது வல்லுறவுக் குற்றமாகும்',[77] என்பதனை ஏற்றுக்கொண்டுள்ளது. டாக்டர் அஹமத் இப்றாஹிம் பால்ய திருமணத்தின் தீய விளைவுகள் சிலவற்றைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்:

> "பால்ய திருமணம் எனும் போது, சிறுமிகள் திருமண வாழ்க்கைக்குத் தயாராக இருக்க மாட்டார்கள். அவர்கள் குறைந்தளவிலான கல்வியையே பெற்றிருப்பார்கள். இதனால் திருமணத்தின் பின்னர் ஏற்படும் பிரச்சினைகளால் அப்பெண்களே பாதிக்கப்படுகின்றார்கள். திருமணம் முறிந்தாலும், அப்பெண்களால் தொழில் செய்து சம்பாதிக்க முடியாத நிலை ஏற்படும். இதன் தொடராக, இவர்களது பிள்ளைகளையும் நவீன தரத்திற்கு வளர்த்தெடுக்க முடியாத நிலை ஏற்படும்".[78]

தகப்பனோ, தகப்பன் வழிப்பாட்டனோ வலியாக இல்லாது வேறு ஒருவர் வலியாக இருந்து நடைபெறும் ஒரு பால்ய திருமணத்தில், அப்பெண் பராயமடைந்த பின்னர் அத்திருமணத்தை இரத்துச் செய்யும் உரிமை அப்பெண்ணிற்கு ஹனபி சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. பராயமடைந்ததும் தேர்ந்தெடுக்கும் இவ்வுரிமை, ஹனபி சட்டத்திற்கு மாத்திரமே உரியது. மின்ஹாஜுத் தாலிபின் போன்ற ஷாபிக் கோட்பாடுகளில் இது தொடர்பில் எவ்வித ஏற்பாடுகளுமில்லை.[79] முஹியத்தின் எதிர் ஸெயிலத்தும்மா என்ற வழக்கில், திறத்தவர்கள் ஷாபி மத்ஹபைச் சேர்ந்தவர்களாயினும், பராயமடைந்த பின் தேர்ந்தெடுக்கும் உரிமை வெற்றிகரமாக வலியுறுத்தப்பட்டது.[80] ஆனால், பின்னர் தீர்க்கப்பட்ட வழக்குகளில், ஷாபி மத்ஹபைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு, பராயமடைந்த பின்னர் தேர்ந்தெடுக்கும் உரிமை தொடர்பில், எவ்வித அதிகாரமும் இல்லை என்பது வலியுறுத்தப் பட்டுள்ளது.[81]

மற்றொரு வகையிலான பால்ய திருமணம், (அதாவது ஒரு சிறுவனோ சிறுமியோ பருவ வயதையடைந்த போதிலும் அவர்கள் சிறுவர்களாகவே

---

75. 1 MMDLR 40,42.
76. In its Report published in (1978) 4 Colombo Law Review 57, 60.
77. H.M.Z Farouqe, "Muslim Law in Ceylon", 4 MMDLR 1, 12.
78. World Muslim League, Volume III No. 1 63-64.
79. See, Saleem Marsoof, "Marriage Laws of the Muslims in Sri Lanka" (1980), Meezan f.n.39; see also K.N. Ahmed, Muslim Law and Divorce (1978) 142.
80. 2 MMDLR 53.
81. நபீஸா உம்மா எதிர் சாலிஹ் 2 MMDLR 118.

கருதப்படுகின்றபோது திருமணம் நடைபெறும் சந்தர்ப்பத்தில்) இஸ்லாம், திருமணம் தொடர்பில் பராய வயதிற்கும், பருவ வயதிற்கும் எவ்வித வேறுபாடுகளையும் வழங்கவில்லை என்பதைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.[82] நாராயணன் எதிர் சாரி உம்மா வழக்கில் நீதியரசர் சம்பாயோ பின்வருமாறு கூறுகின்றார்: "முஹம்மதியன் சட்டத்தில் இரண்டு வகையிலான பராய வயதுகள் உண்டு. அவையாவன, ஒன்று, பாதுகாவலரின் தலையீடுகள் எதுவுமின்றித் திருமணம் செய்வதற்கான தகுதி, மற்றொன்று, பராய வயதையடைந்தவர் என்ற ரீதியில், ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய பொதுவான தகுதி என்பவையாகும்".[83] திருமணத்திற்கான பருவ வயதையடைதல் என்ற ரீதியில், ஒரு முஸ்லிம் பராய வயதையடையும் போது, தற்றுணிபுடைய வயதையடைந்தவர் என்ற ரீதியில், ஏனைய எல்லா விடயங்களிலும் பராய வயதையடைந்தவராகின்றார்.[84] ஒரு முஸ்லிம் சிறுவன், அவன் எந்தப் பிரிவுக் கோட்பாட்டைப் பின்பற்றுபவராக இருந்தாலும் சரி, தனது தெரிவில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்யும் உரிமையை, அவரது பருவ வயதையடைந்தவுடன் பெறுகின்றார்.[85] ஆனால், பருவ வயதையடைந்த ஷாபிக் கோட்பாட்டைப் பின்பற்றுகின்ற ஒரு பெண், அவள் எவ்வயதையுடையவளாயிருந்தாலும் திருமணத்திற்கு வலி அல்லது காதிநீதவானின் அதிகாரம் அவசியம்.[86] மாலிக்கி சட்டமும், சுயமாகத் திருமணம் செய்யும் பெண்களின் உரிமையைத் தடுக்கின்றது. ஆனால், இமாம் ஹனிபா, இமாம் அபூயூசுப் ஆகியோரின் கூற்றுப்படி உரிய வயதையடைந்த ஒரு பெண் தனது சொந்த விருப்பத்துடன் திருமண ஒப்பந்தத்தில் ஈடுபடலாம்.[87] எனவே ஏனைய பிரிவுக் கோட்பாடுகளைப் பின்பற்றும் பெண்களுக்கு ஹனபி சட்டமானது கவர்ச்சியானதாய் அமையும்.

முஸ்லிம் சட்டத்தினால் வழங்கப்பட்ட, (ஷாபி மத்ஹபைத் தவிர்ந்த) பருவ வயதையடைந்த பெண்கள் வலியின் சம்மதமின்றித் திருமணம் செய்யலாம் எனும் பொதுவான அதிகாரம், ஏற்கனவே குறிப்பிட்டவகையில் டாக்டர். அஹமத்

82. மின்ஹாஜ் - உத் - தாலிபீன் 33ஆம் புத்தகம், அத்தியாயம் I, பிரிவு 4, 284.

83. 21 NLR 439, 440.

84. அப்துல் காதர் எதிர் ராசீக் 52 NLR 156, புனித அல்குர்ஆன், சூறா நிஸா IV:6 (யூசுப் அலியின் மொழிபெயர்ப்பு).

85. புனித அல்குர்ஆன் சூறா நிஸா IV: 6 (யூசுப் அலியின் மொழிபெயர்ப்பு) பருவ வயதுச் சட்டத்தின் பிரிவு 2 ன் பிரகாரமாக பருவ வயது 21 என்ற விடயம், முஸ்லிம் சட்டப் பிரகாரமான பருவ வயது விடயத்தைப் பதிலீடு செய்யுமா என்பதில் சந்தேகம் காணப்படுகின்றது. அப்துல் காதர் எதிர் ராசீக் 54 NLR 201,202,203. C.G. Weeramanatry 'The Law of Contracts' (1967) பாகம் I, பிரிவு 450; பக்கம் 459-460, தெளிவான சட்டத்தின் மூலம் இச்சந்தேகங்கள் தீர்க்கப்பட வேண்டும். ஆனால் அல்குர்ஆனியக் கோட்பாட்டிலிருந்து மாற்றங் கொண்டு வரப்படும் போது அதற்கு நியாயம் கற்பிக்க முடியாது.

86. அடிக்குறிப்பு 63இல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 25 (1), ரோடா ரைட் எதிர் இப்றாஹிம் 3 MMDLR 131.

87. ஹனீபா எதிர் றஸாக் 60 NLR 287, ஹமில்டன், ஹிதாயா, பாகம் I புத்தகம் II அத்தியாயம் II, 34.

இப்ராஹிம் அவர்களின் பார்வையில், தனிப்பட்ட மற்றும் சமுதாய நலனிற்கு ஏதுவாக அமைகின்றதா என்ற அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வினா எழுகின்றது. "திருமணத்திற்கான சம்மதமும், திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயதெல்லையும்" என்ற 1962ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்தில் இலங்கையும் ஓர் அங்கத்தவர் என்ற வகையில், இவ்வொப்பந்தத்திற்கு முரண்படக்கூடிய வழக்காறுகளையும், பழமைவாய்ந்த சட்டங்களையும், நடைமுறைகளையும் இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய கட்டாயம் இலங்கைக்கு உள்ளது எனப் பேராசிரியர் சாவித்திரி குணசேகர கூறுகின்றார். அவர் மேலும் கூறியதாவது: 'இலங்கையின் முஸ்லிம் சட்டத்தின் பாரம்பரியக் கோட்பாடுகளுக்கு முரணான வகையில் இவை அமைந்திருந்தாலும் கூட, இவற்றிற்குரிய திருத்தங்கள் அறிமுகம் செய்யப்பட வேண்டும் என்பதில் தெளிவு காணப்படுகின்றது'.[88] ஆனால், இத்தகைய திருத்தங்கள் ஷரிஆவிற்கு ஏற்ற வகையில் அமையுமா என்பதில் இலங்கை முஸ்லிம்களிடையே பாரிய கேள்வி காணப்படுகின்றது.

"பாதுகாவலர்களின் அதிகாரம் தொடர்பிலான நடவடிக்கைகளில், குறிப்பிடக்கூடிய தடங்கள் எதுவுமின்றி ஷரிஆ சட்டமானது பரந்த கோட்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. இவ்விடயங்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள், ஷரிஆக் கோட்பாடுகளை விளங்கிய வகையில் அமைய வேண்டும். அத்துடன், சட்டத்தை வழங்குபவரின் எண்ணத்தையும் சட்ட ஒழுங்கையும் தெளிவுபடுத்துவதாக அமைய வேண்டும். இவை சட்டத்தை வழங்குபவரின் எண்ணத்தைப் பூரணப்படுத்தும் வகையில், கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும்" என்பதாக, அபூல் அலா மௌதூதி கூறுகின்றார்.[89] ஆகவே, பால்ய திருமணம் என்பது விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் நியாயப்படுத்தப்பட வேண்டியதே தவிர, பொதுவாக ஊக்கப்படுத்தப்பட வேண்டிய ஒரு விடயமல்ல.

முஸ்லிம் சட்ட ஆராய்ச்சிக்குழு, முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவுகள் 33, 47 என்பவற்றில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென்று சிபாரிசு செய்துள்ளது. 12-14 வயதுக்கிடைப்பட்ட பெண்களின் திருமண நிறைவேற்றலுக்கும், திருமணப் பதிவுக்கும் காதிநீதவானின் அங்கீகாரம் வழங்கப்படும் அதேவேளையில், 16 வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண்களினதும், 14 வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்களினதும் திருமண நிறைவேற்றலும், திருமணப் பதிவும், தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட வேண்டும் எனச் சிபாரிசு செய்யப்பட்டது.[90] காதிநீதவானின் அங்கீகாரத்துடன் செய்யப்படும்

88. Savithri Goonesekera. Sri Lanka Law on Parent and Child (1987) at P.318

89. Abul-ala-Maudadi, "Islamic Law and Constitution", (1960), 78.

90. முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டச் சீர்திருத்தத்திற்கான சிபாரிசுகள் - முஸ்லிம் சட்ட ஆராய்ச்சிக் குழுவினால் 1973ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை, (1978) 4 Colombo Law Review 57, 62.

திருமணத்திற்கான பெண்களின் வயதெல்லை 12 என்பது, தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 363ற்கு இணைக்கப்பாடாக அமைந்துள்ள போதிலும் கூட, அதே வகையில் 16 வயதுக்குக்கீழ்ப்பட்ட ஆண்களின் திருமணத்திற்கான அங்கீகாரம், காதிநீதவானினால் வழங்கப்பட வேண்டுமென்ற சிபாரிசு, குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் சிறந்ததொன்றாக அமையலாம்.

### பெண்ணின் சம்மதமும், கையெழுத்தும்

ஷாபிக்கிரந்தமான மின்ஹாஜுல் தாலிபீன் 'ஒரு கன்னிப் பெண்ணிற்கு எவ்வயதாயிருந்தாலும் சரி, அவளது சம்மதமின்றி அவளது தகப்பன் திருமணம் செய்து வைக்கலாம்'[91] எனக் கூறுகின்றது. ஒரு பருவ வயதையடைந்த பெண் (திருமணம் செய்வதற்குப் பராய வயதையடைந்த பெண்) தொடர்பில், இது பொருத்தமற்றதும், அல்குர்ஆனின் கோட்பாடுகளுக்கு முரணானதுமான ஒரு கருத்தாக அமைந்துள்ளது.[92]

சூறத்துன்னிஸா, திருமணத்தை ஒரு புனித ஒப்பந்தமாகக் குறிப்பிட்டுள்ளது.[93] சூறத்துன்அறப் ஆண், பெண் இருவரும் ஒருவரிலிருந்து மற்றவர் அமைதி பெறுவதற்காகப் படைக்கப்பட்டனர் எனக் கூறுகின்றது.[94] ஆணும், பெண்ணும் ஒருவருக்கு மற்றவர் ஆடையைப் போன்றவர் என்று சூறத்துல் பகறாவில் கூறப்பட்டுள்ளது. இது திருமணத்தின் மூலம் உருவாகும், பரஸ்பர ஒத்துழைப்பு, பரஸ்பர சௌகர்யம், பரஸ்பர பாதுகாப்பு என்பனவற்றை வலியுறுத்துகின்றது.[95] திருமணம் என்பது பரஸ்பர உரிமைகளையும், கடமைகளையும் உள்ளடக்கிய ஒரு புனிதமான ஒப்பந்தம்[96] எனும் போது, இது ஒரு பெண்ணின் சம்மதமின்றி எவ்வாறு நடைபெறலாம் என்பதை விளங்கிக் கொள்வது மிகவும் சிரமமாக உள்ளது. கணவனின் மகன்/சகோதரன், தகப்பனின் விதவை மனைவியை, அவரது சொத்துக்களுடன் தனதுடமையாக்கிக் கொண்ட இஸ்லாத்திற்கு முன்பிருந்த வழக்காற்றை இஸ்லாம் இல்லாதொழிக்கவில்லையா?

> "முஹ்மின்களே, உங்களுடைய உறவு வழிப்பெண்களை
> அவர்களின் விருப்பமின்றி நிர்ப்பந்தமாக
> நீங்கள் அனந்தரமாக்கிக் கொள்வது
> உங்களுக்கு ஆகுமானதல்ல".[97]

---

91. மின்ஹாஜ் - உத் - தாலிபீன் 33ஆம் புத்தகம், அத்தியாயம் I, பிரிவு 4, 284, யசீம் எதிர் நூர் நயீமா 3 MMDLR 113, ரோடா ரைட் எதிர் இப்றாஹிம் 3 MMDLR 130. மாலிக்கிச் சட்டத்திலும் இதே நிலைதான்.
92. புனித அல்குர்ஆன் சூறா அறப் VII: 189 சூறா றம் XXX: 21 (மொழிபெயர்ப்பு - யூசுப் அலி).
93. புனித அல்குர்ஆன் சூறா நிஸா IV: 21 (மொழிபெயர்ப்பு – யூசுப் அலி).
94. புனித அல்குர்ஆன் சூறா அறப் VII: 189 (மொழிபெயர்ப்பு – யூசுப் அலி), சூறா றம் XXX: 21.
95. புனித அல்குர்ஆன் சூறா பகரா 11: 187.
96. சிறாஜ் முஹம்மத் கான் எதிர் ஜான் முஹம்மது (1981) AIR (SL) 1972 – முர்தஸா பஸால் அலி.
97. புனித அல்குர்ஆன் சூறா நிஸா IV: 19.

ஆயிஷா (றழி) அவர்கள் கூறியதாக, ஷஹீஹு'ல் முஸ்லிம் பின்வருமாறு வலியுறுத்துகின்றது:

'ஒரு கன்னிப் பெண் அவளது பாதுகாவலரின் மூலம் திருமணம் செய்து வைக்கப்படும் போது, அப்பெண்ணிடம் கலந்தாலோசிப்பது அவசியமா என நான் அல்லாஹ்வின் தூதரிடம் கேட்டேன். உடனே, அல்லாஹ்வின் தூதர், "ஆம் நிச்சயமாக அப்பெண் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்" என்று கூறினார்கள். நான் மீண்டும், அப்பெண் வெட்கப்பட்டால் என்ன செய்வது என்று கேட்டேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர், அவளின் வெட்கமானது அப்பெண்ணின் சம்மதத்தைக் குறிக்கும் எனப் பதிலளித்தார்கள்'.[98]

ஒரு வயது வந்த கன்னிப் பெண்ணை அவளது சம்மதத்திற்கெதிராகத் திருமணம் செய்து வைக்கக்கூடிய திருமணப் பாதுகாவலரின் உரிமை சட்டபூர்வமான ஒரு விடயமல்ல என்பது, இமாம்களான அபூஹனிபா, அபூயூசுப் ஆகியோரின் கருத்தாகும் என்பதில் எமக்கு எவ்வித சந்தேகமுமில்லை.[99] ஷாபி சட்டமானது, 1951ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் பிரிவு 25 (1)இன் மூலம் பின்வருமாறு தெளிவுபடுத்தப்படுகின்றது:

25 (1) ஷாபி மதக் கொள்கையை அனுட்டிக்கும் வகுப்பினரைச் சேர்ந்தவொரு பெண், செய்வதற்கு உடன்பட்டவொரு விவாகம்:

(அ) அவளுடைய வலியாகச் செயலாற்ற உரித்துடைய ஒருவர்

(i) அவ்விவாக உடன்பாட்டை நிறைவேற்றும் நேரத்திலும், இடத்திலும் சமூகமாயிருந்தும்,

(ii) அவ்வுடன்பாட்டிற்கு அப்பெண்ணுடைய சம்மதத்தையும், தாம் அனுமதியளித்ததையும் தெரிவித்தலுமன்றி, அல்லது,

(ஆ) காதிநீதவான் 47ஆம் பிரிவின் பிரகாரம் விவாகத்தை நிறைவேற்ற உத்தரவு கொடுத்து வலியினுடைய சமூகமும் அனுமதியும் தேவையில்லையெனக் கட்டளை பிறப்பித்தாலன்றி அம்மதக் கொள்கையை அனுட்டிக்கும் வகுப்பினருக்கு ஏற்புடைத்தாகவுள்ள சட்டப்பிரகாரம் வலிதுடையதாகவிராதென ஐயத்தை நீக்குவதற்காக இத்தாற் குறிப்பிடப்படுகின்றது.[100]

98. சஹீஹ் முஸ்லிம் - அத்தியாயம் DXLVII, 3305 ம் பந்தி சஹீஹ் முஸ்லிம் - அத்தியாயம் DXLVII, 3303 ம் பந்தி சஹீஹ் புகாரி பாகம் VII புத்தகம் LXII பந்தி 39, 49.

99. ஹமில்டன், ஹிதாயா பாகம் I புத்தகம் II அத்தியாயம் II, அப்துல் காதர் எதிர் ராசீக் 54 NLR 201, ஹனீபா எதிர் ராசீக் 60 NLR 287.

100. திருமணப் பாதுகாவலர், ஷாபி சட்டத்தின் பிரகாரம் தந்தையும் தந்தைவழிப்பாட்டனாரும், ஹனபிச் சட்டத்தின் பிரகாரம் இவர்களோடு சகோதரர்கள், தந்தைவழி ஏனைய உறவினர்கள், மற்றும் தந்தை, தந்தைவழிப்பாட்டனார் இவர்களொருவருமில்லாத போது தாயும், தாய்வழி உறவினர்களும் கூட அடங்குவர்.

ஒரு திருமணத்தைப் பதிவு செய்வதற்கு முன்னர், திருமணப்பதிவாளர், மணமகன், மணமகளின் வலி என்பவர்களின் உறுதிப்பாட்டைச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள IIஆம், IIIஆம் அட்டவணைகளில் காணப்படும் மாதிரிப் படிவங்களின் பிரகாரம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் கூறுகின்றது. ஆனால், வலி, தகப்பனாகவோ அல்லது தகப்பன் வழிப் பாட்டனாகவோ இல்லாத சந்தர்ப்பத்தில், மணமகளும் தனது சம்மதத்தை உறுதிப்படுத்தும் வகையில் விண்ணப்பத்தில் கையெழுத்திட வேண்டும். முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் பிரிவு 18 (1)இன் பிரகாரம், பின்வரும் சந்தர்ப்பங்களில் வலியின் உறுதிப்பாடு (படிவம் III) அவசியமற்றதாகின்றது.

(i) பிரிவு 47இன் பிரகாரம் வலியின் சம்மதம் தேவையில்லையெனக் காணப்படும் வேளையில்,

(ii) மணமகள் எம்மதக் கொள்கையை அனுட்டிக்கும் வகுப்பினரைச் சேர்ந்தவரோ, அவரை ஆளும் முஸ்லிம் சட்டப்படி வலி தேவையில்லாத வேளையில்

மேற்கூறப்பட்ட சந்தர்ப்பங்களில், படிவம் II இலும், திருமணப்பதிவு (படிவம் IV) இலும் மணமகளே தனது கையொப்பத்தை இடுவார். இச்சந்தர்ப்பத்தில் திருமணப்பதிவிலோ அல்லது திருமணப்பதிவாளரின் முன்னால் செய்யப்படும் ஏதேனும் உறுதிப்பாட்டிலோ மணமகள் அல்லது மணமகளின் பிரதிநிதியின் சம்மதம் என்ற தேவைப்பாடு அவசியமாகாது. மணமகளின் கையொப்பம், திருமணத்தில் அவளது சம்மதத்தினை வழங்குவதில் மிகவும் வலிமையான வழிமுறையாகும். அத்துடன், திருமணப்பதிவில் மணமகளின் கையொப்பம் அவசியமில்லை என்ற சமூகக்கட்டுப்பாடு, பெண் கல்வி பரந்துள்ள இக்காலகட்டத்தில் மிகவும் விமர்சனத்துக்குள்ளானதொரு விடயமாக உள்ளது. காதிநீதவான்களினால் பாதுகாக்கப்படும் விவாகரத்துப் பதிவு (Vஆம் படிவம் Iஆம் அட்டவணை) யில் பெண்ணின் கையெழுத்து அவசியத் தேவைப்பாடாகும் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவில் பின்வருமாறு திருத்தம் கொண்டு வருவது மிகவும் அத்தியாவசியமான ஒரு தேவைப்பாடாகும்:

(அ) வலியின் சம்மதம் தேவையில்லையெனக் காணப்படும் வேளையில் அல்லது மணமகள் எம்மதக் கொள்கையை அனுட்டிக்கும் வகுப்பினரைச் சேர்ந்தவரோ, அவரை ஆளும் முஸ்லிம் சட்டப்படி வலி தேவையில்லாத வேளையில் படிவம் IVஇன் உறுதிப்பாடு மணமகளினால் செய்யப்படல்.

(ஆ) IIIஆம் படிவத்தில், வலியை உறுதிப்படுத்தி மணமகள் செய்யும் பிரகடனத்தில் உள்ள 'எனது தந்தையும், தகப்பன் வழிப்பாட்டனுமல்லாத எனது வலி செய்த' என்ற விடயத்தை இல்லாமற் செய்தல்.

(இ) படிவம் IV, விடயம் 16இல் அதாவது திருமணப்பதிவில் மணமகளின் கையொப்பத்திற்கு இடமோதுக்கப்படும் வகையில் திருத்தம் கொண்டு வருதல்.

**பல்தார மணம்**

நான்கு பெண்களைத் திருமணம் செய்வதற்கான அனுமதி பற்றிய வசனம் சூறத்துன்னிஸாவில் பின்வருமாறு காணப்படுகின்றது. இவ்வசனமானது, உஹுது யுத்தத்தின் விளைவாகப் பல விதவைகளும், அநாதைகளும் உருவாக்கப்பட்ட நிலையில் இறக்கப்பட்டது.

"அநாதைப் பெண்களைத் திருமணம் செய்து
அவர்களின் விஷயத்தில்
நீங்கள் நீதம் செய்ய முடியாது என்று பயந்தால்
மற்றப் பெண்களில் உங்களுக்கு விருப்பமானவர்களை
இரண்டிரண்டாக, மும்மூன்றாக, நன்னான்காகத்
திருமணம் செய்து கொள்ளுங்கள்
ஆனால் அவர்களுக்கு மத்தியிலும்
நீதம் செலுத்த முடியாது என்று நீங்கள் பயந்தால்
அப்பொழுது ஒரு பெண்ணை மட்டும்
மணம் செய்து கொள்ளுங்கள்,
நீங்கள் அநீதி செய்யாமல் இருப்பதற்கு
இதுவே மிக நெருக்கமானதும், சுலபமானதுமாகும்[101]".

ஆகவே, பல்தாரமணமானது யார், பல்மனைவியரை நீதமாகவும், நியாயமாகவும் நடத்த முடியும் என்ற உறுதிப்பாட்டுடன் இருக்கின்றனரோ அவர்களுக்குரிய விதிவிலக்கான சூழ்நிலைகளிலேயே அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. 'நீதமும் நியாயமும்' என்பதன் விளக்கம் அல்குர்ஆனில் பின்வருமாறு காணப்படுகின்றது:

"நீங்கள் பேராசை கொண்ட போதிலும்
ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தால்
அந்தப் பெண்களிடையே நீங்கள் நீதம் செலுத்திட
ஒருபோதும் சக்தி பெற மாட்டீர்கள்."[102]

ஆகவே, மேற்கூறப்பட்ட வசனத்திலிருந்தும் மற்றும் சூறத்துன்னூரில் உள்ள "இன்னும் உங்களில் உள்ள திருமணமாகாதவர்களைத் திருமணம் செய்து

101. புனித அல்குர்ஆன் (அப்துல்லா யூசுப் அலியினால் பதிப்பிக்கப்பட்டது) சூறா நிஸா IV: 3.
102. புனித அல்குர்ஆன் (அப்துல்லா யூசுப் அலியினால் பதிப்பிக்கப்பட்டது) சூறா நிஸா IV : 129.

கொள்ளுங்கள்"[103] என்ற வசனத்திலிருந்தும், அல்குர்ஆன் பல்தாரமணத்தைவிட ஒருதாரமணத்தையே ஆதரிக்கின்றது என்பது உறுதியாகின்றது.

இலங்கையில் முஸ்லிம்கள் மட்டுமே பல்தாரமணத்தின் சிறப்புரிமையை அனுபவிக்கின்றார்கள்; அத்துடன் இச்சிறப்புரிமையைத் தொடர்ந்து பூரணமாக அனுபவிக்க விரும்புவதும் விளங்கிக் கொள்ளத் தக்கதே. பல்தாரமணத்தில் நன்மைகளும் உண்டு.[104] வருடம் முழுவதும் தனது கணவனுடன் உடலுறவு வைத்துக் கொள்ளக் கூடியவகையில் பெண்களை இயற்கை அனுமதிக்கவில்லை. பாலியல் இச்சை மீது மிக அதிகளவு நாட்டமுடைய கணவன் தனது மனைவியினால் திருப்திப்பட முடியாத சந்தர்ப்பத்தில் பல்தார மணம் அதற்குச் சந்தர்ப்பம் வழங்குகின்றது.

ஒரு மனிதன் அதிக பிள்ளைகளையுடையவராயிருக்க விரும்பினும், அம்மனைவி அத்தனை பிள்ளைகளைப் பெற்றெடுப்பதற்கு இயலாத நிலையில் காணப்படும் போது, பல்தாரமணம் அக்கணவனுக்குத் தீர்வு வழங்குகின்றது. ஆண், பெண் எண்ணிக்கை சமத்துவமில்லாது, ஆண்களைவிடப் பெண்கள் எண்ணிக்கையில் அதிகமாகக் காணப்பட்டுத் திருமணத்திற்கான வாய்ப்பேயில்லாத சூழ்நிலை பெண்களுக்கு ஏற்படும்போது, பல்தாரமணம் அங்கு தீர்வாகின்றது. உண்மையிலேயே சனத்தொகை அதிகரிப்பில் நியாயமான தேவை காணப்படும் பட்சத்தில் சனத்தொகை அதிகரிப்பதற்கு பல்தாரமணம் வழிவகுக்கின்றது.

பல்தாரமணத்தில் தீமைகளும் உண்டு. ஒன்று, இலங்கையின் மிக முக்கிய சமூகப் பிரச்சினையான சனத்தொகை அதிகரிப்பு ஆகும். கணவரினால் எல்லாக் குடும்பங்களையும் சமமாகப் பராமரிப்பதற்குப் போதிய வசதிவாய்ப்புக்கள் இல்லாதபோது மனைவியரும், பிள்ளைகளும், கணவரினாலும், தகப்பனினாலும் கைவிடப்படுகின்றனர்.[105] கணவனின் மற்றைய மனைவியுடன்/ மனைவியருடன் ஒரே இல்லத்தில் வசிக்கும் மனைவிக்கு/ மனைவியருக்கு வாழ்க்கையில் வெறுப்பும், பிடிப்பற்ற தன்மையும் ஏற்படுகின்றன. எல்லா மனைவியரையும், சகலவிதத்திலும், திருப்திப்படுத்தி அவர்களுடன் வாழ்வதற்கான கடப்பாடு ஒரு கணவனுக்கு இருப்பதனால் அக்கணவன் உடலியல், உளவியல் ரீதியாகக் களைப்படையக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.[106] அனுபவ வாயிலாக நோக்கும் போது கூட, அளவுக்கதிகமானது எல்லாச் சந்தர்ப்பத்திலும் தீங்கானது மட்டுமல்ல, சில நேரங்களில் அபாயமானதும் கூட. பல்தாரமணத்தைத் தொடர்ந்து நியாயப்படுத்தும் வகையிலான நன்மைகள்

103. புனித அல்குர்ஆன் (அப்துல்லா யூசுப் அலியினால் பதிப்பிக்கப்பட்டது) சூறா நூர் XXIV : 32.

104. See Generally; Abu Ammenah Bilal Philips and Jameelah Jones, Polygamy in Islam. (Riyadh 1985) and Arafaque Malik, Polygamy (London 1993).

105. 1806ஆம் ஆண்டின் முஹம்மதியக் கோவை பிரிவு 100.

106. பாத்தும்மா எதிர் சீனி முகம்மது 23 NLR 277.

காணப்படுகின்ற போதிலும் கூட, இத்தகைய தீயவிளைவுகளின் காரணமாக், பல்தாரமணத்தை நடைமுறைப் படுத்துவதில் சட்டக்கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன.

இலங்கையின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் எல்லைக்குள் பல்தாரமணம் உள்ளடக்கப்பட்டிருப்பினும் கூட தனது மனைவிக்கு/ மனைவியருக்கு தனது எண்ணத்தைக் காதிநீதிவானூடாக அறிவிக்க வேண்டிய மேலதிகத் கடப்பாடு இக்கணவனுக்கு உண்டு.[107] ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களைச் செய்ய எண்ணும் கணவனுக்குச் சமூக அழுத்தம் வழங்கும் நோக்கிலேயே இவ்வேற்பாடு காணப்படுகின்றது. ஆனால் பொதுவாக இலங்கையில் இந்நடைமுறை மீறப்பட்டுள்ளது. பல்தார மணத்தை நாடுபவர்களுக்குச் சமூக அழுத்தம் கொடுக்கும் வகையில் சட்டத்தினால் வழங்கப்பட்ட கடப்பாடுகளை மீறுபவர்கள் மீது எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது பற்றி எந்த ஏற்பாடுகளும் இல்லை. பல்தாரமணத்தை நடைமுறைப்படுத்தும்போது கடைப்பிடிக்கவேண்டிய ஷரிஆக் கட்டுப்பாடுகளை எமது சட்டம் உள்ளடக்கவில்லை.[108]

பல்தாரமணமானது சட்டக்கட்டுப்பாட்டினுள் அடக்கப்படவேண்டுமா என்ற கேள்வி இங்கு எழுகின்றது. அண்மைக்காலங்களில் பல்வேறு நியாயாதிக்கங்களில் சட்ட மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சிரியாவில், இரு மனைவியரைப் பராமரிக்கக்கூடிய நிலை அக்கணவனுக்கு இல்லை என நிரூபிக்கப்படும் பட்சத்தில் பல்தார மணத்திற்கான அனுமதி வழங்க மறுக்கும் அதிகாரம் நீதிபதிக்கு உண்டு.[109] டியுனீஸியாவில் பல்தாரமணம் தடை செய்யப்பட்டுள்ளது.[110] மொரோக்கோ போன்ற நாடுகளில் பல்தாரமணம் மனைவியரிடையே அநீதியை உருவாக்கும் என்ற அடிப்படையில் தடைசெய்யப்பட்டுள்ளது.[111] காதிநீதவானின் அனுமதியின்றி பல்தாரமணம் செய்யமுடியாது என ஈராக்கின் சட்டம் கூறுகின்றது. மனைவியரிடையே, சமத்துவமற்ற தன்மை காணப்படும் என்ற அச்சம் இல்லாத போது மாத்திரமே காதிநீதவான் அதற்கான அனுமதியை வழங்குவார்.[112] பல்தாரமணத்திற்கு காதிநீதவானின் அல்லது மத்தியஸ்த சபையின் அனுமதி அவசியம் எனும் தேவைப்பாட்டை பாகிஸ்தான், பங்களதேஷ் ஆகிய நாடுகளின் சட்டம் கொண்டுள்ளது.[113, 114] இங்கு பல்தாரமணம் அவசியமும், நியாயமானதும்

107. அடிக்குறிப்பு 63இல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 24.

108. Saleem Marsoof, Polygamy: Is Judicial Control Desirable? (1983) Meezan.

109. 1953ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க சிரியா நாட்டின் தனியாள்நிலைச் சட்டம்.

110. 1957ஆம் ஆண்டின் டியுனீசியா நாட்டின் தனியாள்நிலைச் சட்டக் கோவையின் உறுப்புரை 18.

111. 1958ஆம் ஆண்டின் மொரோக்கோ நாட்டு தனியாள்நிலைச் சட்டக் கோவையின் உறுப்புரை 30.

112. 1959ஆம் ஆண்டின் ஈராக் நாட்டு தனியாள்நிலைச் சட்டக் கோவையின் உறுப்புரை 3.

113. 1961ஆம் ஆண்டின் பாகிஸ்தான் முஸ்லிம் குடும்பச் சட்டத்தின் பிரிவு 6.

114. 1961ஆம் ஆண்டின் பங்களாதேஷ் முஸ்லிம் குடும்பச் சட்டத்தின் பிரிவு 6.

என்பதில் திருப்தி ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே, இவ்வனுமதி வழங்கப்படும். இலங்கை இத்தகைய போக்கினைப் பின்பற்றவேண்டுமா?

காதிநீதவான்களுக்கு வழங்கப்பட்ட வினாக்கொத்தில், பல்தாரமணம் பற்றித் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டுமா என்ற வினாவுக்கு, 83.3% வீதமான காதிநீதவான்கள் சார்பாகவே பதிலளித்திருந்தார்கள். சஹாப்தீன் குழு, இது தொடர்பிலே கொண்டுவரப்பட்ட சிபார்சிற்கு மறுப்புத் தெரிவித்த போதிலும், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, இச்சிபார்சை மிகவும் வலுவான விதத்தில் முன்வைத்தது.[115] இத்தகைய திருத்தம், பொறுப்பற்றதனமான பல்தாரமணத்தினால் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும். அத்துடன் இன்று எம் நாட்டில் காணப்படும், சந்தேகத்திற்கிடமான மதமாற்றங்களையும் குறைக்க உதவும்.

பல்தாரமணத்திற்கான சட்டக்கட்டுப்பாடு இலங்கைக்குப் புதிதான ஒன்றல்ல. பல்தாரமணத்திற்கான அறிவித்தலைக் காதிநீதவானுக்கு வழங்க வேண்டும் என்ற சட்டத்தேவைப்பாடு, இஸ்லாத்தினால் நியாயப்படுத்த முடியாத சூழ்நிலைகளில் பல்தாரமணத்தைக் குறைப்பதற்கான ஒரு ஏற்பாடாகவே சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது.[116] இதற்கான முழுமையான அதிகாரங்களையும், சிறப்புரிமைகளையும் காதிநீதவான்கள் தங்கள் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கவேண்டிய ஆற்றலுடையவர்கள் என்பதும் புதிதான ஒரு விடயமல்ல. உதாரணமாக, பருவமடையாத பெண்பிள்ளைகளை அவர்களுடன் கலந்தாலோசிக்காமல் அல்லது அவர்களின் சம்மதமின்றித் திருமணம் செய்து கொடுக்கும் திருமணப் பாதுகாவலரின் பூரண உரிமை, எமது விவாக, விவாகரத்துச் சட்டத்தினால் மட்டுப்படுத்தப்படுகின்றது.[117] இலங்கையைப் பொறுத்த வரையில் விகிதாசார அடிப்படையில், அரைச்சதவீதத்திற்கும் குறைவாகவே பல்தாரமணம் காணப்பட்டாலும், பல்தாரமணம் காரணமாகக் கணவனினாலும், தகப்பனினாலும் கைவிடப்படும் மனைவியர், பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்வதனால், ஏனைய நாடுகளைப் போல, எமது நாட்டிலும், சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற கருத்து நியாயப்படுத்தப்படுகின்றது.

ஓர் ஆண் இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்னர் ஒருதாரமணத்தில் ஈடுபட்டு, பின்னர் இஸ்லாத்தைத் தழுவிப் பல்தாரமணம் செய்ய முடியுமா என்ற கேள்வி, இலங்கையில் பல சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. அரசி எதிர் ஒபேசேகர வழக்கு, அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவ்விரண்டாவது திருமணம்

தண்டனைக்குரிய குற்றமாகும் எனத் தீர்மானித்துள்ளது.[118,119,120] ஏனெனில் அவர் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர் என்பதை நிரூபிப்பதற்கான எவ்வித சாட்சியங்களும் இல்லாத காரணத்தினால், நீதிமன்றம் அவரை முஸ்லிமாகக் கருதவில்லை.

சட்டமா அதிபர் எதிர் ரீட்[121] எனும் வழக்கில் ஒரு ஆண் இஸ்லாத்தைத் தழுவி 3 நாட்களினுள் இரண்டாவது திருமணம் செய்துள்ளார் என்பதை உயர் நீதிமன்றம் கவனத்திற் கொண்டது. இரண்டாவது திருமணம் நடைபெற்ற திகதிக்கும், அவர் இஸ்லாத்தைத் தழுவிய திகதிக்குமிடையில் கால எல்லை மிகக் குறைவாக இருந்ததால், திருமணப் பதிவுகள் சட்டத்தின்[122] 18ஆம் பிரிவிலிருந்து விடுதலை பெறும் நோக்கிலேயே இம்மதமாற்றம் நடைபெற்றுள்ளது எனச் சந்தேகம் எழுந்துள்ள போதிலும் கூட, முஸ்லிம் சட்டத்தின் கீழ் இவ்விரண்டாவது திருமணம் வலிதான திருமணம் என்றே உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அக்கால கட்டத்தில் இலங்கையில் அதியுயர் நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றமான கோமறைக் கழகத்தில் அவ்வழக்கு மேன்முறையீட்டுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. அவ்வாணின் மதமாற்றம் உண்மையானதும் நேர்மையானதுமாகும் என அவரது சார்பில் வாதிட்ட சட்டத்தரணி வாதாடினார்.[123] இங்கும் உயர்நீதிமன்றத் தீர்ப்பை ஆதரித்தே தீர்ப்பு வழங்கப்பட்டது.

நீதிமன்றத் தீர்ப்பு பின்வரும் வகையில் அமைந்திருந்தது: "அம்மனிதனின் முதல் திருமணம் கிறிஸ்தவ வழக்காறுகளுடன் திருமணப் பதிவுகள் சட்டத்தின் கீழ் நடைபெற்றது. இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் முதல் மனைவியின் வாழ்க்கைக் காலத்தினுள்ளேயே இன்னுமொரு திருமணம் செய்தமை தண்டனைக்குரிய குற்றமல்ல". திருமணப் பதிவுகள் சட்டத்தின் பிரிவுகள் 18, 35இனுள் இஸ்லாமியத் திருமணம் உள்ளடக்கப்படாது[124] என்பதை நீதிமன்றம் வலியுறுத்தியது. ஆனால் மதமாற்றத்தின் நேர்மை உண்மைத் தன்மைகள் பற்றி ஆராய்வதற்கு நீதிமன்றம் தயக்கம் காட்டியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இலங்கை, பல்லின மக்கள் வாழும் ஒரு நாடு என்பதை நீதியரசர் அப்ஜோன் வலியுறுத்தினார். அவரது தீர்ப்பில் மேலும் கூறியதாவது:

118. அரசி எதிர் ஒபேசேகர (1889) 9 SCC 11.
119. 1883ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கச் சட்டத்தின் பின்னர் திருத்தப்பட்ட தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 362 B.
120. அரசி எதிர் ஒபேசேகர (1889) 9 SCC 11, 12 – நீதியரசர் கிளரன்ஸ்.
121. 65 NLR 97 (SC), 67 NLR 25 (PC).
122. ரீட் எதிர் சட்டமா அதிபர் 65 NLR 97,99 – நீதியரசர் பஸ்நாயக்க.
123. சட்டமா அதிபர் எதிர் ரீட் 67 NLR 25, 28, நீதியரசர் அப் ஜோன்.
124. 1907ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கத் திருமணப் பதிவுகள் திருத்தப்பட்ட சட்டம். திருமணத்திற்கான வரைவிலக்கணம் பிரிவு 64.

> "இத்தகைய நாட்டில் வாழும் பிரஜைகளுக்கு அவர்களது மதத்தையும், தனியாள் சட்டத்தையும் மாற்றிக் கொள்வதற்கு முழுமையான உரிமை இருக்க வேண்டும். பல்தாரமணம் சட்டரீதியாக்கப்பட்டிருப்பின் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் பூரண உரிமை வழங்கப்பட்டிருக்க வேண்டும். அம்முழுவுரிமை இரத்துச் செய்யப்படுவதாயின் அது நியதிச்சட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்டிருக்க வேண்டும்."[125]

இத்தீர்ப்பானது, இஸ்லாமிய மதமாற்றத்தில் பெருமளவான போலித்தனங்கள் உருவாவதற்கு வழிகாட்டியது. முஸ்லிம் ஆண்களுக்குப் பலதாரமணத்திற்காக வழங்கப்பட்ட அனுமதி அண்மைக்காலமாக, முஸ்லிமல்லாத ஆண்களினால் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது. திருமணம் ஒன்று முழுமையாக முறிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், விவாகரத்திற்கு அனுமதி வழங்காத வகையில் அமைந்துள்ள ஏனைய தனியாள் சட்டங்களின் பிடியிலிருந்து விலகிக் கொள்வதற்கு இது வழிகோலியது. அபேசுந்தர எதிர் அபேசுந்தர[126] எனும் வழக்கிற்கு, அண்மையில் இலங்கை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இதற்கு எதிர்மாறானதாக அமைந்திருந்தது. ரீட் வழக்கின் நிகழ்வுகளுக்கு ஒத்த நிகழ்வுகளே இவ்வழக்கின் நிகழ்வுகளாக அமைந்திருந்தன.

குற்றஞ்சாட்டப்பட்டவரின் மதமாற்றத்தின் நம்பகத்தன்மை தொடர்பில் ஏற்புடைமை காணப்படவில்லை என்பது மாத்திரமே வித்தியாசமான நிகழ்வாக அமைந்திருந்தது. குற்றஞ்சாட்டப்பட்டவர், பொறளையில் உள்ள ஆல் செயிண்ட்ஸ் கிறிஸ்தவக் கோவிலில் 1958ஆம் ஆண்டு நதாலி என்பவரைத் திருமணப் பதிவுகள் சட்டத்தின் பிரிவு 35இன் பிரகாரம் திருமணம் செய்தார். திருமண வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக குற்றஞ்சாட்டப்பட்டவர் 'வன்ம உறவறுத்தல்' என்ற அடிப்படையில் மனைவிக்கெதிராக, விவாகரத்துக் கோரி வழக்குத் தொடர்ந்திருந்தார். இவ்வழக்கு 1985ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தள்ளுபடி செய்யப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவரின் வாக்கு மூலத்தின் பிரகாரம், அவரும், காந்திகா என்பவரும் 1985ஆம் ஆண்டு மார்ச் மாதம் இஸ்லாத்தைத் தழுவியுள்ளனர்; அத்துடன் 1985ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமளவில் அதாவது விவாகரத்து வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டு 1 மாதம் 2 நாட்களின் பின்னர், இவ்விருவரும் திருமணம் செய்துள்ளனர். மதமாற்றம் நியாயமானதாக இருந்த போதிலும், இம்மதமாற்றமானது, திருமணப்பதிவுகள் சட்டத்திற்கேற்ப முன்னைய திருமணத்திலிருந்து பெறப்பட்ட நேரடியான சட்ட ரீதியான கடமைகளை விலக்குவதற்கு அனுமதியளிக்காது என்பதை உறுதிப்படுத்திய நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் இஸ்லாமிய மதமாற்றத்தின் நம்பகத்தன்மையில்

---

125. சட்டமா அதிபர் எதிர் ரீட் 67 NLR 25, 32 நீதியரசர் அப்ஜோனா.

126. (1998) 1 SLR 185.

008695

சில சந்தேகங்கள் இருந்த போதிலும் அவற்றைக் கவனத்திற் கொள்ளவில்லை. இருதார மணத்திற்காகக் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட கீழ் நீதிமன்றத் தீர்ப்பை 1997ஆம் ஆண்டு உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.

அபேசுந்தர வழக்கில், மதமாற்றத்தின் நியாயத்தன்மை பற்றிய விடயத்தில் உயர் நீதிமன்றம் வினா எழுப்ப முயற்சி செய்யவில்லை என்பது இங்கு கவனத்திலெடுக்க வேண்டிய முக்கிய விடயமாகும். பதிலாக, முதல் திருமணத்தின் ஒருமைப்பாட்டுத் தன்மையையும், குறிப்பாக திருமணப் பதிவுகள் சட்டத்தின் பிரிவு 35(2)இன் பிரகாரம், அத்திருமணத்தின் மூலம் திறத்தவர்களினால் பெறப்பட்ட அந்தஸ்தையுமே நீதிமன்றம் வலியுறுத்தியது. றீட் வழக்கை அவதானித்த பின்னர் பிரதம நீதியரசர் மாண்புமிகு ஜி.பி.எஸ். டி. சில்வா பின்வருமாறு கூறியுள்ளார்:

> "றீட்டுக்குத் தனது மதத்தை மாற்றுவதற்குச் சுதந்திரம் உண்டா என்பது இங்கு வினாவல்ல. திருமணப் பதிவுகள் சட்டத்தின் பிரகாரம் நடைபெற்ற முன்னைய திருமணத்தினால் நேரடியாகப் பெறப்பட்ட சட்டரீதியான பொறுப்புக்களிலிருந்து, அவர், இஸ்லாமிய மதமாற்றத்தின் மூலம் விலகிக் கொள்ளலாமா என்பதே இவ்வழக்கின் தீர்ப்புக்கான வினாவாகும். அவரது தெரிவின் பிரகாரம், திருமணப் பதிவுகள் சட்டத்தின் மூலம் செய்யப்பட்ட திருமணப் பொறுப்புக்களிலிருந்து, தனது சொந்தச் செயற்பாட்டின் மூலம் வெளியேறலாமா? எனது அபிப்பிராயப்படி அதற்கான விடை அவருக்கு முரணானதேயாகும். நியதிச்சட்டமானது திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வழிமுறைகள் பற்றிக் கூறியுள்ளது. அவைமாத்திரமே சட்டத்தினால் வழங்கப்பட்ட வழிமுறையாகும்.
>
> றீட்வழக்கில், திருமணப் பதிவுகள் சட்டத்தின் பிரகாரம் திருமணம் செய்த பின்னர், ஒரு தலைப்பட்சமான இஸ்லாமிய மதமாற்றத்தின் மூலம் றீட் என்பவர் நியதிச்சட்டரீதியாக அவருக்குள்ள கடமைகளிலிருந்தும் நியதிச் சட்டத்தினால் வழங்கப்பட்ட பொறுப்புக்களிலிருந்தும் விடுவிக்கப்படலாமா என்பதை நோக்கவில்லை. மாறாக, அவருக்குரிய உரிமைகளையும், திருமணப் பதிவுகள் சட்டத்தின் மூலம் செய்யப்பட்ட திருமணத்தில் மனைவியின் மீது அவருக்கு மட்டுப்படுத்தப்பட்ட சட்ட உரிமைகளையுமே நீதிமன்றம் கருதியது."[127]

ஒரு மனிதன் இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்னருள்ள பொறுப்புக்கள் உட்பட ஏனைய முன்னைய பொறுப்புக்களினால் அம்மனிதன் கட்டுப்படுகின்றான் என்ற அபேசுந்தர வழக்கின் உயர்நீதிமன்றத் தீர்ப்பானது, ஷரிஆவுடன் ஒற்றுமைப்படுகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஷரிஆவும் கூட,

127. (1998) 1 SLR 194.

ஒருவருடைய உறுதிமொழிகளுக்கும் கடமைகளுக்குமே முக்கியத்துவம் வழங்குகின்றது என்பது இங்கு அவதானிக்கத்தக்கது. அப்துல் றஹ்மான் அஸ்ஸாம் என்பவர் பின்வருமாறு கூறுகின்றார்: "உலகாயுத அல்லது ஆன்மீக ரீதியான நம்பிக்கைப் பொறுப்புக்களை தவறான வழியிலிட்டுச் செல்வதை இஸ்லாம் தடை செய்துள்ளது போலவே, இரகசியமாகவோ பரகசியமாகவோ உறுதி மொழிகளைத் தவறான வழியில் இட்டுச் செல்வதையும் இஸ்லாம் தடை செய்துள்ளது".[128] ஆயினும், மிகவும் பணிவாக ஆனால் கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டிய விடயம் என்னவென்றால் அபேசுந்தர வழக்கில், 'ரிஆவின் ஏனைய சமத்துவ அடிப்படைக் கோட்பாடுகள் கவனத்தில் எடுக்கப்பட்ட போதிலும் கூட ஏற்புடைமை வாய்ந்த நியதிச்சட்டப் பிரிவுகள், தவறாகப் பொருள்கோடல் செய்யப்பட்டதுடன், தேவையான அரசியலமைப்புச் சட்ட உத்தரவாதங்களும் கவனத்தில் எடுக்கப்படவில்லை.[129] முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் மிக ஆழமாக நோக்கப்பட வேண்டிய இந்த வழக்கானது, அதிலும் குறிப்பாக, கோமறைக் கழகத்தினால் ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பை மீளாய்வு செய்து, அதனை நிராகரிப்பதற்கு உயர்நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு வழக்கு, முழுமையான எண்ணிக்கையான நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வுக்கு ஒப்படைக்கப்படாமை துரதிஷ்டமேயாகும்.

அபேசுந்தர எதிர் அபேசுந்தர[130] வழக்கின் உயர்நீதிமன்றத் தீர்ப்பானது, ஏற்புடைத்தான சட்டத்தில் பெரிதும் நிச்சயமற்ற தன்மையொன்றை விளைவித்தது. இலங்கையின் மிகவுயர் நீதிமன்றமான கோமறைக் கழகத்தினாலேயே நீட் வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அபேசுந்தர வழக்கின் தீர்ப்பு, இலங்கையின் தற்போதைய உச்ச நீதிமன்றமான உயர்நீதிமன்றத்தினால் 3 நீதியரசர்களைக் கொண்ட அமர்வில் வழங்கப்பட்டது. நீட்வழக்கில், அப்போது உச்சஸ்தானத்திலிருந்த கோமறைக் கழகத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பை, உயர்நீதிமன்றமானது அபேசுந்தர வழக்கில் நிராகரிக்கக் கருதிய போதிலும் கூட்டான அல்லது முழுமையான எண்ணிக்கை நீதியரசர்கள் அற்ற, மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வின் மூலம் உயர்நீதிமன்றமானது நிராகரிப்பது பொருத்தமானதா என்பதில் சந்தேகம் எழுகின்றது.[131] ஏற்கனவே குறிப்பிட்டது போல, நீட் வழக்கில்

128. Abd-al-Rahman Azzam, Eternal Message of Muhammad (1964 edition) 128.

129. See, Saleem Marsoof, The Abeysundere Decision: An Islamic Perspective. (1998-199) Meezan page 59. For other comments on this decision see, Dr. Lakshman Marasighe "Monogamy,Polygamy and Bigamy: Abeysundere Vs. Abeysundere-A Conundrum, (1998) Bar Association Law Journal Vol. VII Part II page 44 and Justice K.M.M.B. Kulatunga, "Natalie Abeysundere Vs. Christoper Abeysundere And another (1999) Bar Association Law Journal Vol. VIII Part I page 109.

130. (1998) I SLR 185 .

131. கனகரட்ன எதிர் பண்டா 25 NLR 129, 136, பண்ட காமி எதிர் சேனநாயக்க 62 NLR 313, 369, ரத்னாயக்க எதிர் பண்டார (1990) I SLR 156.

கோமறைக் கழகத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பானது, தேவையான நியதிச்சட்டத்தின் பிரிவுகளை அதிகாரரீதியிற் பொருள் கோடல் செய்திருப்பதனால், இந்நியதிச் சட்டப் பிரிவுகளின் பொருள் கோடல்கள் Stare decisis அதாவது ஒத்த நிகழ்வுகள் கொண்ட வழக்கிற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பைப் பின்பற்றுதல் என்ற கொள்கைக்கேற்ப, எதிர்காலத்திலும் நீதிமன்றங்களினால் பின்பற்றப்படவேண்டும். நீதியரசர் கேர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> "எமது சட்டங்கள் பற்றிய பாராளுமன்றத்தின் சிந்தனைப் பொருள்கோடல் நீதிமன்றங்களுக்குரிய விடயமாகும். பாரளுமன்றச் சட்டமானது, நீதித்துறை உச்சஸ்தானமாக விளங்கும் பிரபுக்கள் சபையின் நீதி அமர்வொன்றில் ஒருமுறை அங்கீகாரபூர்வமாகப் பொருள்கோடல் செய்யப்பட்டால், மீண்டும் பாராளுமன்றத்தினால் மாற்றப்படும் வரையில், அப்பொருள் கோடல்களே சட்டமாயிருக்கும். இதில் அங்கீகாரத்தின் அடிப்படையில் நீதியரசர்களின் கொள்கைகளுக்கேற்ற வகையிலான பதிலீட்டுக் கருத்துக்களோ அல்லது அவர்களின் தற்றுணிவோ சம்பந்தப்படாது. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாராளுமன்ற எண்ணத்தின் பொருள்கோடல்கள் மாத்திரமே சம்பந்தப்படும். ஆகவே சட்டவரைவிலக்கணங்களில் நீதிமன்றங்களினால், ஏற்படுத்தப்படும் மாற்றங்களுக்கான பூரண உரிமை, பாராளுமன்றத்திற்கே மீண்டும் சேரும்.[132]

சமமான அதிகாரங்களைக் கொண்ட இரண்டு நீதிமன்றங்களின் தீர்ப்புக்களிடையே முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில், எதிர்காலத்தில் நீதிமன்றங்கள், முரண்பட்ட இரு தீர்ப்புக்களில் ஏதாவது ஒரு தீர்ப்பைப் பின்பற்றலாம் என பெரேரா எதிர் அமரசூரிய[133] எனும் வழக்கில் கூறப்பட்டுள்ளது. றீட், அபேசுந்தர ஆகிய வழக்குகளில் எழுப்பப்பட்ட வினாவானது முஸ்லிம்களிடையேயும், முஸ்லிம் அல்லாதோரிடையேயும் முக்கியத்துவம் பெறுகின்றது. இலங்கையின் இரண்டு உயர்தர நீதிமன்றங்களிலிருந்து மேற்கூறப்பட்ட இரண்டு வழக்குகளிலும் வழங்கப்பட்ட முரண்பட்ட தீர்ப்புக்களிலிருந்து, ஏற்புடைத்தான சட்டம் பற்றிய தெளிவைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் நீதிமன்றங்களும், நீதித்துறையினால் நிர்வகிக்கப்படுகின்ற ஏனைய நிறுவனங்களும் இருதலைக்கொள்ளி எறும்புகளாக உள்ளன. ஆகவே, இச்சந்தர்ப்பத்தில், சட்டத்தை, சட்டவாக்கத்தின் மூலம் தெளிவுபடுத்துவது முக்கியமானதாகும்.

---

132. R Vs. London Transport Executive, ex p.Greater London Council (1983) QB 484 at 490 per Kerr L.J.

133. 12 NLR 87, 88.

**மத மாற்றம்**

இலங்கையின் அரசியலமைப்புச் சட்டமானது, ஒரு மனிதன் தனது தெரிவுக்கேற்றவகையில் மதத்தையும், நம்பிக்கையையும் பின்பற்றுவதற்கு அல்லது மாற்றுவதற்குரிய சுதந்திரம் உட்பட சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பனவற்றிற்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.[134] இம்மதமாற்றமானது ஏனைய விடயங்களுடன் குறிப்பிட்ட சட்டப் பின்விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது. கண்டியச் சட்டத்தையோ அல்லது தேசவழமைச் சட்டத்தையோ தனது தனியாள் சட்டமாகக் கொண்ட ஒருவர், இஸ்லாத்தைத் தழுவும் அதே நிமிடமே, முஸ்லிம் சட்டத்தினால் ஆளப்படும் ஒருவராக மாறிவிடுகின்றார். இதனைச் சாட்சிகளின் மூலம் நிரூபிக்கும் பொறுப்பும் அவருடையதே[135]. இஸ்லாமிய மதமானது முற்றிலும் நம்பிக்கையிலேயே தங்கியிருப்பதனால், மதமாற்றத்தை நிரூபிக்கும் வகையிலமைந்த் முறையான பிரகடனம் முதற்தோற்றச் சான்றாகக் கொள்ளப்படும்.[136] ஆயினும், மதமாற்றத்தின் நம்பகத் தன்மைக்குரிய சவால்களை, குறிப்பிட்ட வழக்குகளில் நீதிமன்றங்கள் அனுமதித்துள்ளன.[137] அத்துடன் நம்பகத்தன்மையற்ற மதமாற்றங்களுடன் தொடர்பிலான விசாரணைகளை, 'அவர்களது நம்பிக்கையை மிகவும் அறிந்தவன் அல்லாஹ்தான்' என்பதன் அடிப்படையில், புனித அல்குர்ஆன் தடை செய்துள்ளது.[138] மத உணர்வுகளைத் தூண்டக்கூடிய விடயங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு, மதச்சார்பற்ற எமது நீதிமன்றங்கள் தயங்குகின்றன என்பது, கச்சி முஹம்மது எதிர் பெனடிக்ட்[139]; சட்டமா அதிபர் எதிர் றீட்[140]; அபேசுந்தர எதிர் அபேசுந்தர[141] என்ற வழக்குகளின் உயர்நீதிமன்றத் தீர்ப்புகளிலிருந்து தெளிவாகின்றது. எனவே, சட்ட அதிகாரத்துடன் கூடிய சமய அமைப்பு ஒன்று, மதமாற்றத்தின் நம்பகத் தன்மை தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டால் என்ன என்பது சிந்திக்கப்பட வேண்டியதொரு விடயமாகும். ஒருவர் இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் முஸ்லிமான இன்னொருவரைத் திருமணம் செய்தால், இரு திறத்தவர்களினதும் அந்தஸ்தும் பரஸ்பர உரிமைகளும் கடமைகளும் அவர்கள் எந்தப் பிரிவினால் ஆளப்படுகின்றார்களோ அந்தப் பிரிவின்

134. 1978ஆம் ஆண்டின் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டம் உறுப்புரை 10.

135. அரசி எதிர் ஒபேசேகர (1889) SCC 11.

136. L.J.M. Cooray, An Introduction to the Legal System of Sri Lanka (Colombo, 1972) 137.

137. ஸ்கின்னர் எதிர் ஓர்ட் (1871) 14 MLA 309, சட்டமா அதிபர் எதிர் றீட் 65 NLR 97 (PC), 67 NLR 25 (PC) அபேசுந்தர எதிர் அபேசுந்தர (1998) 1 SLR 185.

138. புனித அல்குர்ஆன் (அப்துல்லா யூசுப் அலியினால் பதிப்பிக்கப்பட்டது) சூறா மும்தஹனா LX : 10.

139. 63 NLR 505.

140. அடிக்குறிப்பு 121.

141. (1998) 1 SLR 185.

பிரகாரமான முஸ்லிம் சட்டத்தினாலேயே ஆளப்படும்.[142] இதற்கு முந்திய அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டது போல, கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுடனான முஸ்லிம் ஆணின் திருமணத்தின் வலிதுத் தன்மையை அல்குர்ஆன் அங்கீகரித்துள்ளது. சூறத்துால் மாயிதாவில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்:

"முஃமினான கற்புடைய பெண்களும்

உங்களுக்கு முன்னுண்டான வேதங்கொடுக்கப்பட்டவர்களிலுள்ள
கற்புடைய பெண்களும் அப்பெண்களை

நீங்கள் திருமணம் செய்து கொள்பவர்களாக இருக்கும் நிலையில்,
அவர்கள் உங்களுக்கு ஹலாலாக்கப்பட்டுள்ளனர்".[143]

ஒரு திருமணத்தின் இரு திறத்தவர்களும், அஹ்லுல்கிதாப் எனும் வேதக்காரர்களாக இருக்கும் சந்தர்ப்பத்தில், ஆண் திறத்தவர் மாத்திரம் இஸ்லாத்தைத் தழுவினால், அத்திருமணம் ஷரிஆவின் பார்வையில் தொடர்ந்தும் வலிதுடையதாகவே இருக்கும். "ஒரு திருமணம் வலிதானதாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அத்திருமணம் எமது சட்டத்திற்கு முரணான விதத்தில் நடைபெற்றதா என்பது தொடர்பில் எந்த விளைவுகளும் ஏற்படாது, ஆனால் மதமாற்றம் நடைபெறும் போதே, அச்சட்ட முரண்பாடானது முடிவுக்குக் கொண்டுவரப்படும். ஆகவே அதன் பின்னர் அப்பெண், சட்டபூர்வமாக அக்கணவனுக்கு மனைவியாக்கப்படலாம் என மின்ஹாஜ் கூறுகின்றது.[144]

முதல் திருமணத்தின் திறத்தவர்கள் இருவரும் விக்கிரக வழிபாட்டைக் கொண்டவர்களாக இருக்கும் நிலையில் சட்டநிலைமை வேறுபடுகின்றது. இங்கு, ஆண் இஸ்லத்தைத் தழுவினால் அத்திருமணம் முடிவுறுத்தப்படுகின்றது. விக்கிரக வழிபாடுடைய பெண்களை அவர்கள் இஸ்லாத்தைத் தழுவும் வரையில் திருமணம் செய்யக்கூடாது என்பதை வலியுறுத்தும் முகமாக, சூறா பகறாவில் கூறப்பட்டுள்ள கடுமையான தடையே இதுவாகும்.[145] அதே போல் முதற்திருமணத்தின் திறத்தவர்கள் இந்துக்களாகவோ, பௌத்தர்களாகவோ, அல்லாஹ்வை நம்பாதவர்களாகவோ, பல்வேறு இணைவைப்பவர்களாகவோ இருக்கும் சந்தரப்பத்தில், ஆண் திறத்தவர், இஸ்லாத்தைத் தழுவும் போது, அத்திருமணம் முடிவுக்குக் கொண்டுவரப்படும்.[146]

---

142. அடிக்குறிப்பு 65 ல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 98(2).

143. புனித அல்குர் ஆன் (அப்துல்லா யூசுப் அலியினால் பிரசுரிக்கப்பட்டது) சூறா மாயிதா 6ஆம் வசனம்.

144. மஹ்றியுத்தின் அபு சக்கரியா யஹ்யா இப்னு ஷரீப் இன் நவவி, மின்ஹாஜ் - உத்-தா லிபீன் புத்தகம் 33, அத்தியாயம் III பிரிவு I பகுதி 296.

145. புனித அல்குர் ஆன் (அப்துல்லா யூசுப் அலியினால் பதிப்பிக்கப்பட்டது) சூறா பகறா II: 221.

146. See Generally, Abdur Rahman I. Doi, Shariah: The Islamic Law, (London 1984) pages 133-138.

இது தொடர்பிலான சட்டநிலைமை பற்றி மின்ஹாஜ் பின்வருமாறு சுருக்கமாகக் கூறுகின்றது:

> "இறை நம்பிக்கையற்ற ஒருவர், அவர் எம்மதத்தைச் சேர்ந்தவராயினும், அவர் இஸ்லாத்தைத் தழுவினால், அவர், வேதக்காரப் பெண்ணைத் திருமணம் செய்திருந்தால், அத்திருமணம் தொடர்ந்து வலிதானதே; ஆனால், பெண் இணை வைப்பவராகவோ அல்லது நெருப்பை வணங்குபவராகவோ இருந்து, கணவனுடன் அப்பெண் இஸ்லாத்தைத் தழுவாத சந்தர்ப்பத்தில், மதமாற்றம் நடைபெற்றவுடனேயே அத்தம்பதிகள் பிரிந்துவிட வேண்டும். அதன் பின்னர் அத்திறத்தவர்கள் சேர்ந்து வாழமுடியாது. சட்டரீதியாக இத்திருமணம் முடிவுக்குக் கொண்டுவரப்படும் காலத்திற்குள் அப்பெண் இஸ்லாத்தைத் தழுவி விடுவதிலேயே அத்திருமணத்தின் தொடர்ச்சி தங்கியுள்ளது. இக்கால எல்லைக்குள், அப்பெண் இஸ்லாத்தைத் தழுவாத பட்சத்தில், கணவனின் மதமாற்றத்திலிருந்தே அத்திருமணம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டதாகக் கொள்ளப்படும். மனைவி இஸ்லாத்தைத் தழுவி, கணவன் இஸ்லாத்தைத் தழுவாத சந்தர்ப்பத்திலும் இதே விதியே பின்பற்றப்படும். அது தவிர, திறத்தவர்கள் இருவரும் ஒரே நேரத்தில் இஸ்லாத்தைத் தழுவியவர்களாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அத்திருமணம் வலிதுடையதாகவே கொள்ளப்படும்".[147]

சட்டமா அதிபர் எதிர் றீட்[148]; அபேசுந்தர எதிர் அபேசுந்தர[149] ஆகிய இரு வழக்குகளிலும் முதற் திருமணத் திறத்தவர்கள் றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரமல்லாமல், விக்கிரக வழிபாட்டில் ஈடுபடுபவர்கள் என்பதற்கான சான்றுகள் எதுவுமற்ற நிலையில் அஹ்லுல்கிதாப் எனும் வேதக்காரர்களுக்கும், ஏனையவர்களுக்குமிடையிலான இத்தகைய வேறுபாடும் விக்கிரக வணக்கம் தொடர்பிலான விடயமும் மிகவும் முக்கியமாக ஆராயப்பட வேண்டியதொன்றாகும். ஆனால், இவ்வழக்குகள் இரண்டும் விசாரிக்கப்பட்ட எந்த நீதிமன்றமும் இக்கோணத்தை அவதானிக்கவில்லை என்பது துரதிர்ஷ்டவசமே.

முதற்திருமணத் திறத்தவர்கள் இருவரும் அஹ்லுல் கிதாப் எனும் வேதக்காரர்களாகவோ அல்லது வேறு மதத்தையுடையவர்களாகவோ இருக்கும் சந்தர்ப்பத்தில், அப்பெண் இஸ்லாத்தைத் தழுவும் போது அத்திருமணம் முடிவுறுத்தப்படும். சூறா மும்தஹனாவில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்:

147. மின்ஹாஜ் - உத் - தாலிபின் புத்தகம் 33 அத்தியாயம் III பிரிவு 1 பக்கம் 295.
148. 65 NLR 97 (SC); 67 NLR 25 (PC).
149. (1998) 1 SLR 185.

"முஃமின்களே! முஃமினான பெண்கள்
ஹிஜ்றத்துச் செய்தவர்களாக
உங்களிடம் வந்தால்,
அவர்களை நீங்கள் சோதித்துப்பாருங்கள்.
அல்லாஹ் அவர்களுடைய ஈமானை மிக அறிந்தவன்.
எனவே உண்மையில்
முஃமினான பெண்கள்
தாம் என்று அவர்களை நீங்கள் அறிந்தால்,
காபீர்களின் பக்கம்
அவர்களை நீங்கள் திருப்பி அனுப்பிவிடாதீர்கள்.
ஏனெனில் முஃமினான இவர்கள் அவர்களுக்கு-
காபிர்களுக்கு மனைவியராயிருப்பது ஹலாலாக இல்லை.
அவர்களும் இவர்களுக்குக் கணவர்களாக இருக்க
ஹலாலானவர்களல்லர். மேலும் காபீர்களாகிய அவர்களுக்கு,
அவர்கள் தம் மனைவியருக்குச் செலவு செய்ததை
நீங்கள் கொடுத்து விடுங்கள்.
இன்னும் இவர்களுக்கு -
இப்பெண்களுக்கு இவர்களுக்குரிய
மஹர்களைக் கொடுப்பீர்களானால்,
இவர்களை நீங்கள் திருமணம் செய்து கொள்வதும்
உங்கள் மீது குற்றமில்லை".[150]

முஸ்லிமல்லாத ஆண்களுடனான முஸ்லிம் பெண்களின் திருமணம், அவ்வாண் இஸ்லாத்தைத் தழுவாத சந்தர்ப்பத்தில் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்பது மேற்கூறப்பட்ட வசனத்திலிருந்து தெளிவாகின்றது என அப்துல்லா யூசுப் அலி கூறுகின்றார்.[151]

ஒருவர் இஸ்லாத்தைத் தழுவுவதனால், அவர் முஸ்லிம் சட்ட அதிகாரத்தினுள் ஆளப்படும் அதேவேளை, இஸ்லாத்தை விட்டுவிலகும் போது அவர் முஸ்லிம் சட்ட எல்லையிலிருந்து விலக்கப்படுகின்றார். கச்சிமுஹம்மது எதிர் பெனடிக்ட்[152] என்ற வழக்கில், இஸ்லாத்தை விட்டு விலகுதல் என்பது ஒரு திருமணத்தைத் தானாகவே முடிவுறுத்துகின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்குச் சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்திற்குக் கோரிக்கை விடுத்திருந்தார். இவ்வழக்கில் பிறப்பிலேயே முஸ்லிமான ஒருவர், முஸ்லிம் சட்டத்தின் பிரகாரம் ஒரு முஸ்லிம் பெண்ணைத் திருமணம் செய்திருந்தார். பின்னர், முகத்துவாரம் புனித ஜோன்ஸ் தேவாலயத்தில் கத்தோலிக்க மதத்திற்கு மாறிய பின்னர், றோமன்

150. புனித அல்குர்ஆன் (அப்துல்லா யூசுப்அலியினால் பதிப்பிக்கப்பட்டது) சூறா மும்தஹினா LX : 10.
151. அடிக்குறிப்பு 150இல் குறிப்பிட்ட பிரசுரத்தின் அடிக்குறிப்புகள் 5422, 5424.
152. 63 NLR 505.

கத்தோலிக்கப் பெண்ணைத் திருமணம் செய்திருந்தார். இவர் இருதாரமணம் எனும் குற்றத்திற்குக் குற்றவாளியாகக் காணப்பட்டார். இக்குற்றஞ் சாட்டப்பட்டவர் விசாரணையின் போதும், மேன்முறையீட்டு நடைமுறையின் போதும் பின்வரும் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்: மதமாற்ற நிகழ்வொன்றின் மூலம் தன் பெயரை மாற்றிய போதும், ரோமன் கத்தோலிக்கப் பெண்ணொருவரைத் திருமணம் செய்த போதிலும் கூட, தான் இஸ்லாமிய நம்பிக்கையையும், கொள்கையையும் கைவிடவில்லை என்பது அவரது நிலைப்பாடாகும். இதனால் உயர் நீதிமன்றமானது இவர் இஸ்லாத்தை விட்டுவிலகி வேறுமதத்திற்கு மாறியவர் என்பதன் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்ள மறுத்துவிட்டது.

## திருமணத்துடன் தொடர்புடைய நிபந்தனைகள்

முஸ்லிம் சட்டத்தின்படி, திருமணமென்பது மதரீதியான சமயச் சடங்குகளுடன் கூடிய ஒரு சமுதாய ஒப்பந்தமாகும். ஆகவே, திருமணத்தில் சம்பந்தப்பட்ட திறத்தவர்கள் இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கும், நல்லொழுக்கத்திற்கும் முரண்படாத வகையில் அமைந்த நிபந்தனைகளைத் திருமண ஒப்பந்தத்தின் போது கைச்சாத்திடலாம். உதாரணமாக, கணவன், மனைவியை அவளது சொந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தக் கூடாது;[153] அல்லது, தம்பதிகள் மணமகளின் இல்லத்தையே வசிப்பிடமாக அமைத்தல் வேண்டும்[154] என்பன போன்ற நிபந்தனைகள் ஷரிஆவிற்கு ஏற்புடைத்தானதாகும். ஒரு கணவன் தனக்கு வைப்பாட்டியாக எவரையும் வைத்திருக்கக் கூடாது என்பதும் ஒரு நிபந்தனையாக அமையலாம்.[155]

முதற் திருமணம் நடைமுறையில் இருக்கத்தக்கதாக, ஒரு கணவன் இரண்டாவது திருமணம் செய்யக்கூடாது[156] அல்லது முதல் மனைவியின் சம்மதமின்றி கணவன் இரண்டாவது திருமணம் செய்யக்கூடாது[157] என்பனவும் திருமண ஒப்பந்தத்தின் நிபந்தனைகளாக விதிக்கப்படலாம். இவையும் இஸ்லாமியக் கட்டுக்கோப்பிற்கு முரணானவையல்ல. ஹஸறத் அலி (றழி) அவர்களின் ஹஸறத் பாத்திமா (றழி) அவர்களுடனான திருமண ஒப்பந்தத்தின் ஒரு விதி பின்வருமாறு அமைந்திருந்தது: அதாவது அலி (றழி) அவர்கள் பாத்திமா (றழி) அவர்களின் மரணத்திற்கு முன்னர் வேறு எந்தப் பெண்ணையும் திருமணம் செய்யக் கூடாது.[158] அதே போல், பாத்திமா (றழி) அவர்கள்

153. See, Maulana Sayed Saeed Akhtar Rizvi, Islamic Law Relating to Marriage, (Mombasa 1967), page 23.

154. முஹம்மத் யாசீன் எதிர் மும்தாஸ் பேகம் 1936 AIR (Lahore) 716).

155. மீர் அஷ்றப் அலி எதிர் மீர் அஷ்ரத் அலி (1871) 16 Weekly Reporter (Sutherlands) 260.

156. முஹம்மத் அமீன் எதிர் அமீனா பீபி 1931 AIR (Lahore) 134.

157. சைனுத்தின் எதிர் லதீபுன்னிஸா பீபி (1919) Indian Law Report 46 Calcutta 141.

158. Afeab Hussain, Status of Women in Islam (Lahore, 1987) page 500.

மரணிக்கும் வரையிலும் அலி (றழி) அவர்கள் ஒரு தாரத்துடனேயே வாழ்ந்தார்கள். பாத்திமா (றழி) அவர்களின் மரணத்தின் பின்னர் அலி (றழி) அவர்களுக்குப் பன்னிரெண்டு மனைவியர் இருந்தனர். எவ்வாறாயினும், ஒருதார திருமண ஒப்பந்த விதிகளை மீறிச் செய்யப்படும் திருமணங்களும் வலிதானவையே. இவ்விடயத்தில் ஆழமான ஆராய்ச்சியை மேற்கொண்ட டாக்டர் லூஸி கரோல் பின்வருமாறு கூறுகின்றார்:

> "இந்தியத் துணைகண்டத்தின் ஆங்கில – முஹம்மதியச் சட்டப் பாரம்பரியத்தின் கீழான திருமண ஒப்பந்த விதிகள் வலிதுடையதும், சட்ட ஏற்புடைத்தானதுமாக இருந்த போதிலும் கூட, விதிகளை மீறும் போது வழங்கப்பட வேண்டிய தண்டனைகள் பற்றி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாவிட்டால், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பிரச்சினைகள் எழலாம். உதாரணமாக, ஒரு சாதாரண விதியான முதற்திருமணம் வலிதாக இருக்கும் போது ஒரு கணவன் இரண்டாவது திருமணம் செய்யக்கூடாது என்ற விதியை எடுத்துக் கொள்வோமானால், இவ்விதி வலிதானதாக இருப்பினும் கூட நடைமுறைச் சாத்தியமற்றதாக உள்ளது. ஒரு கணவன் விரும்பும் போது இரண்டாவது திருமணம் செய்வதிலிருந்து அவரைத் தடுக்க முடியாது; அத்திருமணம் வலிதானது. ஆனால், முதல் மனைவியினால் பெறப்படக் கூடிய நிவாரணம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே அமையும். திருமண ஒப்பந்த நிபந்தனைகளை மீறுவதற்கான தண்டனைகளாகப் பின்வருவன அமையலாம்: தனது முதல் மனைவியிடமிருந்து தனது இல்லற உரிமைகளை மீளப் பெறுவதற்கான கணவனின் கோரிக்கை மனைவியினால் தோற்கடிக்கப்படலாம்; கணவனுடன் வாழ மறுக்கும் சந்தர்ப்பத்திலும் அம்மனைவி அக்கணவனிடமிருந்து பராமரிப்பைப் பெறுவதற்குரிய சாத்தியங்களை உருவாக்கலாம். கணவனின் ஒப்பந்த நிபந்தனை மீறல், *தலாக் - ஏ - தப்வீத்தின்* மூலம் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்குக் கணவனினாலேயே மனைவிக்கு உரிமை வழங்கக் கூடிய வகையில், அதே திருமண ஒப்பந்தத்தில் நிபந்தனையொன்று விதிக்கப்படலாம்.[159]

தலாக் கூறும் கணவனின் உரிமையை மனைவிக்கு வழங்கக் கூடிய வகையிலான நிபந்தனையைத் திருமண ஒப்பந்தத்தில் இணைத்துக் கொள்வது சட்டபூர்வமானது என்பது பெரும்பாலான சட்டவியலாளர்களின் கருத்தாகும்.[160] அல்லது கடுமையான சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும்.[161] இத்தகைய விவாகரத்து முறையானது தலாக்-ஏ-தப்வீத் என

159. Dr. Lucy Carroll, Talaq - i – tafwid: The Muslim Woman's Contractual Access to Divorce, (Lahore 1996) pages 55-56 (italics added).

160. அக்லிமா காத்தூன் எதிர் மஹிபுர் ரஹ்மான் (1963) All Pakistan Legal Devisions (Dacca) 602.

161. பட்டான் எதிர் அப்துல் ஸலாம் 1950, 1950 AIR (Calcutta) 308. See also, K.N. Ahmed, The Muslim Law of Divorce, (New Delhi, 1978) pages 201-204.

அழைக்கப்படும். கணவனினால் வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில், கணவனின் நடத்தைகள் காரணமாக, மனைவி கணவனைத் தலாக் கூறி நீதிமன்றத்தின் தலையீடுகள் எதுவுமின்றி அத்திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வரலாம்.[162] மனைவியர்களுக்குக் கூறுமாறு நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹுத்தஆலாவினால் வழங்கப்பட்ட பின்வரும் அல்குர்ஆன் வசனமானது தலாக்-ஏ-தப்வீத்தை வலியுறுத்துகின்றது.

"உலக வாழ்க்கையையும்,
அதன் அலங்காரத்தையும் விரும்புகிறவர்களாக
நீங்கள் இருந்தால்,
வாருங்கள்,
உங்களுக்கு (உலகப்) பொருட்களை
நான் கொடுத்து அழகான விடுதலையாக
உங்களை நான் விவாக
விடுதலை செய்து விடுகின்றேன்".[163]

மேற்கூறிய திருவசனத்திற்கு அஹமட் விளக்கமளிக்கையில்[164]

'முஸ்லிம் சட்டவியலாளர்கள் இதனைப் பின்வருமாறு விளக்குகின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், அல்குர்ஆனியக் கட்டளைக்கு அடிபணியும் வகையில் தன்னுடன் வாழ்வதற்கோ அல்லது தன்னை விட்டுப் பிரிந்து விடுவதற்கோ ஆன தேர்வுரிமையைத் தனது மனைவியருக்கு வழங்கியிருந்தார்கள். அதாவது, மனைவியர் திருமணத்தை முடிவிற்குக் கொண்டுவரலாம் அல்லது தொடர்ந்திருக்கலாம். ஆயி'ா (றழி) அவர்கள் இதற்குப் பின்வருமாறு விளக்கமளித்திருந்தார்கள்: மனைவியராகிய நாங்களே பெருமானார் (ஸல்) அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு விரும்பினோம். ஆதலால் நாங்கள் திருமணத்தை முறித்துக் கொள்ளவுமில்லை, விவாகரத்துச் செய்யவுமில்லை; ஆகவே ஒரு மனைவி விரும்பும் பட்சத்தில், அத்திருமணத்தை முடிவுறுத்தக் கூடிய அதிகாரத்தைக் கணவன் சட்டபூர்வமாக மனைவிக்கு வழங்க முடியும் என்பது மேற்கூறிய வரலாற்றுச் சம்பவத்திலிருந்து தெளிவாகின்றது.'

இமாம் நவவி அவர்களினால், தொகுக்கப்பட்ட ஷாபிக் கோட்பாடுகளை உள்ளடக்கிய மின்ஹாஜ்-உத்-தாலிபீனில் 'தலாக்-ஏ-தப்வீத் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இமாம் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்:

---

162. சுரோஜ் மியா எதிர் அப்துல் மஜீத் 1953 AIR (Tripura) 6.
163. புனித அல்குர்ஆன் (அப்துல்லா யூசுப் அலியினால் பதிப்பிக்கப்பட்டது) சூறா அஸ்ஹாப் XXX III : 28.
164. K.N. Ahmed, The Muslim Law of Divorce, (New Delhi, 1978) page 185.

"இருவரும் இருபக்க முகவர்களாக நின்று கூறும் விவாகரத்து செயற்படுத்தப்படலாம். ஒரு கணவன் தனது விவாகரத்துக்காகவோ அல்லது திருமண மறுப்புக்காகவோ, தனது முகவராக ஒரு பெண்ணை நியமிக்கலாம். ஆனால், கணவன், மனைவி இருவரும் விவாகரத்தின் போது தங்களிருவரையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஒரே நபரை நியமிக்க முடியாது. ஆயினும், சில சட்டவியலாளர்கள் இதனை அனுமதித்துள்ளனர்.[165]

ஒரு கணவன், தனது மனைவியைத் தலாக் கூறுவதற்குத் தனது மனைவியையே நியமிக்க முடியாது என்பதன் அடிப்படையில் 'ரபிச் சட்டமானது தலாக்.ஏ.தப்வீத்திற்கு அனுமதி வழங்கவில்லை என்பதை மேற்கூறிய வசனம் மூலம் முன்வைக்கலாம். ஆயினும், மிகக் கூர்மையாகப் பகுத்தாராயும் போது இவ்வாசகம், சமாளிக்க முடியாத பிரச்சினைகள் எதனையும் பற்றிக் கூறவில்லை என்பது தெளிவாகின்றது. 'ரபிச் சட்டத்தின் பிரகாரம், ஒரு மனைவி தன் சார்பாகத் தான் செயற்படும் போது தனது கணவரினால் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது என்றிருந்தால், தன்பக்க நியாயங்களுக்காக அம்மனைவி, தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்தும் போது வேறு ஒருவரை நியமிக்கலாம். எவ்வாறாயினும், தலாக் கூறுவதற்கான அதிகாரம் என்பதிலிருந்து தலாக் கூறுவதற்கான முகவர் என்பது வேறுபிரித்துப் பார்க்கப்பட வேண்டியதொரு விடயமாகும். 'வேர்மா' கூறியது போல, ஒரு கணவன் தலாக் கூற முற்படும் போது, உண்மையிலேயே தன் சார்பில் தலாக் கூறுவதற்காக வேறு ஒருவரை அனுமதித்தால், அவர் தலாக் கூறுவதற்கான முகவராவார். ஆனால், இங்கு ஒருவர் தன் விருப்பத்தின் பெயரில் தலாக் கூறுவதற்கான அனுமதியை அவருக்கு வழங்குதலே தலாக்-ஏ-தப்வீத்[166] ஆகும்.

இச்சந்தர்ப்பத்தில், கணவன் மற்றொரு திருமணம் செய்யும்போது அம்மனைவி கணவனைத் தலாக் சொல்லக்கூடிய உரிமையை அக்கணவன், அம்மனைவிக்கு வழங்குதல் இலங்கையில் சட்டபூர்வமானதா என்ற கேள்வி எழுகின்றது. 'ரிஆவினால் இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது இவ்வத்தியாயத்தில் கலந்துரையாடப்பட்ட ஆதாரங்களின் மூலம் தெளிவாகின்றது. இது தொடர்பிலான இந்திய வழக்கான செயினுத்தின் எதிர் லத்தீபுன்னிஸா பீபி[167] என்ற வழக்கை இவ்விடத்தில் ஆராய்தல் அவசியம். இவ்வழக்கில் கணவன், தனது மனைவியின் சம்மதமின்றி வேறொரு திருமணம் செய்வதில்லை எனத் திருமண ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தார். கணவன் இரண்டாவதாக ஒரு திருமணம் செய்தவுடன் முதல் மனைவி அக்கணவனை விட்டுப் பிரிந்துவிட்டார்.

---

165. மஹறியுத்தின் அபு ஸக்கரியா யஹ்யா இப்னு ஷரீப் -ன்- நவவி மின்ஹாஜ் -உத்- தாலிபீன் புத்தகம் 36 பிரிவு 1 பக்கம் 321.

166. B.R. Verma, Mohommadan Law, (Delhi, 1980) page 192.

167. (1919) ILR 46 Calcutta 141.

அம்மனைவி தனது திருமண உரிமைகளை மீறிவிட்டதாக அம்மனைவிக்கெதிராகக் கணவன் வழக்குத் தொடர்ந்திருந்தார். அம்மனைவி முஸ்லிம் சட்டப்பிரகாரம், தனது கணவனினால் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பிரயோகப்படுத்தி அக்கணவனை மூன்று முறை விவாகரத்துச் செய்தார். கணவனினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், தான் அவரது மனைவியல்ல என வாதாடினார். நீதிமன்றமானது இது வலிதான திருமண முறிவு எனத் தீர்ப்பளித்து கணவனின் வழக்கைத் தள்ளுபடி செய்தது.

ஆயினும், இலங்கையில் நடைமுறையிலுள்ள நியதிச்சட்டத்தினுள் தலாக் - ஏ - தப்வீத் என்ற விடயத்தைப் புகுத்திக் கொள்வதில் சில சிரமங்கள் உள்ளன. முதலாவதாக, முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் 27ஆம் 28ஆம் பிரிவுகளும் அவற்றுடன் தொடர்புடைய அட்டவணைகளும் இவ்வகையிலான விவாகரத்து முறைக்கேற்றாற் போல அமையவில்லை, அத்துடன் 29ஆம் பிரிவின் பிரகாரம் இவ்விவாகரத்தைப் பதிவு செய்வதற்குரிய இடமும் வழங்கப்படவில்லை. இரண்டாவதாக, திருமண ஒப்பந்த விதிகளை, 'கடுத்தம்' எனப்படும் ஆவணமாகப் பதிவு செய்யும் வழக்காறு ஆரம்பகாலத்தில் இலங்கையில் இருந்து வந்த போதிலும் கூட, தற்போது இவ்வழக்கம் அருகிப் போய்விட்டது. அத்துடன் திருமணப் பதிவுப் பத்திரத்தில் இத்தகைய நிபந்தனைகளைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளும் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் இடம் பெறவில்லை. இவ்விடயம் தொடர்பில் மிகவும் ஆழமாக ஆராய்ந்த கலாநிதி. ஷஹாப்தீன் குழுவானது, முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 18(2)இல் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமென்றும், முதலாம் அட்டவணையின் IVஆம் படிவத்தில் 'வேறு' ஏதாவது நிபந்தனைகள் என்ற விடயத்திற்கு இடம் ஒதுக்கப்பட்டுத் திருமண ஒப்பந்த விதிகளையும் நிபந்தனைகளையும் இதில் பதிவு செய்ய வேண்டுமென்றும் சிபார்சு செய்தது.

### விவாகரத்துச் சட்டத்தின் சமனற்ற தன்மை

விவாகரத்துத் தொடர்பாகத் தற்போது நடைமுறையிலுள்ள முஸ்லிம் சட்டத்தில் சமனற்ற தன்மை காணப்படுதல் மற்றுமொரு மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். இப்போது நடைமுறையிலுள்ள சட்டத்தின் பிரகாரம் ஒரு முஸ்லிம் ஆண் தலாக் கூறுவதன் மூலம் மிகவும் இலகுவான முறையில் விவாகரத்துப் பெற்றுக் கொள்ளலாம். அதே போல, இலகுவாகவே தனது மனைவியை விவாகரத்துச் செய்த கணவன் மீண்டும் மற்றொரு திருமணமும் செய்து கொள்ளலாம். ஆயினும், எமது சமூகத்தில் விவாகரத்துப் பெற்ற எத்தனையோ பெண்கள் மீண்டும் திருமணம் செய்வதற்கு முடியாமல் மிகவும் கஷ்டத்தில் உள்ளார்கள். எமது பெருமானார் (ஸல்) அவர்களினால் கூறப்பட்ட வாழ்க்கை முறையோ அல்லது வாழ்ந்து காட்டப்பட்ட வாழ்க்கை முறையோ

இதுவல்ல. தான் வாலிபனாக இருக்கும் போதே தம்மிலும் வயதிற் கூடிய, விதவையான கதிஜாவை மணந்தார்கள். அதுமாத்திரமன்றி தனது வாழ்நாளின் மேன்மைபொருந்திய, புகழ்மிகுந்த கடைசி தசாப்தத்தில் விதவைகளான சைனப், உம்மு ஹபீபா ஆகியோரையும் மணந்தார்கள்.[168]

தற்போது நடைமுறையிலுள்ள முஸ்லிம் சட்டத்தின் பிரகாரம், தனது விருப்பத்தின் பெயரில் விவாகரத்துச் செய்வது ஒரு பெண்ணிற்கு இலகுவான விடயமல்ல. இத்தாக் காலத்தின் பின்னர், ஒரு விவாகரத்துப் பெற்ற பெண்ணினால் கணவனிடமிருந்து பராமரிப்புக் கோர முடியாது. அத்துடன் வேறு ஏதாவது நட்டஈட்டுத் தொகைக்கும் அவள் உரித்துடையவள் அல்ல. அநியாயமான முறையில் கணவனினால் விவாகரத்துச் செய்யப்படும் பெண்ணிற்கு வேதனையும் அவமானமுமே கிடைக்கின்றது. இவ்விடயத்தில், ஒரே நிலையிலுள்ள முஸ்லிமல்லாத பெண்ணைவிட இம்முஸ்லிம் பெண்ணின் நிலை மோசமானது. மிகவும் கண்டனத்திற்குள்ளாக்கப்பட்டதும், அதேவேளை, திருமணத்தைத் தொடர்ந்து கொண்டுசெல்ல முடியாதிருந்தால் கனிவுடன் பிரிந்துவிடுங்கள்[169] என்று திறத்தவர்களுக்கு விவரிக்கப்பட்டதுமான ஷரிஆ சட்டத்தின் முன்னால், இந்நிலைமை மட்டமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்பது திண்ணமாகும். சூறா அத்ஹாபில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: "பெண்களை நீங்கள் திருமணம் செய்து, அவர்களைத் தீண்டுவதற்கு முன்னர் தலாக் சொல்லிவிட்டால், அவர்களை அழகான முறையில் விடுதலை செய்து விடுங்கள்."[170] ஒரு திருமணம், உடலுறவின் மூலம் பூரணமாக நிறைவேறிய பின்னர், அக்கணவன் மனைவியை விவாகரத்துச் செய்வதானால், அம்மனைவியின் மீது அக்கணவனுக்குப் பாரிய பொறுப்புக்கள் உள்ளன. சூறா தலாக் பின்வருமாறு கூறுகின்றது. "நீதியான முறையில் பிரிந்து விடுங்கள்".[171] இது இவ்வாறிருக்கும் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டமானது[172] ஒரு நியாயமான அன்பளிப்புத் தொகையான மத்தாவைப்[173] பற்றி எந்த ஏற்பாடுகளையும் உள்ளடக்காமை அதிசயமே. அல்குர்ஆனியப் பொருள்கோடலுடன் மத்தா தொடர்பிலான ஏற்பாடுகள் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற வகையில் கலாநிதி. ஷஹாப்தீன் குழுவினால் செய்யப்பட்ட சிபார்சின் மூலம் இச்சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படலாம். இவை மிகவும் அவசரமாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய சாத்தியமான திருத்தங்களிற் சிலவாகும்.

168. See, Ahmad Thomson, The Wives of the Prophet Muhammad (1993 edition).

169. புனித அல்குர்ஆன் (அப்துல்லா யூசுப் அலியின் பதிப்பு) சூறா பகறா II: 229.

170. புனித அல்குர்ஆன் (அப்துல்லா யூசுப் அலியின் பதிப்பு) சூறா அஸ்றப் III: 49.

171. புனித அல்குர்ஆன். (அப்துல்லா யூசுப் அலியின் பதிப்பு) சூறா தலாக் LXV: 2.

172. அடிக்குறிப்பு 63.

173. 1966ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க சிங்கப்பூர் முஸ்லிம் நிர்வாகச் சட்டம் (பிரிவு 52(2).

அத்தியாயம் 05

# சட்டநடைமுறை இன்னும் சில பிரச்சினைகள்

நிவாரணமற்ற உரிமைகளில் எதுவித பிரயோசனமுமில்லை என்பதற்கிணங்க, சட்டநடைமுறையானது சட்டத்தைப் போன்றே முக்கியத்துவம் பெறுகின்றது. காதிநீதவான்களினால் பின்பற்றப்படும் நடைமுறைகளில் பல திருத்தங்களைச் செய்ய வேண்டிய அவசியமிருப்பதனால், அதற்கான சட்டத் திருத்தங்கள் அவசியமாகின்றன.

**தலாக் நடைமுறை**

1951ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 27, ஓர் ஆண் தனது மனைவியை விவாகரத்துச் செய்ய விரும்பினால், இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் எனக் கூறுகின்றது. தலாக் ஹஸன்,[174] தலாக் அஹ்ஸன்,[175] தலாக்-உல்-பித்தத்[176] போன்ற தலாக்கின் பாரம்பரிய வடிவங்களான வலிதற்றதாக்காத அல்லது செயற்திறனற்றதாக்காத வகையில் விவாகரத்திற்கு ஒரே வகையிலான நியதிச்சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே அச்சட்டம் வகுக்கப்பட்டுள்ளது. பேதமேற்பட்ட தம்பதிகளை சமரசப்படுத்துவதன் முக்கியத்துவத்தை இரண்டாம் அட்டவணையின் விதிகள் 2, 6, 7 என்பன வலியுறுத்துகின்றன. இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையானது, 1929ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துப் பதிவுகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையிலிருந்து சிறிது வேறுபடுகின்றது. நன்சூறா எதிர் சித்தி ஜாரியா[177] என்ற வழக்கில், முஸ்லிம் விவாக, விவாகரத்துப் பதிவுகள் சட்டம் தலாக் ஹஸன் நடைமுறையைப் பின்பற்றும் வகையில் அமைந்துள்ளது எனக் காதிகள் சபை தீர்ப்பளித்தது. 1951ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணை, இலங்கை முஸ்லிம் ஆண்களுக்கு தலாக் ஹஸன் வடிவ விவாகரத்தை ஏற்புடைத்தானதாக்கும் வகையில் அமைந்துள்ளது என்று கலாநிதி. எம். எஸ். ஜல்டின் தனது கருத்தைத்

---

174. மூன்று மாதவிடாய்க் காலங்களினுள் மூன்று முறை தலாக் கூறுவதன் மூலம் ஏற்படும் விவாகரத்து மூன்றாவது தலாக் கூறப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும் திறத்தவர்கள் சமரசம் செய்து கொள்ளலாம். மூன்றாவது தலாக் கூறப்பட்டுவிட்டால், விவாகரத்து மீளப் பெறமுடியாததாகிவிடும்.

175. ஒரு மாதவிடாய்க் காலத்தினுள் ஒரு முறை தலாக் கூறுதல் தலாக் அஹ்ஸன் எனப்படும். இத்தாக் கால எல்லையினுள் இவ்விவாகரத்தை மீளப் பெறலாம். இத்தாக்காலம் முடிவடைந்ததும் இவ்விவாகரத்து மீளப் பெற முடியாததாகிவிடும்.

176. ஒரு மாதவிடாய்க் காலத்தினுள் ஒரே தடவையில் மூன்று முறை தலாக் சொல்வதனாலேற்படும் விவாகரத்து முறையாகும். இத்தலாக் கூறப்பட்டவுடனேயே, இது மீளப்பெற முடியாத விவாகரத்தாக மாறிவிடும். சட்டவியலாளர்களினால் இது பெரிதும் விரும்பப்படாததொரு முறையாகும்.

177. (1945) MMDR III, 40.

தெரிவித்துள்ளார்.[178] ஆனால், முஹம்மத் பாறுக் கான் எதிர் ஏ.எச். மூமினும் ஏனையோரும்[179] என்ற வழக்கில் நீதியரசர் அமீர் இஸ்மாயில் இக்கருத்தைப் பின்பற்றவில்லை. ஒரேயொரு தலாக் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளதால் இரண்டாம் அட்டவணை விதிகளில் தலாக் அஹ்ஸன் வடிவமே பின்பற்றப்படுவதாக நீதியரசர் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.[180]

பாரம்பரியமாக நடைமுறையிலிருந்த பல்வேறு வடிவங்களில் அமைந்த தலாக் விவாகரத்தை, இரண்டாம் அட்டவணை விதிகள் மேலோங்கி விட்டன என்பது மேலோட்டமாக விளங்கிக் கொள்ளக் கூடியதொரு விடயமாகும்.

ஆனால் 1951ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 16இன் பிரகாரம் ஒரு விவாகரத்தின் வலிதோ, வலிதற்ற தன்மையோ அவ்விவாகரத்துப் பதிவு செய்யப்படுவதில் தங்கியிருக்கவில்லை. நன்கூறா எதிர் சித்தி ஜாரியா என்ற வழக்கில் காதிகள் சபையின் கருத்து இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். இங்கு எமது தற்போதைய சட்டத்தின் அதே பொருள் கோடலையே முஸ்லிம் விவாக, விவாகரத்துப் பதிவுகள் சட்டம் கூறுகின்றது.

> "ஒரு விவாகரத்தை, உரியவர்கள் பதிவு செய்வதற்குத் தவறும் பட்சத்தில் அல்லது சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நடைமுறையைத் தவிர வேறு நடைமுறையைப் பின்பற்றி விவாகரத்துப் பெறுவதற்கு ஒரு முஸ்லிம் இன்னுமொரு முஸ்லிமைத் தூண்டும் பட்சத்தில் அவை தண்டனைக்குரிய குற்றங்களாகும். இச்சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரமல்லாமல் முஸ்லிம் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட விவாகரத்து வலிதானது: ஆனால் இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும். விவாகரத்தின் வலிதோ, வலிதற்ற தன்மையோ விவாகரத்தைப் பதிவு செய்வதிலோ அல்லது பதிவு செய்யாமையிலோ தங்கியிருக்கவில்லை. ஆனால், முஸ்லிம் சட்டத்தின் கீழ் வலிதாக்கப்பட்ட ஒரு விவாகரத்து, இச்சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்படவில்லை என்ற காரணத்தினால் வலிதற்றதாகாது."[181]

இங்கு நாம் குழப்பத்தில் இருக்கின்றோம். ஷரிஆ சட்டத்தை முன்னிறுத்த முயல்கின்ற பிரிவு 16ற்கும், விவாகரத்துப் பெறுவதில் இரண்டாம் அட்டவணையைப் பின்பற்றக் கோருகின்ற பிரிவு 27ற்குமிடையில் முரண்பாடுகள் இருக்கின்றனவா? பிரிவு 27இன் பிரகாரம் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை மாத்திரம்தான் விவாகரத்திற்காகப் பின்பற்ற வேண்டிய நடைமுறையா? அப்படியாயின் இந்நடைமுறை தலாக் ஹஸன், தலாக் அஹ்ஸன், தலாக்-உல்-பித்தத் வடிவங்களில் அமைந்த தலாக் முறையுடன்

178. See, M.S. Jaldeen, The Muslim Law of Marriage, Divorce and Maintenance in Sri Lanka, page 39.

179. (1994) Bar Association Law Journal Reports, Volume V page 80.

180. அடிக்குறிப்பு 179 ல் குறிப்பிடப்பட்ட புத்தகத்தின் பக்கம் 81.

181. (1945) MMDR III 40, 44-45.

பொருத்தப்பாடாக அமைந்த நடைமுறையா? இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை மாத்திரம்தான் பின்பற்றக்கூடிய தனிப்பட்ட நடைமுறை என்ற நிலையில்லாது அத்துடன் மேற்கூறப்பட்ட தலாக்கின் பாரம்பரிய வடிவங்களுக்கு ஏற்றாற் போல் அமையுமென்றிருந்தால், அத்தகைய பாரம்பரிய தலாக்கின் வடிவங்களுடன் பொருந்தாமல் இரண்டாம் அட்டவணை மாத்திரமே பின்பற்றப்பட்டால் அத்தகைய விவாகரத்தின் வலிதுடமை என்ன? இவைபோன்ற விடயங்கள் அவசரமாகத் தெளிவு பெற வேண்டியவைகளாகும்.

## மனைவியினால் கோரப்படும் விவாகரத்து நடைமுறை

ஒரு மனைவி தனது கணவனிடமிருந்து பஸஹ் முறையில் விவாகரத்துப் பெறுவதாயின் மூன்றாம் அட்டவணையின் விதிகளைப் பின்பற்ற வேண்டுமென்று பிரிவு 28(1) கூறுகின்றது.[182] பிரிவு 28(2)இன் மூலம் பஸஹ் தவிர்ந்த குலா, முபாறத் போன்ற மனைவியினால் கோரப்படக்கூடிய விவாகரத்துக்களுக்கும் மூன்றாம் அட்டவணை விதிகள் ஏற்புடைத்தானதாகும்.[183 184]

இதற்கு முன்னுள்ள அத்தியாயத்தில் காணப்பட்டுள்ளது போல் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 16 தலாக் தப்வீத் முறையின் வலிதுடைமையை அங்கீகரித்திருந்தாலும்கூட அத்தகைய விவாகரத்து முறைகளின் பதிவு செய்தல் பற்றிக் குறிப்பிடும் எந்தப் பிரிவுகளும் சட்டத்தில் இல்லை. அத்தகைய விவாகரத்து முறைகள் பிரிவு 28(2)இன் கீழ் பதிவு செய்யப்படலாமா என்பதில் சில சந்தேகங்கள் உண்டு. குறிப்பாக தலாக் தப்வீத்தின் அங்கீகாரம் தொடர்பில் தெளிவுபடுத்தும் சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டும்.

பிரச்சினைக்குரிய நிகழ்வுகளை ஆராய்ந்து தீர்ப்பு வழங்கும் நிலை தலாக் முறையில் இல்லை என்பதே இரண்டாவது அட்டவணைக்கும் மூன்றாவது அட்டவணைக்கும் இடையிலுள்ள வேறுபாடாகும். ஏனெனில் எவ்விதக் கேள்வியுமின்றி தலாக் கூறும் முழு உரிமையைச் சட்டம் கணவனுக்கு அளித்துள்ளது.

இரண்டாவது அட்டவணையின் விதி 3 பின்வருமாறு தெளிவாகக் கூறியுள்ளது. அதாவது, தலாக்கிற்கான காரணங்களையோ அல்லது கணவன் தலாக் கோருவதற்கான அடிப்படைகளையோ பதிவு செய்தலாகாது எனக் குறிப்பிட்டுக் கூறியுள்ளது. அதேவேளை, பஸஹ் விவாகரத்திற்கான விண்ணப்பத்தின் போது

---

182. கணவனின் மீதான ஏதேனும் தவறை மனைவி நிரூபிக்கும் பட்சத்தில் வழங்கப்படும் விவாகரத்தாகும். திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்குப் போதுமானதொரு வழியாக முஸ்லிம் சட்டம் இதனை ஏற்றுக்கொண்டுள்ளது.

183. மனைவி ஒரு குறிப்பிட்ட தொகையைக் கணவனுக்கு நஷ்டஈடாக வழங்குவதன் மூலம் மனைவியின் வேண்டுகோளின் பெயரில் கட்டாயமாகத் திருமணத்தை முறிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் கணவனினால் திருமணம் முடிவுக்குக் கொண்டு வரப்படுதல்.

184. திறத்தவர்களின் பரஸ்பர சம்மதத்துடன் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வருதல்.

கணவனின் கொடுமை முஸ்லிம் சட்டத்தின் எந்தப் பிரிவினால் ஆளப்படுகின்றனரோ அந்தப் பிரிவின் கீழ் கணவன் செய்ய வேண்டியதைச் செய்யாதுவிடலும், செய்யக் கூடியதைச் செய்தலும் ஆகிய 'தவறு' என்பவற்றை மனைவி நிரூபிக்க வேண்டிய தேவைப்பாடு உண்டு.[185] பஸஹ் தொடர்பிலான விசாரணை மூன்று முஸ்லிம் மத்தியஸ்தர்களின் உதவியுடன் காதிநீதவானினால் நடத்தப்படும். மத்தியஸ்தர்களின் பிரசன்னமின்றி நடைபெறும் பஸஹ் விவாகரத்தின் வலிதுத் தன்மை பாதிப்படையும்.[186] மூன்றாம் அட்டவணையின் விதி 11 பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

> "வழக்கின் நடவடிக்கைகளைக் காதிநீதவான் குறிப்பிடுவதுடன், சத்தியம் செய்து மனைவியும் அவளது சாட்சிகளும் கணவன் சமூகமாயிருப்பின் அன்னாரது சாட்சிகளும் அளித்த வாக்கு மூலத்தை எழுதிவைத்தல் வேண்டும். ஒரு வழக்கில் மனைவியினது சாட்சிகளில் இருவருக்குக் குறையாதவர்களை விசாரணை செய்தல் வேண்டும். வாக்குமூலத்தைக் கொடுத்த ஒவ்வொருவருக்கும், அவரவர் வாக்குமூலத்தைக் காதிநீதவான் இரண்டாவது முறை வாசித்துக்காட்டித் தேவையான திருத்தங்களைச் செய்தபின் அதனை அளித்தவர் அதில் தமது கைச்சாத்தையிட்டல் வேண்டும். யாராயினுமொரு சாட்சி அதில் கையொப்பமிட மறுத்தால் அவ்விதம் மறுத்தார் என்பதைக் காதிநீதவான் அதில் குறிப்பிடுதல் வேண்டும்."

சமீன் எதிர் நூர் ஸபிய்யா[187] என்ற வழக்கில், ஒரு மனைவியின் விவாகரத்திற்கான விண்ணப்பத்தின் பெயரிலான விசாரணையின்போது இரண்டு சாட்சிகளின் தேவைப்பாடு அவசியமாக இருந்தாலும் அவ்விரு சாட்சிகளும் முஸ்லிமாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை என்று காதிகள் சபை தீர்ப்பளித்தது.

## பிரிவு 47இன் விசாரணைகளுக்கான நடைமுறை

மஹர், பராமரிப்பு, பிரசவச் செலவு, கைக்கூலி தொடர்பாகக் கோரப்படும் விண்ணப்பங்களின் மீது காதிநீதவானினால் நடாத்தப்படும் விசாரணைகள் பற்றி பிரிவு 47 கூறுகின்றது. பிரிவு 47இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் மீதான விசாரணைகளின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறை நான்காம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை, குடியியல் சட்டக் கோவையின் சுருக்க நடைமுறையை ஒத்தது. அத்துடன் மூன்றாம் அட்டவணையில் விதி 11இல் குறிப்பிடப்பட்டுள்ள, நடைமுறையைப்

185. 1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (இச்சட்டமானது 1951ஆம் ஆண்டின் 31ஆம் இலக்கச் சட்டம், 1955ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டம், 1965ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கச் சட்டம், 1969ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டம், 1975ஆம் ஆண்டின் 41ஆம் இலக்கச் சட்டம் என்பவற்றினால் திருத்தப்பட்டது) அடிக்குறிப்பு 10இல் குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 28, 3ம் அட்டவணை.

186. பரீத் எதிர் ஜெஸிமா (1967) MMDR V, 65, பரீத் எதிர் ஜெஸிமா (1967) MMDR V 63 ஒப்பிடுக.

187. (1960) MMDR V, 60.

பதிவு செய்தல் எனும் விடயம் இவ்வட்டவணையின் கீழ் நடைபெறும் விசாரணைகளுக்கும் ஏற்புடைத்தானதாகும்.[188] மத்தியஸ்தர்களின் தேவைப்பாட்டை வலியுறுத்தும் எவ்வித விதிகளும் இவ்வட்டவணையில் இல்லை. பராமரிப்புத் தொடர்பிலான வழக்கில், மத்தியஸ்தர்களின் பிரசன்னமில்லை என்ற கோணத்தில் எழுகின்ற வாதங்களை காதிகள் சபை இலகுவில் நிராகரித்துள்ளது.[189]

இலங்கையில் பெருமளவில் காதிநீதிமன்றங்களுக்குச் செய்யப்படும் விண்ணப்பங்கள் பிள்ளைகளின் பராமரிப்புத் தொடர்பிலானவையாகும். பிள்ளைகள் தொடர்பிலான பராமரிப்பில் திருமணம் வலிதாக உள்ள போதும், பெற்றோர் பிரிந்த பின்னரும், பெற்றோர் விவாகரத்துப் பெற்ற பின்னரும் தகப்பனுக்குப் பொறுப்புடைமை உண்டு என முஸ்லிம் சட்டம் அங்கீகாரம் வழங்கியுள்ள போதிலும் கூட, நிதர்சனமாகப் பார்க்கும் போது விவாகரத்தின் பின்னர் அல்லது பிரிவின் பின்னர், பிள்ளைகளுக்கான பராமரிப்பை அப்பிள்ளைகள் சார்பில் கணவனிடமிருந்து கோரும் பெண்கள் மிகவும் சிரமங்களுக்குள்ளாகின்றனர். காதிநீதிமன்றத்தில் பராமரிப்புத் தொடர்பில் விண்ணப்பம் செய்யும் போது, பராமரிப்புக்கான நியாயமான தொகையை வழங்குமாறு கட்டளை பிறப்பிப்பதற்காகக், கணவனின் அல்லது முன்னாள் கணவனின் வருமானத்திற்கான ஆதாரங்கள் காதிநீதிமன்றத்திற்குத் தேவையாக உள்ளன. அவற்றைப் பெற்றுக் கொள்வதில் பெண்கள் மிகவும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர். அந்த ஆண், அரசாங்க நிறுவனத்திலோ, பொது நிறுவனத்திலோ அல்லது தனியார் நிறுவனத்திலோ தொழில் புரிபவராயின், காதிநீதவான் சம்பள விவரங்களை வேலை தருபவரிடமிருந்து கோரலாம். ஆனால் பெரும்பான்மையான முஸ்லிம் ஆண்கள் சுயதொழில் புரிபவர்களாக இருப்பதனால், பிள்ளைகள் தொடர்பிலான பராமரிப்புத் தொகைக்கான கட்டளை பிறப்பிப்பதில் ஆண்களினால் வழங்கப்படும் சாட்சியங்களிலேயே நீதிமன்றங்கள் தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதனால், பராமரிப்பாக சிறிய தொகையையே வழங்கும்படி கட்டளையிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. அதுமாத்திரமன்றி பராமரிப்புத் தொகை தொடர்பில் ஆண்கள் பெரும்பாலும் காதிகள் சபைக்கு மேன்முறையீடு செய்பவர்களாகவே இருக்கிறார்கள்.[190]

மற்றுமொரு புறத்தில், தொகை சிறியதாக இருக்கின்ற போதிலும்கூட, கட்டளை பிறப்பிக்கப்பட்டதும், அப்பராமரிப்புத் தொகையைப் பிள்ளைகளுக்கு வழங்கத் தகப்பன்மார் தவறிவிடுகின்றனர். இச்சந்தர்ப்பங்களில், காதிநீதவானினால் வழங்கப்பட்ட கட்டளையின் வலியுறுத்தற் கட்டளைகள் மூலம் அப்பணத்தைப் பெற்றுக்கொள்ள, நீதிமன்றங்களுக்குச் செல்வதில் பெண்கள் அதிக நேரத்தையும்,

188. அடிக்குறிப்பு 185இல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் 4ஆம் அட்டவணையின் 7ஆம் விதி.

189. பரீத் எதிர் ஜெஸிமா (1967) MMDR V 63,64.

190. முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் சட்ட உளவளத்துணைப் பிரிவின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு திரட்டப்பட்ட தகவல்.

பணத்தையும் செலவு செய்ய வேண்டியுள்ளது. சில வேளைகளில் பராமரிப்பாகப் பெறப்படும் தொகையை விடவும் அதிகளவான தொகையை அவர்கள் செலவிட வேண்டியுள்ளது. பராமரிப்புத் தொடர்பிலான காதிநீதவான்களின் கட்டளைகளை அமுல்படுத்துவதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் இந்நூலின் அத்தியாயம் IVஇல் விரிவாக ஆராயப்படுகின்றன.

### நடைமுறையை ஒருங்குபடுத்தல்

காதிநீதிவான்களின் முன் கொண்டுவரப்படும் திருமணம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில், பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைச் சிறந்த முறையில் கையாளுதல் மிகவும் முக்கியமானதொரு விடயமாகும். முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்திலுள்ள இடைவெளிகளுக்குச் சரியான திருத்தச் சட்டங்களைக் கொண்டு வருவதன் மூலமும் ஏற்புடைத்தான நடைமுறைகளை காதிநீதவான்களுக்கும் ஏனைய தேவைப்பாடுடையவர்களுக்கும் பயிற்றுவிப்பதன் மூலமும் இவற்றைச் சிறந்த முறையில் கையாளக் கூடியதாக அமையும். காதிநீதவான்களாக நியமிக்கப்படுபவர்கள் நேர்மையுடையவர்களாகவும் தேவையான ஆற்றலும் அறிவுமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தைப் பற்றி ஓரளவு அறிவும் தேவையான தகைமையுமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியினால் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்திற்கு விடையளித்த சில காதிநீதவான்களின் விடைகளில் இருந்து, தலாக்கிற்கான நடைமுறைகளை விளக்கும் இரண்டாம் அட்டவணைக்கும், பஸஹ்ரிற்கான நடைமுறைகளை விளக்கும் மூன்றாம் அட்டவணைக்குமிடையிலுள்ள பாரிய வேறுபாடுகளில் காணப்படும் தெளிவின்மையைக் கோடிட்டுக் காட்டியது. எழுதுவதற்கோ அல்லது தட்டச்சு செய்வதற்கோ போதிய வசதி வாய்ப்புகளின்மையினாலும், அத்தகைய வசதி வாய்ப்புக்களைப் பெறுவதற்குப் போதிய மூலதனமின்மையினாலும் 11ஆம் விதியின் பிரகாரம் சாட்சியங்களைப் பதிவு செய்வதில் சில காதிநீதவான்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

காதிநீதிமன்றங்களில் செய்யப்படும் விவாகரத்து விண்ணப்பங்களைக் கையாளுதல் தொடர்பாக காதிநீதவான்களினால் வழங்கப்பட்ட புள்ளிவிபரங்களை ஆராயும் போது, மனைவியினால் விண்ணப்பிக்கப்படுகின்ற பஸஹ் விவாகரத்திற்கான விண்ணப்பங்களே அதிகளவில் காதிநீதிமன்றங்களில் காலதாமதமாகிக் குவிந்து கிடப்பது தெரிய வருகின்றது. ஏற்புடைத்தான நடவடிக்கை முறைகள் தொடர்பில் காதிநீதவான்களின் தெளிவின்மை காரணமாக அல்லது உதவியின்மை காரணமாக, மூன்றாம் அட்டவணை விதிகளுக்கேற்ப வழக்கு நிகழ்வுகளின் அடிப்படையில் விசாரணை செய்வதைத் தவிர்த்து, பஸஹ் விவாகரத்திற்குக் கணவன்மாரின் அனுமதியைப் பெறுவதற்குக் காதிநீதவான்கள் முயற்சி செய்வது தெளிவாகின்றது. காதி நீதிமன்றங்களில் வழக்கறிஞர்கள் தோன்றுவதில்லை

யாகையினால், பதிவுகளை மிக்க கவனமாகப் பேணுவது முக்கியமாகும் என செயின் எதிர் சுபைதா எனும் வழக்கில் காதிகள் சபை தீர்ப்பளித்துள்ளது.[191] இதனால் காதிகள் சபையினால் காதிநீதிமன்றத்திற்கு வழக்குகள் அவ்வப்போது மீண்டும் ஆரம்ப விசாரணைகளுக்காக அனுப்பப்படுகின்றன.

ஒரு வழக்கில் காதிநீதவானினால் கையாளப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையும் ஏனைய விபரங்களும் அடங்கிய அட்டைக் கோப்பினுள் ஏனைய சில வழக்குகளின் பதிவுகள் இடப்பட்டிருந்ததைக் காதிகள் சபை அவதானித்திருந்தது.[192] இக்காதிநீதவான் ஒரு சட்டத்தரணி என்பதும் குறிப்பிடத்தக்கது. சில வேளைகளில் திறத்தவர்கள் போதிய ஆதாரங்களைச் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்படு வதில்லை.[193] குறுக்கு விசாரணைகளுக்கு அனுமதிக்கப் படுவதில்லை.[194] அல்லது சில வேளைகளில் மிகவும் மோசமான முறையில் நடத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகள், பிரச்சினை மேலும் மோசமான நிலைக்குள்ளாவதற்கு வழிகோலுவது மாத்திரமின்றி திறத்தவர்களிடையேயும் அவர்களது குடும்பத்தினரிடையேயும் தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படுவதற்கு வழிகோலுவதாகவும் அமைந்துவிடுகின்றன. காதிநீதவான்களின் அந்தஸ்தை உயர்த்துவதன் மூலமும், வழக்குகளைத் திறமையான முறையில் நடத்துவதற்குரிய வளங்களையும், வாய்ப்புக்களையும் காதிநீதவான்களுக்கு சிறந்த முறையில் வழங்குவதன் மூலமும் இத்தகைய பாரிய நீண்டகால மனக்கசப்புக்களைக் குறைக்கலாம்.

---

191. செயின் எதிர் சுபைதா 5 MMDR 51, 52.
192. ஜமால்தீன் எதிர் சித்தி நஸீஹா 5 MMDR 40.
193. செயின் எதிர் சுபைதா 5 MMDR 51.
194. அப்துல் ஸலாம் எதிர் சுஹறா உம்மா 5 MMDR 56.

அத்தியாயம் 06

# வலியுறுத்தற் கட்டளைகளும், மேன்முறையீட்டு நடைமுறைகளும்

காதிநீதவான்களினால் வழங்கப்படும் வலியுறுத்தற் கட்டளைகளை அமுல் செய்தல் பற்றி 1951ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பகுதி VIII கூறுகின்றது.[195] இச்சட்டமானது மஹர், கைக்கூலி என்பனவற்றை மீளப்பெறுவதற்கான கட்டளையை நடைமுறைப்படுத்துவதையும்; பராமரிப்பு, பிரசவச் செலவு என்பனவற்றை மீளப்பெறுவதற்கான கட்டளையை நடைமுறைப் படுத்துவதையும் அடிப்படையில் வேறுபடுத்திக் காட்டுகின்றது.

### மஹர், கைக்கூலி என்பனவற்றை மீளப் பெறுதல்

மஹர், கைக்கூலி என்பனவற்றை மீளப்பெறுதல் தொடர்பில், காதிநீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளையை நிறைவேற்றக் கோரும் பத்திரம், தகுந்த வேண்டுதல் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட வேண்டுமென்பதே சட்டத்தின் தேவைப்பாடாகும்.[196] நீதிபரிபாலன முறைச்சட்டத்தினால் வேண்டுதல் நீதிமன்றம் இல்லாமலாக்கப் பட்டதையடுத்து இப்பத்திரம் எந்நீதிமன்றத்திற்கு வழங்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் ஒரு குழப்பநிலை தோன்றுகின்றது.[197]

வேண்டுதல் நீதிமன்றமானது, முதல்நிலை நீதிமன்றத்தினால் பதிலீடு செய்யப்பட்டதனால், இப்பத்திரம் வழங்கப்படுவதற்கேற்ற நீதிமன்றம் முதல்நிலை நீதிமன்றமாகத்தான் இருக்க வேண்டும் என்ற கருத்துத் தோன்றினாலும் கூட, நீதிபரிபாலன முறைச்சட்டத்தின் நான்காம் அட்டவணையின் பிரகாரம், மஹரை மீளப் பெறுவதற்காக ஒரு முஸ்லிமினால் செய்யப்படும் கோரலுக்கு முதல்நிலை நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் விலக்களிக்கப்பட்டுள்ளது என்பது இங்கு முக்கியமாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.[198] மஹரை மீளப்பெறுவதற்கான பத்திரம், மாவட்ட நீதிமன்றத்திற்கே வழங்கப்பட வேண்டுமென்ற தேவைப்பாடு வலியுறுத்தப்பட்டுள்ள அதேவேளை, கைக்கூலியை மீளப்பெறுவதற்கான பத்திரமும் மாவட்ட நீதிமன்றத்திற்குத்தான் வழங்கப்பட வேண்டுமென்பதில்

195. இச்சட்டமானது 1951ஆம் ஆண்டின் 31ஆம் இலக்கச் சட்டம், 1955ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டம், 1965ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கச் சட்டம், 1969ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டம், 1975ஆம் ஆண்டின் 41ஆம் இலக்கச் சட்டம் என்பனவற்றினால் திருத்தப்பட்டது.

196. மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 65 (2).

197. 1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கச் சட்டம்.

198. 1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நீதிபரிபாலனமுறைச் சட்டத்தின் அட்டவணை 4, பிரிவு 25.

எவ்வித சந்தேகமுமில்லையென்று அமீன் வாதாடுகின்றார்.[199] நான்காம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிப்பு என்பது, குடியியல் நீதிமன்றமாக இயங்கும் முதல்நிலை நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தைக் குறிப்பிட்டுக் கூறுகின்றது என்று கலாநிதி. ஜல்டின் கருத்துத் தெரிவித்துள்ளார்.[200] அவர் மேலும் கூறுவதாவது: நான்காம் அட்டவணையானது காதிநீதிமன்றத்தின் முழுமையான, தனியான நியாயாதிக்கம் பற்றியே கூறுகின்றது. எவரும் மஹரை மீளப்பெறுவதற்காக, முதல்நிலை நீதிமன்றத்திற்கு நேரடியாக வழக்குத் தாக்கல் செய்ய முடியாது. ஆனால் அதற்கான வலியுறுத்தல் பத்திரத்தைத் தாக்கல் செய்வதற்கான நீதிமன்றம் முதல்நிலை நீதிமன்றமே. இலங்கையின் 1980ஆம் ஆண்டுச் சட்டவாக்கத்தின் உத்தியோகபூர்வமற்ற பதிப்பைத் தனது கருத்துக்கு ஆதாரமாக அவர் கூறுகின்றார்.[201] இது தொடர்பிலான சட்ட நிலையில் தெளிவான சீர்த்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும். ஏனெனில் வலியுறுத்தற் கட்டளைகளை எந்த நீதிமன்றத்திற்கு வழங்குவது என்ற விடயம் தொடர்பில், சட்டவியலாளர்கள், சட்டத்தரணிகள், நீதிபதிகள் மத்தியில் ஒரு தெளிவற்ற நிலை காணப்படுகின்றது.

### பராமரிப்பையும், பிரசவச் செலவையும் மீளப்பெறுதல்

பராமரிப்பைப் பெற்றுக் கொள்வதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் முற்றிலும் வித்தியாசமானவை. பராமரிப்பும் பிரசவச் செலவும் நீதிமன்றத்தினால் தண்டப்பணமாகப் பெற்றுக் கொள்ளப்படுவதனால், அவற்றை நீதவான் நீதிமன்றத்தினூடாகவே மீளப்பெற முடியும்.[202] வலியுறுத்தற் கட்டளையை வழங்குவதற்கு முன்னர், காதிநீதவான் பிரதிவாதிக்கு அறிவுறுத்தல் வழங்குவதுடன், விசாரணையின் பின்னர் வலியுறுத்தற் கட்டளை வழங்க வேண்டிய தேவைப்பாடு இருப்பதாக அவர் திருப்தியடைய வேண்டும்.[203] ஆனால், மஹர் அல்லது கைக்கூலியை மீளப்பெற்றுக் கொடுப்பதற்கான நியாயாதிக்கம் நீதவான் நீதிமன்றத்திற்கு இல்லை. இருந்தாலும் சில காதிநீதவான்கள் அறியாமையின் காரணமாக, முதல்நிலை நீதிமன்றத்திற்கு வழங்க வேண்டிய வலியுறுத்தற் கட்டளைகளை, நீதவான் நீதிமன்றத்திற்கு வழங்கி விடுவதுமுண்டு.[204]

199. See, A.H.G. Ameen, The Quazi Court Procedure and Practice (Colombo 1999) page 73.
200. M.S. Jaldeen, The Muslim Law of Marriage, Divorce and Maintenance in Sri Lanka, (Colombo 1990) page 79.
201. அடிக்குறிப்பு 195இல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 65 (2).
202. மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 66.
203. தாஹிர் எதிர் ரபி 72 NLR 19.
204. ஏ.சீ.எம். உவைஸ் எதிர் லாபிர் சித்தி சுஹைறா – நீதியரசர் பாலகிட்ணர் - CA Application No. 8056/87 decided on 25/03/1998 (unreported) .

சட்டத்தின் பிரிவு 64 (1) மற்றும் பிரிவு 66 என்பனவற்றின் கூட்டு விளைவு யாதெனில், பராமரிப்பை மீளப்பெற முற்படும் ஒரு பெண் தன் கணவன் வாழும் பிரதேச நீதவான் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. அத்துடன் பிரிவு 64 (3)இன் பிரகாரம், தண்டப்பணமாக நீதவான் நீதிமன்றத்தின் மூலம் பெறப்படும் பணமும் கூட, காதிநீதவானுக்கே அனுப்பப்படுகின்றது. மீண்டும் காதிநீதிமன்றம் சென்றுதான் அந்தப் பெண் அப்பணத்தைப் பெறவேண்டிய நிலை காணப்படுகின்றது. பராமரிப்பைக் கோரும் பெண் வாழும் பிரதேச நீதவான் நீதிமன்றத்திற்கு வலியுறுத்தற் கட்டளை வழங்கப்படுதல், நீதவான் நீதிமன்றத்தினால் மீளப் பெறப்படும் பணத்தை நேரடியாக உரிய பெண்ணிடம் ஒப்படைத்தல் என்ற வகையில் சட்டச் சீர்திருத்தங்கள் ஏற்படுமாயின், பெண்கள் எதிர் நோக்கும் இத்தகைய பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

பராமரிப்பைக் கோரும் பெண்களும், சிறுவர்களும் எதிர்நோக்கும் மற்றுமொரு பிரச்சினை என்னவென்றால், காதிநீதவான் யாருக்கெதிராகப் பராமரிப்புக் கோரிக் கட்டளை பிறப்பிக்கின்றாரோ, அவர் வெளிநாட்டில் இருந்தால் அல்லது தலைமறைவாக இருந்தால் நீதவான் நீதிமன்றத்தின் மூலம் அதனைத் தண்டப் பணமாகப் பெற்றுக்கொள்வதில் நடைமுறைச் சிக்கல்கள் தோன்றுகின்றன. அது தவிர மீளப் பெறுவதற்கான எவ்வித மாற்று விதிகளும் இல்லை. நடைமுறையிலுள்ள சட்டத்தில் காணப்படும் குறைபாடு என்னவென்றால், இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உரிய நபர் இருக்கும் சந்தர்ப்பத்தில் அவரது சொத்துக்களில் அல்லது நிதியத்திலிருந்து மீளப் பெறக்கூடிய வகையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் எதுவுமில்லை. சட்டத்தின் மூலம் கைப்பற்றக் கூடிய சொத்துக்கள்/வங்கிக் கணக்குகள் அந்த ஆணுக்கு இருக்கும் நிலையிலும் கூடக் கைவிடப்பட்ட மனைவியும் பிள்ளைகளும் கஷ்டப்படவேண்டிய நிலை இன்று பல வழக்குகளில் காணப்படுகின்றது. வலியுறுத்தற் கட்டளைகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளில் நெகிழ்வுத் தன்மையை ஏற்படுத்தக் கூடிய வகையில் தற்போதைய சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படுவது சிறந்ததாகும்.

### மேன்முறையீடுகள்

சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் விதிகளுக்கமைவாக அல்லது பிரிவு 47இன் கீழான விசாரணைகளின் பின்னர் காதிநீதவானினால் வழங்கப்படும் இறுதிக்கட்டளையினால் பாதிப்படைகின்ற திறத்தவர்கள், காதிகள் சபைக்கு மேன்முறையீடு செய்கின்றனர்.[205] பாதிப்படையும் திறத்தவர் எனும்போது, உண்மையிலேயே தீர்ப்பினால் பாதிப்படைபவரே காதிகள் சபைக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையைப் பெற்றவர்கள். காதிநீதவானின்

205. அடிக்குறிப்பு 195 ல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 60(1).

கட்டளையினால் பாதிப்படைந்தவரின் மகனுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையில்லை.[206] காதிகள் சபை என்பது, நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட 5 முஸ்லிம் ஆண்களைக் கொண்டு அமைக்கப்பட்ட ஒரு சபையாகும்.[207] பிரிவு 28, மூன்றாம் அட்டவணை என்பனவற்றின் கீழ், பஸஹ் விவாகரத்து வழங்கப்பட்டதன் காரணமாக ஒரு கணவனுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அக்கணவன் அக்கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

ஆனால், கணவன் தலாக் விவாகரத்துப் பெற்றதற்கெதிராக அதனால் பாதிக்கப்பட்ட மனைவி மேன்முறையீடு செய்ய முடியாது. இதனை கலாநிதி. ஜஸ்டின் பின்வருமாறு கூறுகின்றார்:

"அட்டவணை விதிகள் 2, 6, 7 என்பனவற்றின் பிரகாரம் ஒரு கணவன் 3 தலாக்கையும் கூறியதற்கெதிராக, மேன்முறையீடு செய்யும் உரிமை ஒரு மனைவிக்கு இல்லை என்பது பிரிவுகள் 27, 30 என்பனவற்றுடன் இரண்டாம் அட்டவணையின் விதிகளையும் இணைத்துப் பார்க்கும்போது தெளிவாகின்றது. ஆனால் மேன்முறையீடு பற்றி விளக்கமளிக்கும் ஐந்தாம் அட்டவணையின் பிரகாரம் இச்சட்டத்தின் எல்லாப்பிரிவுகளின் கீழும் மேன்முறையீடு செய்யும் உரிமை உண்டு என்பது தெளிவாகின்றது. மேன்முறையீட்டுக்கான கால எல்லை ஐந்தாம் அட்டவணைவிதி 1(a), (b) என்பனவற்றில் விளக்கப்பட்டுள்ளது. பிரிவு 47 (2)இன் கீழ் நியாயமற்ற விதத்தில் திருமணத்திற்கான சம்மதத்தை வழங்காத வலியிற்கெதிராக ஒரு பெண் விண்ணப்பிக்கும் போது காதிநீதவானினால் வழங்கப்படும் கட்டளை மற்றும் பிரிவு 47 (3)இன் கீழ், வலியில்லாத சந்தர்ப்பத்தில் ஒரு பெண்ணின் திருமணத்திற்கு அங்கீகாரம் வழங்கும் காதிநீதவானின் கட்டளை என்பனவற்றிற்காக மேன்முறையீட்டுக் கால எல்லை கட்டளை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களாகும் என்று விதி 1(a) கூறுகின்றது. இது தவிர்ந்த ஏனைய விடயங்களில் காதிநீதவானின் கட்டளைகளுக்கான மேன்முறையீட்டுக் கால எல்லை, கட்டளை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களாகும் என விதி 1 (b) கூறுகின்றது. மனைவியினால் கோரப்படும் விவாகரத்து முறையை விளக்கும் அட்டவணை 3இல், மேன்முறையீட்டுக் கால எல்லை தொடர்பில் விசேடமாகக் குறிப்பிடும் வகையில் விதி 15 அமைந்துள்ளது. ஆயினும், கணவனினால் கோரப்படும் விவாகரத்தை விளக்கும் இரண்டாம் அட்டவணையில் மேன்முறையீட்டுக் கால எல்லை தொடர்பில் விசேடமாகக் குறிப்பிடும் வகையில் எத்தகைய விதிகளும்

206. சாறா முகமத் இப்றாஹிம் எதிர் உம்மு றஹீமா (1941) 2 MMDR பக்கம் 124.
207. அடிக்குறிப்பு 195 ல் குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 15 (1).

இல்லை. மூன்றாவது தலாக் கூறப்பட்டதும் விவாகரத்துப் பதிவு செய்யப்படும். ஆகவே, ஒரு கணவன் மனைவியின் மீது தலாக் கூறியதால் அம்மனைவிக்குப் பாதிப்பு ஏற்பட்டிருந்தாலும் கூட அதற்கெதிராக மேன்முறையீடு செய்வதற்கான உரிமை அம்மனைவிக்கு இல்லை. மனைவியைத் தலாக் கூறும் கணவனின் செயற்பாடு தடுக்கப்பட முடியாதது என்பதே இதன் சாரம்சமாகும். அத்துடன், இரண்டாம் அட்டவணையின் விதி 2இன் பிரகாரம், தலாக்கிற்கான எக்காரணத்தையும் கணவன் பதிவு செய்ய வேண்டியதில்லை என்பதும் இங்கு குறிப்பிடவேண்டியதொரு விடயமாகும்."[208]

காதிகள் சபையின் கட்டளைக்கெதிராக, மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம். ஆனால் இதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டும்.[209] இத்தகைய மேன்முறையீட்டு முறைகளின் விதிகளை ஒழுங்கமைப்பதற்கான உயர்நீதிமன்றத்தின் அதிகாரம் தொடர்பிலும் சட்டத்தில் ஏற்பாடுகள் உள்ளன.[210]

**மீளாய்வு**

காதிநீதவானின் கட்டளையினால் பாதிக்கப்பட்ட மனைவி, மேன்முறையீட்டு உரிமைகளற்ற சந்தர்ப்பத்திலும், ஏதேனும் காரணத்தினால் மேன்முறையீடு செய்யப்பட்டிருக்காத சந்தர்ப்பத்திலும், காதிநீதவானின் கட்டளையை மீளாய்வு செய்யக் கோரலாம்.[211] ஆயினும் இவ்விண்ணப்பத்தில் வெற்றி பெறுவதற்கு, இம்மேலதிக அதிகாரம் செயற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை நியாயப்படுத்துவதற்கான தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களை நிரூபிக்க வேண்டும்.[212] றவூப் எதிர் றஹீம் என்ற வழக்கில், உண்மையிலேயே மேன்முறையீட்டு அதிகாரமற்ற முழுமையான கட்டளை வழங்கப்பட்டதற்கெதிராகச் சட்டத்தின் பிரிவு 60(1)இன் கீழ் காதிகள் சபைக்கு மீளாய்வுக்கான விண்ணப்பம் செய்யப்பட்டது. அதிதீவிரமான சட்ட முரண்பாடு இல்லாத காரணத்தினால், மீளாய்வு செய்வதற்கான தனது அதிகாரத்தை வழங்குவதற்கான அனுமதியை காதிகள் சபை நிராகரித்தது.[213] அமீனா சூபி

208. M.S. Jaldeen, The Muslim Law of Marriage, Divorce and Maintenance in Sri Lanka, (1990) at page 129-130.

209. அடிக்குறிப்பு 195இல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 62(1).

210. மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 62(2).

211. இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 1988ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்புரை 138 (1).

212. மரியம் பீபி எதிர் செய்யத் முகம்மத் 69 Ceylon Law Weekly 34: அப்துல் காதர் எதிர் சித்திநிஸா 52 NLR 536.

213. றஊப் எதிர் றஹீம் 5 MMDR 69, 70.

எதிர் சூபி[214] எனும் வழக்கில், காதிகள் சபைக்கு பிரிவு 44 (1)இனால் வழங்கப்பட்ட மீளாய்வு செய்வதற்கான அதிகாரம் பிரிவு 34(2)இனால் எவ்விதத்திலும் தடை செய்யப்படவில்லை என காதிகள் சபை தீர்ப்பளித்தது. பீபீ எதிர் முஹம்மது எனும் வழக்கில் பிரதம நீதியரசர் சன்சோனியினால் வழங்கப்பட்ட தீர்ப்பைக் காதிகள் சபை மேற்கோள்காட்டியது. "மீளாய்வு செய்யும் அதிகாரம் என்பது, சாதாரண தரத்திற்கும் அப்பாற்பட்ட ஒரு அதிகாரமாகும். இது சுயாதீனமானது. நீதிமன்றத்தின் மேன்முறையீட்டு நியாயாதிக்கத்திலிருந்து வேறுபட்டது. இதன் நோக்கம் என்னவெனில், நீதித்துறையை நிர்வகிப்பதும் பிழைகளைத் திருத்துவதுமாகும். அத்துடன், நீதித்துறையின் தவறான வழி நடத்தலைத் தவிர்ப்பதும் இதன் நோக்கமாகும்."[215]

214. அமீனா சூபி எதிர் சூபி 5 MMDR 73.

215. பீபி எதிர் முஹம்மத் 68 NLR 36, 38 பிரதம நீதியரசர் சன்சோனி.

அத்தியாயம் 07

# பெண்களும், காதிநீதிமன்ற முறைமைகளும்

## துன்பத்தில் உள்ள பெண்கள்

காதிநீதிமன்றத்தின் மூலம் நிவாரணம் பெற நாடும் பெண்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். முகவுரையில் கூறப்பட்ட பாத்திமா எனும் பெண் இதற்கு ஒரு உதாரணமாகும் இங்கு அடிப்படைப் பிரச்சினை எதுவென்றால், அப்பெண்ணை வழிநடத்தக் கூடிய வழிகாட்டல்கள் அப்பெண்ணிற்குக் கிடைக்காமையாகும். முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம், சட்டத்தரணிகள் காதி நீதிமன்றத்தில் தோன்றுவதற்குத் தடைவிதித்துள்ளதன் காரணமாக, அப்பெண்கள் காதிநீதிமன்றத்தில் கடமை புரியும் இலிகிதர்களின் உதவியையே நாடவேண்டியுள்ளது. சில காதிநீதவான்கள், இப்பிரச்சினைகளை ஓரளவாவது குறைக்குமுகமாக நிவாரணம் பெற வரும் திறத்தவர்கள் உபயோகிக்கக் கூடிய வகையில் மாதிரி விண்ணப்பப்படிவங்களைக் காதி நீதிமன்றத்தில் தயாரித்து வைத்துள்ளனர். இருந்தாலும் கூட, சில தவறான தரவுகளைக் கொண்ட விண்ணப்பங்கள் வழங்கப்படுவதன் மூலமும் அப்பெண்கள் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். காதிநீதிமன்றங்களுக்குத் தேவையான விண்ணப்பங்களின் மாதிரிகளை முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் அட்டவணைகளாக இணைப்பதன் மூலம் இப்பிரச்சினைகளைத் தீர்க்கலாம்.

அத்துடன், காதிநீதிமன்றங்களில் சட்டத்தரணிகள் தோன்றுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ள விடயம் பற்றியும் நாம் சற்று சிந்திக்க வேண்டும். 1929ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துப் பதிவுகள் சட்டத்தில்[216] காதிநீதவான்களின் முன்னால் சட்டத்தரணிகளின் பிரதிநிதித்துவம் பற்றிய ஏற்பாடுகள் எதுவுமில்லாத காரணத்தினால், காதிநீதவான்களின் அனுமதியுடன் சில வேளைகளில் சட்டத்தரணிகள் தோன்றும் வழக்கம் இருந்தது. ஆனால் பதிவாளர் நாயகத்தைத் தலைவராகக் கொண்டு 1939ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட குழுவானது இது தொடர்பில் பின்வருமாறு அறிக்கை சமர்ப்பித்திருந்தது:

சட்டத்தரணிகளை நியமிப்பது செலவு மிக்கது, வழக்கைக் காலதாமதமாக்கக் கூடியது, கணவன்-மனைவிக்கிடையிலான சமரசத்திற்கான சாத்தியங்களைத் தடுக்கக் கூடியது. ஒரு திறத்தவர் மாத்திரம் சட்டத்தரணியை நியமிக்கும்

216. 1934ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டு 1937/01/01இல் அமுலுக்கு வந்த 1929ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, முஸ்லிம் விவாக விவாகரத்துப் பதிவுகள் சட்டம்.

போது அத்திறந்தவரின் சார்பு அதிகளவு வலுவாக்கப்படக் கூடியது. இக்காரணங்களினால் 1951ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 74 ஆனது, காதிநீதிமன்றங்களில் சட்டத்தரணிகளின் பிரதிநிதித்துவத்தைத் தடைசெய்தது.[217] அத்துடன் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியினால் வழங்கப்பட்ட வினாக்கொத்திற்கு விடையளித்த காதிநீதவான்களில் 83.3% ஆனவர்கள் காதிநீதிமன்றங்களுக்குச் சட்டத்தரணிகள் தோன்றுவதற்கு அனுமதி வழங்கப்படக் கூடாது என்றே விடையளித்தனர்.

சட்டத்தின் மூலம் பிணக்குகளைத் தீர்ப்பதில் பிரச்சினைகள் இருப்பது உண்மையாக இருந்த போதிலும் கூட, மனைவியினால் காதிநீதிமன்றத்தில் கோரப்படும் நிவாரணங்களுக்கு செல்வாக்கு மிக்க ஒரு கணவன், தடைவிதித்துக் கொண்டிருக்கும் பட்சத்தில், அப்பெண்ணிற்கு ஒரு சட்டத்தரணியால் உதவி செய்ய முடியும் என்பதும் மறுக்க முடியாத ஒரு விடயமாகும். தாஹிர் எதிர் கனி நூர்[218] எனும் வழக்கில், காதிகள் சபை பின்வருமாறு கூறியுள்ளது: சட்டத்தரணிகளின் பிரதிநிதித்துவமின்மையானது, வழக்குகள் முறையாகத் தீர்க்கப்படாமை, வழக்கின் முக்கிய விடயங்கள் ஒழுங்காகக் கோவைப்படுத்தப்படாமை, ஏற்புடைத்தாகாத சம்பந்தமில்லாத சாட்சியங்கள் ஏற்கப்படுதல், உரிய நடைமுறை சரியாகப் பின்பற்றப்படாமை, சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுதல் போன்ற விளைவுகளை ஏற்படுத்துகின்றது. நீதிபரிபாலனமுறைச் சட்டத்தின் பிரிவு 41(2)ஆனது,[219] ஒரு நபரின் முன்னால் அல்லது ஒரு நீதிமன்றத்தின் முன்னால் வழக்குகள் நடைபெறும்போது, சட்டத்தரணிகளை நியமிப்பதற்கான ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட உரிமைகள் பற்றிக் கூறுகின்றது. ஆகவே, கலாநிதி. சஹாப்தீன் குழுவானது, சட்டத்தரணிகள் தோன்றுவதைத் தடைசெய்யும் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று தனது அறிக்கையில் கூறியுள்ளது.[220] சட்டத்தரணிகளின் பிரதிநிதித்துவம் சமரசத்திற்கான சாத்தியங்களை இல்லாமற் செய்து விடும் என்ற கருத்துக்கு அரசாங்கம் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. இரண்டாம் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள 'தலாக்' நடைமுறையில், வழக்கு ஆரம்பித்து ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர் சட்டத்தரணிகள் தோன்றுவதை

217. 1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (இச்சட்டமானது 1951ஆம் ஆண்டின் 31ஆம் இலக்கச் சட்டம், 1955ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டம், 1965ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கச் சட்டம், 1969ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டம், 1975ஆம் ஆண்டின் 41ஆம் இலக்கச் சட்டம் என்பனவற்றினால் திருத்தப்பட்டது).

218. (1954) 4 MMDR 51, 53 (ஏ.ஆர்.எம் அபூபக்கர் அவர்கள் மறுதலிப்பு)

219. 1979ஆம் ஆண்டில் 37ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கச் சட்டம்.

220. முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் வக்பு சட்டம் ஆகியவை தொடர்பிலான சிபார்சுகளை முன்வைப்பதற்காக, முஸ்லிம் சமய, கலாச்சார அலுவல்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பந்தி 2:31 பக்கம் 28.

அனுமதிக்கலாம். அத்துடன், தனக்கு முன்னால் நிலைநிறுத்தப்படும் சாட்சியங்களைக் கொண்டே காதிநீதவானினால் தீர்ப்பு வழங்கப்பட வேண்டிய மூன்றாம், நான்காம், அட்டவணை நடைமுறைகளில் சட்டத்தரணிகளின் பிரதிநிதித்துவத்தைத் தடைசெய்வதற்கு முற்றிலும் நியாயமான காரணங்கள் எதுவுமில்லை.

**காதி நீதவான்களிடமிருந்து உதவிகள்**

பெரும்பான்மையான காதிநீதவான்கள் வழக்கு விசாரணை நடைமுறைகளுக்கான நீதிமன்றமாகத் தங்களது வசிப்பிடங்களையே பயன்படுத்துகின்றனர். நீதிமன்றக் கட்டிடங்கள் இவர்களது பாவனைக்காக வழங்கப்படுவதில்லை. இது பொதுவாக, வசதியீனங்களையும் தர்மசங்கடங்களையும் ஏற்படுத்துகின்றது. இத்தகைய அசௌகர்யங்களினால், தங்களது வழக்குப் பதிவுகளைக் கூடச் சரியாகப் பராமரித்துக் கொள்வதற்கு முடியாத நிலையில் காதிநீதவான்கள் உள்ளனர். சில வேளைகளில் காதி நீதவான்கள் சில வழக்குத் திறத்தவர்களினால் அல்லது அவர்களது உறவினர்களினால் பலவந்தங்களுக்கும் அச்சுறுத்தலுக்கும் கூட உள்ளாகின்றனர். இந்நிலையில் காதிநீதவான்களின் தனித்துவம் இவ்விடத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது.

தங்களிடம் நிவாரணங் கோரி வரும் திறத்தவர்களுக்கு முடிந்தளவில் நன்மை செய்வதையே காதிநீதவான்கள் அதிகம் விரும்புகின்றார்கள். சில காதிநீதவான்களாவது சட்டவிளக்கம், நடைமுறைச் சட்டங்களைப் பரந்தளவில் பொருள் கோடல் செய்பவர்களாக உள்ளனர் என்பது முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியினால் நடத்தப்பட்ட கூட்டத்திலிருந்து தெளிவாகின்றது.

இலங்கையில் தலாக் நடைமுறை மற்றும் அதனைப் பதிவு செய்தல் என்பனவற்றில் காணப்படும் இலகுத்தன்மையும், மனைவிக்கான மத்தா தொடர்பில்[221] எந்த ஏற்பாடுகளும் இல்லாமையும் பொதுவாக அதிலும் குறிப்பாகக் கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் பஸஹ் விண்ணப்பங்களை விடத் தலாக் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளன. நியாயமான தொகையில் ஒரு நட்டஈட்டை மனைவிக்கு வழங்காத வரையில் தலாக் பதிவு செய்யப்படமாட்டாது என்ற நடைமுறையைக் காதிநீதவான்கள் பின்பற்றாவிடில் இந்நிலை இன்னும் பரந்தளவில் செல்வதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல்

221. எந்த விதமான நியாயமான காரணங்களுமின்றி ஒரு மனைவி, கணவனினால் விவாகரத்துச் செய்யப்படும் போது, அக்கணவனினால் மனைவிக்கு வழங்கப்படும் நட்டஈடு. மனைவியின் அந்தஸ்துக்கும் கணவனின் வருமானத்திற்குமேற்ற வகையில், மனைவியின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்து வாழ்வதற்கேற்ற அளவில் இத்தொகை அமைய வேண்டும்.

முன்னணியினால் நடத்தப்பட்ட கூட்டத்தில் நீர்கொழும்பிற்குப் பொறுப்பான காதி நீதவான் இத்தகைய செயற்பாடு, முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்திற்கு முரணானதாக இருந்தாலும் கூட ஷரீஆவிற்கு முரணானதல்ல; ஏனெனில், நியாயமானதொரு தொகையை மனைவிக்கு நட்டஈட்டாக வழங்க வேண்டும் என்பதை ஷரிஆ வலியுறுத்துகின்றது[222] என்று கூறினார். கலாநிதி. ஷஹாப்தீன் குழுவானது மத்தா வழங்கக்கூடிய வகையில் சட்டத்தில் சீர்த்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் எனப் பிரகடனம் செய்துள்ளது இது நிச்சயமாகத் தலாக்கின் எண்ணிக்கையைக் குறைக்கும்.[223]

**பெண் காதி நீதவான்கள்**

காதிநீதவான்களாகவோ, விசேட காதி நீதவான்களாகவோ முஸ்லிம் ஆண்களே நியமிக்கப்பட வேண்டும் என்பதை 1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் வலியுறுத்துகின்றது.[224] அதே போல் இச்சட்டத்தின் கீழ் காதிநீதவான்களினால் பிறப்பிக்கப்படும் கட்டளைகளின் மேன்முறையீட்டு விசாரணைக்காக நியமிக்கப்படும் காதிகள் சபை உறுப்பினர்களும் இலங்கையை வசிப்பிடமாகக் கொண்ட நன்னடத்தையுடைய பதவிக்குப் பொருத்தமான ஐந்து ஆண்களாகவே இருக்க வேண்டும் எனச் சட்டம் கூறுகின்றது.[225]

மிகப் பரந்தளவிலான சட்டச்சீர்த்திருத்தங்களை முன்மொழிந்த, H.M.Z. பாறுக் தலைமையிலான முஸ்லிம் சட்ட ஆராய்ச்சிக் குழுவும் கூடப் பெண்களைக் காதிநீதவான்களாக, விசேட காதிநீதவான்களாக, காதிகள் சபை உறுப்பினர்களாக நியமிப்பதற்குத் தடையாக உள்ள தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தை மாற்றுவதற்குச் சிந்திக்கவில்லை என்பது ஆச்சரியமான ஒரு விடயமாகும்.[226] பெண்கள், நீதித்துறை அலுவலராகக் கடமை புரிவதற்கு ஷரிஆவில் தடையில்லை என்ற பத்வாக் கிடைக்காததனால், கலாநிதி. சஹாப்தீன் குழுவும் கூட இது தொடர்பில் சீர்திருத்தங்களை உருவாக்குவதில் பின்வாங்கியது.[227]

222. புனித அல்குர் ஆன் (அப்துல்லா யூசுப் அலியின் பதிப்பு) சூறா தலாக்: LX: 2.

223. முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் மற்றும் வக்பு சட்டம் ஆகியவை தொடர்பிலான சிபார்சுகளை முன்வைப்பதற்காக, முஸ்லிம் சமய கலாச்சார அலுவல்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பந்திகள் 2: 29, 30 (பக்கங்கள் 26-28).

224. அடிக்குறிப்பு 217இல் குறிப்பிடப்பட்டுள்ள முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் பிரிவுகள் 12(1), 14(1).

225. 1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கத்தினால் திருத்தப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 15(1).

226. முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் திருத்தங்களுக்கான முஸ்லிம் சட்ட ஆராய்ச்சிக் குழுவின் அறிக்கை (1978), 4 Colombo Law Review, பக்கம் 57.

227. முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் மற்றும் வக்பு சட்டம் ஆகியவற்றின் சிபார்சுகளை முன்வைப்பதற்காக, முஸ்லிம் சமய கலாச்சார அலுவல்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பந்திகள் 2:15-2:18 (பக்கங்கள் 19-21).

இது தொடர்பில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி மிகவும் விரிவான, எழுத்துமூல, வாய்மொழி மூலக் கருத்துக்களை இச்சபையில் முன்வைத்தது. அதற்குச் சார்பாக நீதிபதிகளாக, நீதவான்களாக, காதிநீதவான்களாகப் பெண்கள் பதவி வகிப்பதற்குச் ஷரிஆவில் எந்தத் தடையுமில்லை என்ற பிரதம நீதியரசர் அப்தாப் ஹுசைன், நீதியரசர்களான ஸஹறுல் ஹக், மாலிக் குல்ஹாம் அலி ஆகிய மூன்று நீதியரசர்களினால் பாகிஸ்தான் ஷரிஆ நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பையும் முன்வைத்தது.[228] இச்சபையானது இதனை மிகக் கவனமாகப் படித்து ஆராய்ந்த போதிலும் கூட, இலங்கையில் பெரும்பான்மையான முஸ்லிம்கள் ஷாபி மத்ஹபைப் பின்பற்றுபவர்களாக இருப்பதனால் ஷாபி மத்ஹபின் பிரகாரம் ஒரு காதிநீதவான் அல்லது நீதவான் 'முஸ்லிமாக, வயது வந்தவராக, நியாயமான, சுதந்திரமான, கீர்த்தியுடைய, கேள்வி, பார்வை, பேச்சில் சிறந்த, கற்ற, சட்டம் தொடர்பில் அறிவுடைய ஆணாக இருக்க வேண்டும்'[229] என்பதற்குத் தாம் கட்டுப்பட்டதாகக் கருதியது. அல்குர்ஆனிலோ அல்லது நபி (ஸல்) அவர்களின் சுன்னாவிலோ இது தொடர்பில் எத்தகைய தடைகளும் இல்லை என்பதையும், எனினும் சட்டவியலாளர்களிடையே இவ்விடயம் சர்ச்சை பொருந்தியதொன்றாகவே காணப்படுகின்றது[230] என்பதையும் சபை கவனத்திற் கொண்டது. ஷாபி மத்ஹபுக் கொள்கை, ஒரு காதிநீதவான் 'ஆணாகவே இருக்க வேண்டும் என்ற தேவைப்பாட்டைக் கொண்டிருந்த போதிலும் கூட, ஷாபி மத்ஹபை முழுமையாகப் பின்பற்றுவதில் ஏற்படக் கூடிய அபாயங்களும் இத்தகைய பிரச்சினைகளின் தீர்வுகள் தேர்வுமான ரீதியில் ஆராயப்பட வேண்டிய தேவையும் இந்நூலின் பாகம் IIIஇல் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. ஆகவே, காதிநீதவான்களாகவோ அல்லது காதிகள் சபை உறுப்பினர்களாகவோ பெண்கள் நியமிக்கப்படுவது தொடர்பிலான சட்டத்தடை நீக்கப்பட வேண்டும்.

காதிநீதவான்களாக ஆண்களே நியமிக்கப்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்ட வினாக்கொத்தில் பெண்காதிநீதவான்களின் நியமனங்கள் பற்றிக் கோரப்பட்ட வினாவுக்கு 50%ஆன காதிநீதவான்கள் ஷரிஆவில் தடைசெய்யப்பட்ட விடயமாகையினால், பெண்களைக் காதிநீதவான்களாக நியமிக்க முடியாது என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். 8.4%ஆனவர்கள் காதிநீதவான்களின் தரம், மாஜிஸ்திரேட் நீதவானின் தரமளவிற்கு உயர்த்தப்படும் வரையில் பெண்களைக் காதிநீதவான்களாக நியமிக்க முடியாது என்றும், 25%ஆனவர்கள் பெண்கள் காதிநீதவான்களாக நியமிக்கப்படுவதில் எவ்வித தடையும் இல்லையென்றும் தெரிவித்திருந்தனர்.

---

228. ஷரிஆ மனு இலக்கம் K 4 (1982).

229. மின்ஹாஜ்-உத்-தாலிபின் (1992) 500.

230. முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் மற்றும் வக்பு சட்டம் ஆகியவற்றின் சீர்திருத்தங்களை முன்வைப்பதற்காக, முஸ்லிம் சமய கலாச்சார அலுவல்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பந்திகள் 2:15-2:18 (பக்கங்கள் 19-21).

16.6% ஆனவர்கள் இது பற்றி எவ்வித கருத்தையும் தெரிவிக்க விரும்பவில்லை. இதில் ஒரு காதிநீதவான் பின்வருமாறு அழுத்திக் கூறியுள்ளார்: "தற்காலத்தில் பெண்கள் மாஜிஸ்திரேட் நீதவான்களாக, மாவட்ட நீதிபதிகளாக, ஏன் மேல் நீதிமன்ற நீதிபதிகளாகவும் கடமை புரிகின்றனர். அத்துடன் பெண்கள், விடயங்களை அனுதாபத்துடன் செவிமடுக்கக் கூடியவர்கள்" என்று கூறியிருந்தார். அதுமாத்திரமன்றி, இன்று பெண்கள் மேன்முறையீட்டு, உயர்நீதிமன்ற நீதியரசர்களாகக் கூடக் கடமையாற்றும் பட்சத்தில், ஆணாதிக்கம் தொடர்பான தாழ்வுச் சிக்கல்கள் ஏற்படுவதில் எந்தவிதமான அர்த்தமுமில்லை எனவும் அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டமானது, பெண்களைத் தற்காலிகக் காதிநீதவான்களாக நியமிப்பதில் எவ்விதத் தடையையும் விதிக்கவில்லை என்பது இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடக்கூடிய விடயமாகும்.[231] ஆனால் நிரந்தரக் காதிநீதவான்கள் விடயத்தில் இந்நிலை வித்தியாசமாக[232] உள்ளது. இவ்விடயம் தொடர்பில் ஹனபி, மாலிக்கி சட்டவியலாளர்களின் கோணத்தில் நின்று அவதானிக்கும் பொழுது, பிரிவு 14(1)இல் அதாவது, விசேட காதிநீதவான்களின் நியமனத்தில் "ஆண்" என்ற சொல்லை நிலைநிறுத்தியிருப்பதில் எவ்வித நியாயமுமில்லை.[233] ஹனபி, மாலிக்கி திறத்தவர்கள் தொடர்பிலான விசேட வழக்குகளின் போது, விசேட காதிநீதவான்கள் நியமிக்கப்பட வேண்டிய அவசியமேற்படும் பட்சத்தில் அவர்கள் தொடர்பிலான பிரச்சினைகளை விசாரிப்பதற்குப் பெண் காதிநீதவான்களை நியமிப்பது ஷரிஆவுக்கு முரணானதொரு விடயமல்ல.

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டமானது, பதிவாளர் நாயகத்தை உத்தியோகபூர்வமற்ற தலைவராகவும் மேலும் 4-9 பேரை அங்கத்தவர்களாகவும் கொண்டு அமைக்கப்படும் முஸ்லிம் விவாக, விவாகரத்து ஆலோசனை சபை பற்றிக் கூறுகின்றது.[234] இச்சபையில் பெண்களை அங்கத்தவர்களாக நியமிப்பதில் எந்தத் தடையுமில்லை. ஆலோசனை சபையின் தரத்திற்குப் பெண்கள் நியமிக்கப்படுவதற்கான அனுமதியை இப்பிரிவு பிரதிபலித்துக் காட்டுகின்றது. நன்னடத்தையும் தகுதியும் பொருத்தமும் உள்ள ஆகக் குறைந்தது ஒரு பெண்ணாவது காதிகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் அளவிற்கு பிரிவு 15(1)இல் திருத்தம் கொண்டு வரப்படலாமென்பதை நியாயப்படுத்தும் வகையில் இக்கொள்கை அமைந்துள்ளது. இத்தகைய திருத்தங்கள் சட்டத்தில் கொண்டுவரப்படும் பட்சத்தில் பெண்களின் நோக்கில் பாரிய வரவேற்பைப் பெறுவதுடன், குடும்ப வாழ்க்கைக்குப் பரந்த நன்மை

---

231. அடிக்குறிப்பு 217இல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 13(1).
232. மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 12(1).
233. ஷரிஆ மனு இலக்கம் K 4 (1982).
234. அடிக்குறிப்பு 217இல் குறிப்பிடப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 4(2).

தரக்கூடியதாகவும் திருமணத்தில் ஏற்படும் பாரிய பிணக்குகளைத் தடுக்கக் கூடிய வகையிலும் அமையும். இதனால் காதிநீதிமன்ற முறைமையின் ஏற்புடைமையும், நம்பகத்தன்மையும் நிச்சயமாக அதிகரிக்கும்.

அத்தியாயம் 08

# முடிவுரை

இலங்கையில் நடைமுறையிலுள்ள முஸ்லிம் சட்டம் சிறந்ததும் நீதியானதும் இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு ஏற்றவகையிலும் அமைந்துள்ளது எனவும், அதனால் இச்சட்டத்தில் திருத்துவதற்கும் தெளிவாக்குவதற்கும் கோவைப்படுத்துவதற்குமான தேவை மிகச் சிறியளவிலேயே உள்ளது என்றதொரு மனோபாவம் காணப்படுவது துரதிட்டமே. கலாநிதி. சஹாப்தீன் குழுவினால், முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் தொடர்பில் அமைக்கப்பட்ட அறிக்கையிலும் இப்போக்குப் பிரதிபலிக்கின்றது. இச்சபையின் முடிவானது பின்வரும் வகையில் அமைந்துள்ளது:

> "எம்மால் அவதானிக்கப்பட்ட நோக்கம் எதுவெனில் தற்போதைய சட்டம் மிகச்சிறியளவிலான திருத்தங்களைச் செய்ய வேண்டிய நிலையிலேயே உள்ளது. இச்சட்டப் பிரிவுகள் புனித குர்ஆன், ஹதீஸ், இஜ்மா, கியாஸ் என்பவற்றின் தத்துவங்களைத் தெளிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளன. முஸ்லிம் திருமணச் சட்டத்தைப் பொறுத்தவகையில், இச்சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்துவதைவிட அதனை நிர்வகிக்கும் விதத்தில் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்படுவதே முஸ்லிம் சமூகத்தின் அத்தியாவசியத் தேவையாக உள்ளது."[235]

ஆயினும், இந்நூலின் IIIஆம் அத்தியாயத்தினை நோக்கும் போது, "திறத்தவர்கள் எந்தப் பிரிவினைச் சேரந்தவர்களோ அந்தப் பிரிவினை ஆளும் முஸ்லிம் சட்டத்தின் மூலமே அவர்கள் ஆளப்படுவார்கள்" என்ற வகையில் இலங்கையின் முஸ்லிம் சட்டம் அமைந்துள்ளது. சிக்கல்களுடன் இணைந்த பிரச்சினைகள் ஒரு புறமிருக்க, மத்ஹபுகள் எனப்படும் இஸ்லாமிய எண்ணக் கொள்கைகளின் நீதித்துறைச் சமத்துவத்தை அத்தகைய பிரிவுகளுடன் இணைத்து அவதானிக்கும் போது, அத்தகைய சமத்துவமும் கூட, இலங்கையில், முஸ்லிம் சட்டத்தின் அபிவிருத்திக்கு ஆக்கபூர்வமான உந்து சக்தியாக அமைந்துள்ள நீதிமன்ற, நியாயமன்ற நிர்வாகங்களில் விரும்பத்தகாத விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளன. எமது நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும் சில நீதித்துறைப் பிரகடனங்களின் கோணத்தில் நின்று ஆராயும் போது கூட 'பிரிவு' என்ற பதத்துக்குச் சட்ட விளக்கம் கொடுக்கப்படும்போது, அவை 'ஙபி, ஹனபி என்ற மத்ஹபுகளைக் காட்டும் இஸ்லாமியக் கொள்கைகளை

235. முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் வக்பு சட்டம் ஆகியவற்றின் சிபார்சுகளை முன்வைப்பதற்காக, முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பந்தி 2:31 பக்கம் 28.

மையமாக வைத்துப் பிரிப்பதை விட சுன்னிப் பிரிவு என்றும் ஷியாப் பிரிவு என்றும் விளக்கமளிக்கப்படுவது சிறந்ததாக அமையும். அந்த வகையில் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 25 (1)இல் காணப்படும் 'பிரிவு' என்ற பதத்திற்கு வழங்கப்பட்டுள்ள மத்ஹபுக் கொள்கைகளின் எண்ணக் கரு என்ற விடயத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டியது அவசியமாகும்.

முஸ்லிம் சட்டச் சீர்திருத்தம் எனும் போது, இலங்கையைப் பொறுத்தவரையில் முஸ்லிம் பெண்களுக்கு அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக அமைகின்றது. இந்நூலின் அத்தியாயம் IVஇல் காணப்படுவது போன்று, இச்சட்டத்தில் சீர்திருத்தம் கொண்டுவரப்படும் போது, பால்ய திருமணம், மணமகளின் சம்மதமும் கையெழுத்தும், திருமணம் பதிவு செய்யப்படும்போது தலாக் தப்வீத் தொடர்பிலான நிபந்தனைகள் சேர்க்கப்படல் என்பனவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பது அவசியமாகும். அத்துடன் பல்தாரமணம் தொடர்பில் ஷரிஆ நிபந்தனைகளையும், பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் காணப்படுவது போன்று பல்தாரமணத்தை நீதித்துறையினால் கட்டுப்படுத்தக் கூடிய வகையிலும் சீர்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். விவாகரத்துத் தொடர்பில் காணப்படும் சமத்துவமற்ற தன்மையும் திருத்தப்பட வேண்டும். இவ்விடயத்தில் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படும் அதே வேளை, இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணை தலாக் தொடர்பிலான முழுமையான நடைமுறையைக் குறிப்பிடுகின்றதா என்ற விடயமும் கவனிக்கப்பட வேண்டும். அத்துடன் பிரிந்துள்ள பெற்றோரின் பிள்ளைகளின் பாதுகாப்புரிமையும் அவர்களின் கவனிப்பும் தொடர்பிலான கட்டளைகளைப் பிறப்பிக்கக் கூடிய நியாயாதிக்கம் காதிநீதிமன்றங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

காதிநீதவானின் அந்தஸ்தை, மாஜிஸ்திரேட் நீதவானின் தரத்திற்கு உயர்த்துதல், காதிநீதவான்களின் நியமனத்தில் ஆகக்குறைந்த தகைமைகள், காதிநீதவான்களாக, காதிகள் சபை உறுப்பினர்களாகப் பெண்கள் நியமிக்கப்படுவதற்கு எதிராக அமைந்துள்ள தடைகளை அகற்றுதல், காதிநீதிமன்றங்களுக்குச் சட்டத்தரணிகள் தோன்றுவதை அனுமதித்தல், காதிநீதிமன்றத்திற்கேற்புடைத்தான மீளப் பெறுதல் நடவடிக்கைகளில் ஏற்படும் தேவையற்ற சிக்கல்களைத் தீர்த்தல் என்பன போன்ற விடயங்களின் திருத்தம் தொடர்பிலும் முக்கியத்துவம் செலுத்தப்படுதல் வேண்டும்.

காதிநீதிமன்றத்தின் நிர்வாகம் நீதியமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டால் மிகவும் சிறந்ததாக அமையும். முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியினால் நடாத்தப்பட்ட கூட்டத்திற்குச் சமுகம் தந்து வினாக்கொத்துக்கு விடையளித்த 91.6% ஆன காதிநீதவான்கள் இந்தக் கருத்தையே கொண்டிருந்தனர். அதேபோல் 83.3% ஆன காதிநீதவான்கள் தங்களது அந்தஸ்து மாஜிஸ்திரேட்

நீதவான் போன்ற நீதித்துறை அலுவலர்களின் தரத்திற்கு உயர்த்தப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். இது அந்தஸ்து தரம் பற்றிய விடயம் என்பதைவிட, வலியுறுத்தற் கட்டளைகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் காதிநீதவான்கள் எதிர்நோக்கும் நடைமுறைப் பிரச்சினைகளையும் தாமதங்களையும் நீக்குவதற்குரிய ஒரு உக்தி என்பதே பெரும்பான்மையானோரின் கருத்து. காதிநீதவான்களின் அந்தஸ்து, மாஜிஸ்திரேட் நீதவான்களின் தரத்திற்கு உயர்த்தப்படுமாயின், காதிநீதவான்களின் தகைமை, ஆற்றல், நடுநிலைத்தன்மை என்பன உயர்வதுடன், ஊழல் தொடர்பான பிரச்சினைகளும் தீர்க்கப்படும். ஆயினும், காதிநீதவான்களின் தரம் உயர்த்தப்படும் விடயத்தில் பல்வேறுவிதமான தெளிவுகளையும், விளக்கங்களையும் மனதில் இருத்திக் கொள்ளவேண்டும்.

வினாக்கொத்தில் ஒரு காதிநீதவான் பின்வருமாறு விடையளித்திருந்தார்.

> "குறிப்பாகத் தெளிவுபடுத்தப்படாத கல்வித்தகைமைகளுடன் இருக்கும் இச்சந்தர்ப்பத்தில், காதிநீதவானின் தரத்தை மாஜிஸ்திரேட் அளவுக்கு உயர்த்த வேண்டும் என எதிர்பார்ப்பது முறையற்றது. ஒரு காதி நீதவானுக்குரிய ஆகக்குறைந்த கல்வித்தகைமை என்ன என்பதை முதலில் நோக்க வேண்டும். காதிநீதிமன்றங்களில் நடைபெறும் வேலைகளை அடிப்படையாக வைத்து மாஜிஸ்திரேட் நீதவான் போல் முழுநேரக் காதிநீதவானை நியமிக்க முடியாது. அப்படி நியமிப்பதாயின் ஆகக் குறைந்தது தற்போது நடைமுறையிலுள்ள ஐந்து காதிநீதிமன்றங்களை ஒரு காதி நீதிமன்ற நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். இது இன்னும் மேலதிகச் சிக்கல்களுக்கு வழிவகுக்கும். அதாவது, திறத்தவர்கள் காதிநீதவான்களைச் சந்தித்துத் தங்கள் பிரச்சினைகளை முறையிடுவதில் சிக்கல்களை ஏற்படுத்தும். ஆகவே, தற்போதைய காதிநீதிமன்ற முறைமையானது, மனிதர்கள் அணுகும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது".

இருந்தாலும், அதிகாரப் பரவலாக்கல், திட்டமிடப்பட்ட யாப்புக்கள் என்பனவற்றிற்கிணங்க காதிநீதிமன்ற முறைமைகள் மீளமைப்புச் செய்யப்பட வேண்டும். காதிகள் சபையானது, பிரதேச ரீதியில் அல்லது மாகாண ரீதியில் நிறுவப்பட்டால் தற்போதைய நிலைமை போல கொழும்புக்கு வரவேண்டிய அவசியமின்றி காதிநீதவானின் கட்டளைகளால் பாதிக்கப்பட்ட திறத்தவர்கள் தங்களது பிரதேசங்களிலேயே மேன்முறையீடு செய்வதற்கோ அல்லது மீளாய்வு செய்வதற்கோ விண்ணப்பிப்பதற்கு இயலுமானதாயிருக்கும்.

இலங்கையின் முஸ்லிம் சட்டத்தின் சீர்திருத்தச் செயன்முறை தொடர்பிலான சட்டத்தொகுப்பொன்று உருவாக்கப்படுதல் அவசியமா அல்லது விரும்பத்தக்கதா என்ற விடயம், அடிப்படையிலேயே ஆராயவேண்டியதொன்றாக

உள்ளது. அத்தகைய தொகுப்பானது தேர்வு, தெளிவு என்பனவற்றிற்கு நன்மையாக அமைந்துள்ள போதிலும் கூட, இது தொடர்பிலான வேலைத்திட்டத்திற்குத் திறமையும், தியாகமும் வாய்ந்த ஒரு மசோதா வரைபு தேவை. இத்தொகுப்புக் கோவையானது, யாப்பின் பிரிவுகளின் சமத்துவம், சாத்தியங்கள் என்பனவற்றிற்கு முரண்படாத வகையில் அமைக்கப்பட வேண்டும் என்றதொரு அபாய நிலை காணப்படுகின்றது. அது மாத்திரமன்றி, தெளிவாக்குதலின் மூலம் நியாயப்படுத்த முடியாதளவில் அரசியலமைப்புப் பிரிவுகளுக்கு முரணான வகையில் அமைந்து விடக்கூடாது.

பொதுவாகப் பார்க்கும் போது, காதிநீதிமன்ற முறைமையானது இலங்கைப் பெண்களுக்குச் சாதகமான முறையிலேயே அமைந்துள்ளது. பல்தாரமணம் செய்த ஒரு கணவனின் ஏனைய மனைவியர் மீதான பராமரிப்புரிமை தொடர்பிலான வினாவைக் காதிநீதிமன்றமும் ஏனைய நீதிமன்றங்களும் எவ்வகையில் ஆராய்கின்றன என்பது இதற்குத் தெளிவான ஒரு விளக்கமாகும். பாத்தும்மா எதிர் சீனி முகம்மது[236] என்ற வழக்கில், கணவன் மற்றொரு மனைவியை வீட்டிற்கு அழைத்து வந்ததைக் காரணமாக வைத்து வீட்டைவிட்டுச் சென்ற மனைவி, சட்டத்திற்கு முரணான வகையில் கணவனுடன் உறவறுத்திருக்கிறார் என்ற அடிப்படையில், கணவனிடமிருந்து பெறும் பராமரிப்புரிமையை இழந்து விடுகின்றாள் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், நெய்னம் ஷாஹிப் செய்யத் எதிர் முத்து பாத்தும்மா மொன்னா அஹமது[237] என்ற வழக்கில் இதே கேள்வி எழுந்த போது, காதிகள் சபை மஹல்லி, பாகம் III, பக்கம் 300ஐ அடிப்படையாக வைத்துப் பின்வருமாறு தீர்ப்பளித்தது:

"ஒரு மனைவிக்கு வழங்கிய இருப்பிடத்தில் மற்றைய மனைவியரையும் தங்க வைக்கும் கணவனின் செயற்பாடு சட்டத்திற்கு முரணானதாகும். அத்துடன் இரு மனைவியரினதும் பரஸ்பர சம்மதமின்றி இருவரையும் ஒரே வீட்டில் தங்க வைப்பதும் சட்டத்திற்கு முரணானதாகும். ஆகவே, இம்மனைவி கணவனிடமிருந்து பராமரிப்புப் பெறும் உரிமையுடையவர்" எனக் காதிகள் சபை தீர்ப்பளித்தது.

ஆகவே, இலங்கையின் காதிநீதிமன்ற முறைமையானது சிறந்தது என்ற காரணத்தினால், சட்டம், நடைமுறைச்சட்டம் போன்றவற்றின் பல விடயங்களையும், தேவைக்கேற்ற வகையில் அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியங்கள் உண்டு.

236. 23 NLR 277.
237. (1937) MMDR II 27.

# பின்னுரை : பாத்திமாவின் விதி

அறிமுகவுரையில் நாம் அவதானித்த இளம் மனைவி பாத்திமாவுக்கு என்ன நடந்தது?

அவளது கதை சுவாரஸ்யமானதுதான். அவளின் விவாகரத்தின் பின்னரான இத்தாவை ஆரம்பித்தவுடனேயே, இக்ராமின் பிள்ளையை அவள் வயிற்றில் சுமப்பது தெளிவானது. காதிநீதிமன்றத்தில் அவளைப் பிரதிநிதித்துவப்படுத்திய அவளது தந்தை இவ்விடயத்தை இக்ராமிடம் சொல்லி மணவாழ்க்கை வீட்டிற்கு மீண்டும் வரும்படி இக்ராமை வற்புறுத்தினார். காதிநீதவானும் இத்திறத்தவர்களைச் சமரசம்படுத்துவதற்காகத் தன்னால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் எடுத்த போதிலும் அது தோல்வியிலேயே முடிந்தது. பாத்திமா ஆண் குழந்தையொன்றைப் பெற்றெடுத்தாள். காதிநீதவான் விவாகரத்தைப் பதிவு செய்தார். அத்துடன் இத்தாச் செலவுடன் மேலதிகமாக பிள்ளை றிழ்வானுக்குரிய தாபரிப்புச் செலவையும் மாதாந்தம் செலுத்தும்படி இக்ராமைப் பணித்தார். இக்ராமோ ஒரு சதமேனும் செலுத்தாமல் தான் ஏற்கனவே வேலை செய்து கொண்டிருந்த மத்திய கிழக்கு நாட்டிற்குச் சென்று விட்டார். பாத்திமாவுக்கு இப்பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எந்த வழியுமேயில்லாத பட்சத்தில் அவளது நாளாந்தத் தேவைகளுக்குக் கூடத் தனது பெற்றோரில் தங்கி வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானாள்.

இலங்கை வாழ்சமூகத்திலே அதிலும் விசேடமாக முஸ்லிம்களிடையே, ஒரு விவாகரத்துப் பெற்ற பெண் எவ்விதப் பெறுமதியுமற்ற ஒரு செல்லாக்காசாகவே கணிக்கப்படுகின்றாள் என்பதை அவள் மிக விரைவிலேயே உணர்ந்து கொண்டாள். விவாகரத்துப் பெற்ற ஆண்கள் அல்லது தாரமிழந்தவர்கள் சிலர், விவாகரத்துப் பெற்றதொரு பெண்ணைத் திருமணம் செய்ய முன்வரத்தான் செய்கின்றார்கள். ஆனால் தற்போது பாத்திமாவுக்கு ஒரு குழந்தையும் இருப்பதனால் இளம் தாயொன்றுக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டிய பிரச்சினையைப் பாத்திமாவின் பெற்றோர் எதிர்நோக்கினர். பாத்திமாவைப் போன்ற துரதிஷ்டமிழைக்கப்பட்ட பெண்ணைப் பராமரிப்பதற்கு ஏற்ற துணையொன்றை அவர்கள் தேடினர். இருந்தாலும் பாத்திமாவிற்கும் பொருத்தமான எந்தவொரு வரனும் வந்தமையாததால், பாத்திமா நாளுக்கு நாள் துன்பத்தையும், விரக்தியையும் அனுபவித்தாள்.

பாத்திமாவின் பழைய பள்ளித் தோழியான சாரா, கணணித் தொழிநுட்ப வியலாளரான தனது சகோதரன் இப்றாஹிமை பாத்திமாவிற்குத் திருமணம் செய்விக்கத் திட்டமிட்டுத் தான் பாத்திமாவின் ஒரு நல்ல தோழி என்பதை நிருபித்தாள். பாத்திமாவை அறிந்திருந்த இப்றாஹிம் இதற்கு ஆரம்பத்தில் சம்மதித்த போதிலும், ஒரு விவாகரத்துப் பெற்ற அதிலும் குழந்தைக்குத்

தாயான ஒரு பெண்ணை மணப்பதா எனக் கூறி இப்றாஹிமின் பல நண்பர்கள் அவனைப் பின்னடையச் செய்தனர். உனது மூளையைப் பாவித்து சிந்தித்துப்பார் என அவனது சில நண்பர்கள் கூறினர். இறுதியாக, இப்றாஹிமே இத்திருமணத்திற்குச் சம்மதமில்லை என்று கூறியதும் மீண்டும் பாத்திமா துன்பத்திற்கும் விரக்திக்குமுட்பட்டாள்.

தனது சொந்தச் செலவுக்காகவும், தனது மகன் றிழ்வானைப் பராமரிப்பதற்காகவும் அவளுக்குப் பணம் தேவைப்பட்டது. பாலர் பாடசாலை ஆசிரியையான பாத்திமா, இக்ராமின் வற்புறுத்தலுக்காகவே தொழிலை விட்டாள். பழைய பாடசாலைக்கோ அல்லது வேறேதாவது பாடசாலைக்கோ சென்று அவள் வேலை செய்து தனது வாழ்க்கைக்காகச் சம்பாதிக்கலாம். இது அவளுக்கு வரும் திருமண வாய்ப்புக்களை இழக்க வைத்துவிடும் என்று பயந்த அவளது பெற்றோர் இதற்கு இணங்கவில்லை.

மூன்று வருடங்களின் பின்னர், மீண்டும் பாத்திமா வேலைக்குப் போனால் என்ன எனச் சாரா கேட்டாள். திருமணத்திற்கு முன்னர் கற்பித்த அதே பாடசாலையில் பாலர் பாடசாலை ஆசிரியையாக மீண்டும் பாத்திமா இணைவதற்குச் சாரா உற்சாகமளித்தாள். தனது குழந்தையினால் ஆரம்பத்தில் பாத்திமா இதற்குத் தயங்கினாள். றிழ்வான் பாலர் பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்தவுடன் பாத்திமா தனது பெற்றோருடன் கலந்துரையாட, அவர்களும் அவள் வேலைக்குச் செல்வதற்கு இணங்கினர். அவளுக்கு ஒத்துழைப்பு வழங்க அவளது பெற்றோர் இருக்கின்ற போதிலும் அவர்களும் வயதானவர்களானபடியால் அவர்களால் எவ்வளவு காலத்திற்குப் பாத்திமாவுக்கும் அவளது பிள்ளைக்கும் ஒத்துழைப்பு வழங்க முடியும்? வேலைக்குச் செல்ல ஆரம்பித்ததும் தனது துன்பங்களை அவள் சிறிது சிறிதாக மறக்க ஆரம்பித்தாள். தனது வாழ்க்கையையும், எதிர்காலத்தையும் தனது பிள்ளை றிழ்வானுக்காகவும் தனது தொழிலுக்காகவும் அர்ப்பணித்தாள். பிள்ளையின் பாதுகாப்புத் தொடர்பில் காதிநீதவானுக்குத் தீர்மானமெடுக்கும் அதிகாரமில்லையாததால், றிழ்வானின் பாதுகாப்புரிமையை இக்ராம் கோரலாம் என அவள் சிந்தித்தாள். காதிநீதவானின் தீர்ப்பின்படி இக்ராம் ஒரு சதமேனும் 3 வருடங்களுக்கு மேலாகத் தனது மகனின் பராமரிப்புச் செலவாகச் செலுத்தாது விவாகரத்து நடைபெற்றதிலிருந்து இன்றுவரை மகனைப் பற்றி எவ்வித அக்கறையும் கொள்ளாததிலிருந்து தனது பிள்ளையைக் கொடுக்குமாறு பாத்திமா வற்புறுத்தப்படமாட்டாள் என்பதில் அவள் திருப்தியடைந்தாள்.

மீண்டும் மகிழ்ச்சியைச் சந்திப்பதற்கு முன்னர், அழிவு எனும் சுழல் வட்டமொன்றினுள் பாத்திமா சிக்குண்டாள். மேலான இஸ்லாமியத் தன்மைகளும், அதிக உணர்வாற்றலும், திறமையும் கொண்ட காதிநீதிமன்ற முறைமையினால் இயலுமான உச்சத் தீர்வுகளை, பாத்திமா போன்று துன்பத்திலுள்ள பெண்களுக்குத் தேவைகள் ஏற்படும் போது வழங்கப்படவேண்டும்.

## Selected Bibliography


**Ameen, A.H.G.** *The Quazi Court Procedure and Practice* (ALAMEEN: 1999)

**Bawa, Ahamadu.** *Marriage Customs of the Moors of Ceylon,* Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society -Vol. X No 36 pages 219-233.

**Farouque, H.M.Z.** *Muslim Law in Ceylon - A Historical Outline,* Muslim Marriage and Divorce Law Reports - Vol., V page 1.

**Galwash, Ahmed.** *Limitations of Divorce,* Muslim Marriage and Divorce Law Reports - Vol. 1 page 115.

*Kholaa Divorce,* Muslim Marriage and Divorce Law Reports - Vol. I page 117.

**Haniffa, M.I.M.** *Competency to Contract Marriage under Muslim Law,* (1950) Ceylon Law Students' Magazine Vol. XII, 37- 38.

*Divorce under Muslim Law,* (1937-39) Vol. II Ceylon Law Journal xxxi-xxxii (1937-38) xxi-xxii, xxxiii-xxxv (1938-39).

*Marriage under Muslim Law* (1936-38) Vol. I Ceylon Law Journal 13-14, 19, 32-33, 46-48 (1936) viii-x, xxiii-xxiv (1937-38).

*Muslim Marriage and Divorce Registration Ordinance,* (1935-36) Vol. XV Ceylon Law Recorder xix-xx (1935) xxxviii-xl, lvii-lix (1936).

**Jaldeen, M.S.** *The Muslim Law of Marriage, Divorce and Maintenance in Sri Lanka* **(FAMYS: 1990).**

*The Muslim Law of Succession, Inheritance & Wakf in Sri Lanka* (FAMYS:1993).

**Kodikara, Chulani.** *Muslim Family Law in Sri Lanka: Theory, Practice and Issues of Concern to Women.* (MWRAF/ WLUML: 1999)

**Marikar, J.H.** *Khula Divorce in the Muslim Law,* (1978) 4 Colombo Law Review page 105.

**Marsoof, Saleem**. *Custody of Children in the Muslim Law of Sri Lanka,* 1979 *Meezan.*

*Marriage Laws of the Muslims in Sri Lanka,* 1980 *Meezan.*

*Polygamy: Is Judicial Control Desirable?* 1983 *Meezan.*

*Status of Muslim Women in Sri Lanka : Suggestions for Reform.* Challenge for Change - Profile of a Community (MWRAF 1990) 163.

*Fallacies of Muslim Law,* (1996-1997) *Meezan* 63.

*The Abeysundere Decision: An Islamic Perspective.* (1998-1999) *Meezan* 59.

**Report of the Muslim Law Research Committee on amendments to the Muslim Marriage and Divorce Act,** (1978) 4 Colombo Law Review 57.

**Report of the Committee Appointed by the Minister of State for Muslim Religious and Cultural Affairs to recommend on Amendments to the Muslim Marriage and Divorce Act.** (unpublished).

**Yehiya, Mohamed.** *The Quran as a Source of Law,* (1960-1961) Ceylon Law College Review 10 1-102.

**Zarook, A.R.M.** *Polygamy Qualified, Concubinage Clarified.*

*Divorce in Muslim Law* (1991).

இணைப்பு-I

# இலங்கையின் காதிநீதிமன்ற முறைமையும் அதன் செயற்பாடும் தொடர்பிலான வினாக்கொத்து

**A) தனிப்பட்ட தகவல்கள்**

1. காதிநீதவானின் பெயர்.
2. நீதிமன்றப் பிரிவு.
3. காதிநீதவானாக நியமனம் பெற்ற முதற் திகதி.
4. தகமைகள்.
   a) கல்வி (பொது)
   b) கல்வி (மதம் சார்பானது)
   c) கல்வி (அரபு)
   d) கல்வி (தொழில்சார்)
5. காதிநீதவான் என்ற ரீதியில் பெறும் ஊதியமும் செலவுப் பணமும்.
   I. அரச சார்பற்ற மூலங்களிலிருந்து,
      a) பிரிவு 59இன் கீழ் அறவிடப்படும் தொகை
      b) ஏனைய வருமானம்
   II. அரச மூலங்களிலிருந்து,
      a) தனிப்பட்ட ரீதியில் பெறப்படும் பணம் (ஒரு வருடத்திற்கு)
      b) ஏனைய் வருமானம் (ஒரு வருடத்திற்கு)
6. காதிநீதவானாகக் கடமை புரியும் போது ஏற்படும் செலவுகள் - ஒரு வருடத்திற்கு,
   a) போக்குவரத்து
   b) இலிகிதர் செலவு
   c) காகிதாதிகள், பதிவு, சுட்டெண் புத்தகங்கள்
   d) ஏனையவை (குறிப்பிடுக)
7. a) இவ்வருமானம், செலவுகளைச் சமாளிப்பதற்குப் போதுமானதாக உள்ளதா? ஆம் / இல்லை
   b) இல்லையெனில் வருடம் தோறும் பற்றாக்குறை ஏற்படும் தொகை எவ்வளவு?

8. a) ஏனைய தனியார் மூலங்களிலிருந்து வருடம் தோறும் காதி நீதவான்கள் பெறும் வருமானம் எவ்வளவு?

   b தங்களது செயற்பாட்டிற்குத் தங்களது தனிப்பட்ட பணத்திலிருந்து பயன்படுத்துகின்றீர்களா? ஆம்/இல்லை

   c) ஆம் எனில் எவ்வளவு தொகை?

9. நீதிமன்றச் செயற்பாடுகள் நடைபெறும் இடங்கள்.

   a) நீதிமன்றம்

   b) காதிநீதவானின் வசிப்பிடம்

   c) ஏனையவை(குறிப்பிடுக).

10. a) பதிவுகள், பதிவுப் புத்தகங்கள் போன்றவற்றை, மாவட்டப் பதிவாளரிடமிருந்து இலவசமாகப் பெறுவதில் சிக்கல்கள் ஏதேனம் உண்டா? ஆம்/இல்லை

   b) 'ஆம்' எனில் நீங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை அட்டவணைப்படுத்துங்கள்.

11. காதிநீதவான்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுள்ள வசதிகளில் ஏதேனும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமாயின் அதற்கான தங்களது சிபார்சுகள் யாவை?

**B) புள்ளி விபரம்**

1990,1991,1992,1993,1994 ஆகிய வருடங்களுக்கான பதிவுகளில் இருந்து கீழ்க்குறிப்பிடப்பட்டவற்றிற்கான விபரங்களைத் தயவு செய்து தரவும். திட்டவட்டமான எண்ணிக்கை தெரியாவிடின், அண்ணளவான எண்ணிக்கையைக் குறிப்பிடவும். தரவுகளின் எண்ணிக்கையை அண்ணளவாகக் குறிப்பிடும் போது, அடைப்புக் குறிக்குள் (Approx) எனக் குறிப்பிடவும்.

1. a) 12 வயதுக்குட்பட்ட பெண்பிள்ளைகளின் திருமணத்திற்கான அனுமதி கோரி வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை.

   b) அவ்வாறான விண்ணப்பங்களில் அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.

2. a) நியாயமான முறையில் சம்மதத்தைத் தெரிவிக்க மறுத்த வலிமாருக்கெதிராகச் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை.

   b) அவற்றில் காதிநீதவானினால் திருமணத்திற்கு அனுமதி வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.

3. a) வலியை நியமிக்கக் கோரி வலியில்லாத பெண்களினால் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.

   b) அவற்றில் காதிநீவானினால் அனுமதி வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.

4. விவாகரத்து விண்ணப்பங்களின் எண்ணிக்கை,
   a) தலாக்
   b) பஸஹ்
   c) குலா
   d) முபாறத்

5. பதிவு செய்யப்பட்ட விவாகரத்துக்களின் எண்ணிக்கை,
   a) தலாக்
   b) பஸஹ்
   c) குலா
   d) முபாறத்

6. தீர்ப்பளிக்கப்பட்ட விவாகரத்து விண்ணப்பங்களின் எண்ணிக்கை,
   a) தலாக்
   b) பஸஹ்
   c) குலா
   d) முபாறத்

7. இன்னும் தீர்க்கப்படாத விவாகரத்து விண்ணப்பங்களின் எண்ணிக்கை,
   a) தலாக்
   b) பஸஹ்
   c) குலா
   d) முபாறத்

8. a) மனைவியினால் பராமரிப்புக்காகக் கோரப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை.

   b) பராமரிப்பு வழங்குமாறு தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.

9. a) மஹரைக் கோரி மனைவியினால் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.

   b) மஹர் வழங்குமாறு தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.

10. a) கைக்கூலி கோரிக் கணவனினால் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.

b) வழங்குமாறு தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.

11. a) கைக்கூலியை மீளப்பெறுவதற்குக் கோரி மனைவியினால் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.

b) வழங்குமாறு தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.

12. a) பிள்ளைகளினால் அல்லது அவர்கள் சார்பில் பராமரிப்புக் கோரி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.

b) வழங்குமாறு தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.

13 a) விவாகரத்துப் பெற்ற மனைவியினால் இத்தாப் பராமரிப்புக் கோரிச் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.

b) வழங்குமாறு தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.

14. a) மனைவியினால் அல்லது விவாகரத்துப் பெற்ற மனைவியினால் பிள்ளைப் பேறு காலச் செலவு கோரிச் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.

b) வழங்குமாறு தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.

15. a) திருமணத்தை வெற்றும் வெறிதுமாக்கக் கோரப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.

b) திருமணத்தை வெற்றும் வெறிதுமாக்கித் தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.

16. a) திருமணப் பிணக்குகளின் சமரசத்திற்காகச் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.

**C) திருமணப் பிணக்குகளுக்கான காரணங்கள்**

1. காதி நீதவான் என்ற வகையில், தங்களது அனுபவத்தின் மூலம், திருமண முறிவுகளுக்கான பிரதான காரணங்களாக நீங்கள் எவற்றைக் கருதுகின்றீர்கள்?

2. காதி நீதவான் என்ற வகையில் தங்களது அனுபவத்தின் மூலம், ஒரு திருமணப் பிணக்கின் சமரசத்திற்குத் தடையாக உள்ள காரணங்கள் எவையென நீங்கள் கருதுகின்றீர்கள்?

3. a) ஏற்கனவே திருமணம் செய்த ஒரு ஆண் இரண்டாம் அல்லது ஏனைய திருமணங்கள் செய்யும் போது காதி நீதவானின் அனுமதியைப் பெற வேண்டும் என்ற வகையில் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது பற்றிய தங்களின் கருத்து என்ன?

b) தங்களது கருத்திற்கான பிரதான காரணங்கள் எவை?

c) தங்களது விடை 3(a)யிற்குச் சாதகமாக இருந்தால், காதி நீதவானின் அனுமதியிலும் அல்லது மறுப்பிலும், எத்தகைய விடயங்கள் தங்கியிருக்க வேண்டுமென்று நீங்கள் கருது கின்றீர்கள்?

4. ஒரு கணவனினால் ஒரு பெண் நியாயமற்ற முறையில் விவாகரத்துச் செய்யப்படும் போது, அம்மனைவிக்கு அக்கணவனிடமிருந்து நட்டஈடு பெறும் உரிமை உண்டு என்ற திருத்தத்தைச் சட்டத்தில் கொண்டு வருவது பற்றிய தங்களின் கருத்து என்ன?

D) நடைமுறை

1. ஒரு விவாகரத்து வழக்கின் போது, பின்வரும் நிவாரணங்களைத் திறத்தவர், தனித்தனியான விண்ணப்பங்கள் இன்றி, ஒரே விண்ணப்பத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாமா?

   a) இத்தாப் பராமரிப்பு

   b) பிள்ளைகளின் பராமரிப்பு

   c) கைக்கூலி

   d) மஹர்

2. பின்வரும் முறைகளிலான விவாகரத்து விண்ணப்பங்களின் மீது தங்களது நீதிமன்றம் எத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுகின்றது?

   a) தலாக்

   b) பஸஹ்

   c) குலா

   d) முபாறத்

3. நீதித்துறையை மேலும் முன்னேற்றும் வகையிலான திருத்தங்கள் எதுவும் நடைமுறைச் சட்டத்தில் செய்யப்பட வேண்டும் என்று நீங்கள் கருதுவீர்களேயானால், அதற்கான தங்களது சிபார்சுகள் யாவை?

4. காதி நீதவான் என்ற வகையில் தங்களால் வழங்கப்படும் கட்டளையை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்கள் யாவை?

5. காதி நீதவானின் அந்தஸ்து மாஜிஸ்திரேட் நீதவானின் தரத்திற்கு உயர்த்தப்பட வேண்டும் என்பது தொடர்பில் தங்களது கருத்து என்ன?

6. தங்களது அத்தகைய கருத்துக்கான பிரதான காரணங்கள் யாவை?

7. a) பெண்கள் காதிநீதவான்களாக நியமிக்கப்பட முடியாது என்பது தொடர்பில் தங்களது கருத்து என்ன?

   b) தங்களது அத்தகைய கருத்துக்கான பிரதான காரணங்கள் யாவை?



008695